தமிழ் பேசும் மக்களின் தேசிய சஞ்சிகை

# இருக்கிறம்

ඉරුක්කිරම්

வார இதழ்


ஒரு பொல்லாப்புமில்லை

காத்திருப்பு 01 இருக்கை 10

06.06.2011

30/-

உண்மையின் பதிவு



## 154 பஸ்ஸில் 'குடிமக்களின்' மே தினம்



## புனர்வாழ்வு போராளிகளின் ஓவியக் கண்காட்சி



## வடக்கில் மிதிவெடி அகற்றும் பணியில் பெண்கள்

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இந்தியா ஐ.நா.வினூடாக உதவி

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் மக்களின் மீளக்குடியமர்விற்கான 4 மில்லியன் கூரைத் தகடுகளையும் 40 ஆயிரம் தொன் சீமெந்தினையும் ஐக்கிய நாடுகள் சபையினூடாக இந்தியா அரசு வழங்கியது.

ஆரம்பகட்ட விவசாய நடவடிக்கைகளுக்காக 3.2 மில்லியன் டொலர் பெறுமதியானவிவசாய உபகரணங்களை 95 ஆயிரம் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்து வட பிராந்தியப் போக்குவரத்திற்கென 75 பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளதோடு, 500 டிராக்டர்களும் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினூடாக வழங்கியுள்ளது.

இந்நிலையில் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையமொன்றை புத்தளத்தில் நிறுவியுள்ளதுடன் எதிர் காலத்தில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் இரு பயிற்சி நிலையங்கள் இந்திய அரசினால் ஏற்படுத்தப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டம் செய்த உயர்தர மாணவர்களை பழிவாங்கும் பாடசாலையின் ஆசிரியர் குழாம்

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் உயர்தர மாணவர்களை பழிவாங்கும் எண்ணத்துடன் அங்கு கடமையாற்றும் அதிபர் உட்பட ஆசிரியர்கள் அனைவரும் நடந்துகொள்வதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாடசாலையின் அதிபர் தகாத வார்த்தைகளால் மாணவர்களை ஏசுவதாகவும் உடனடியாக அதிபரை மாற்றவேண்டும் எனவும் கோரிக்கையினை முன்வைத்து பாடசாலையின் உயர்தர மாணவர்கள் கடந்த சில தினங்களுக்குமுன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். இதன் எதிரொலியாகவே இவர்கள் இப்படி நடந்து கொள்வதாக குறித்த பாடசாலையின் உயர்தர மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்தசில தினங்களுக்குமுன் இப்பாடசாலையின் உயர்தர மாணவர் ஒருவர் நேரத்திற்கு பாடசாலைக்கு வரவில்லை என்று காரணம் காட்டி அவரை ஆசிரியர் ஒருவர் பிரம்பால் தாக்கியுள்ளதோடு ஒரு மணி நேரம் அவரை வெயிலில் நிற்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

இதனால் குறித்த அந்த மாணவன் மன உளைச்சலுக்கு ஆளானதாக அவருடைய பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

## 2004/2006ஆம் கல்வியாண்டுக்கான பட்டமளிப்பு விழா நடைபெறவில்லை

தேசிய கல்வி நிறுவகத்தில் கடந்த 2004/2006ஆம் கல்வி ஆண்டுக்கான பட்டப்படிப்பினை மேற்கொண்ட மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா இதுவரை நடைபெறவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் அனைவரும் பட்டதாரிகளாக இருக்கவேண்டும் என்கின்ற ஒரு திட்டத்திற்கு அமைவாக இலங்கை பல்கலைக்கழக அந்தஸ்துப் பெற்றுள்ள தேசிய கல்வி நிறுவகம் கடந்த பல ஆண்டுகளாக இவ்வாறான பயிற்சிகளை வழங்கி பட்டமளிப்பு விழாவினையும் நடாத்திவருகிறது.

இந்நிலையில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் பாடநெறியினை முடித்துக்கொண்ட ஆசிரிய மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா இதுவரை நடைபெறாமையானது கவலையளிப்பதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

## 331214 பேர் வாக்காளர் பட்டியலிருந்து நீக்கம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் இருந்து 3 இலட்சத்து 31 ஆயிரத்து 214 பேரினது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்களை யாழ்ப்பாண மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி வெளியிட்டார்

## குடியேறிய மக்களுக்கான இருப்பிடங்கள் அமைப்பதில் காணியில்லாப் பிரச்சினை

வலிபுரம் வடக்கு, கீரிமலை, கூவில் பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள மக்கள் தங்களுக்கானவாழிடங்களைஅமைத்துக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 21 வருடங்களுக்கு முன் சிறிய குடும்பங்களாக இடம்பெயர்ந்த இம் மக்கள் தற்போது பல குடும்பங்களாக விரிவடைந்த நிலையிலேயே மீளக்குடியமர வந்துள்ளனர். இடம்பெயர்ந்தபோது சிறியவர்களாக இருந்த பலர் தற்போது திருமணம் முடித்து தனிக்குடும்பங்களாக மாறியுள்ளனர்.

இவர்களுக்கென தனியான வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு காணி இல்லாமையே தற்போதைய பிரச்சினையாக உள்ளது.

அரசாங்கம் ஏற்கனவே காணி உறுதிகள் உள்ளவர்களுக்கு மட்டுமே மீளக்குடியமர அனுமதியுண்டு, என அறிவித்துள்ளது. இதனால் தங்கள் குடும்பங்களுக்கென்று ஒரேயொரு காணியை மட்டுமே விட்டுச்சென்ற பல குடும்பங்களின் பிள்ளைகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வாழிடங்களை அமைத்துக் கொள்வதற்குகாணிகள்விற்பனைக்குஇருந்தாலும் அதனை பெற்றுக்கொள்வதற்கு தங்களிடம் பணவசதியில்லையென இம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## மிதிவெடியகற்றுவதில் பொதுமக்கள் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிப்பு

### தமது சொந்த இடங்கள் பறிபோய்விடுமென அச்சம்

தென்மராட்சி கிழக்கு, எழுதுமட்டுவாள் மற்றும் மிருசுவில் தெற்கு போன்ற பிரதேசங்களில் மீளக்குடியேறியுள்ள மக்கள் தாங்கள்தங்கியுள்ளதற்காலிக வீடுகளுக்கு அருகில் மிதிவெடிகள் உட்பட வெடிக்காத வெடிபொருட்கள் இருப்பதை உணர்ந்தும் அதனையாருக்கும் அறிவிக்காமல் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மிதிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் அமைப்புக்களிடம் இம்மக்கள் இதனை தெரிவித்தாலும், பிதேசத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரிடம் இது தொடர்பில் எதுவும் தெரிவிக்க மறுப்பு தெரிவிக்கின்றனர்.

இதனைக் காரணம்காட்டி தங்களை தமது சொந்த இடங்களிலிருந்து அப்புறப் படுத்திவிடுவார்கள் என்ற பயமே காரணமெனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்தசில தினங்களுக்கு முன் குடியிருப்பு ஒன்றின் அருகிலிருந்து மிதிவெடியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதேவேளை, 'செல்' போன்ற வெடிக்காத வெடிபொருட்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிலச் சமப்படுத்தல் நடவடிக்கையால் மீள்குடியேற்ற வீடுகள் பாதிப்பு

தெல்லிப்பளை, வித்தகப்புரம் பிரதேசத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன் மீளக்குடியமர அனுமதியளிக்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ள வீடுகள் அப்பிரதேசத்தில் நடைபெறும் நிலச் சமப்படுத்தல் நடவடிக்கையால் பெரிதும் சேதமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் உயர் பாதுகாப்பு வலையமாக இருந்த இப்பிரதேசத்தில் அமைந்திருந்த வீடுகள் பெரிதாக பாதிக்கப்பட்டிருக்கவில்லை

ஆனாலும் தற்போது நிலச் சமப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் 'பெக்கோ' இயந்திரங்களின் முறையற்ற பாவனையே இவ்வீடுகள் சேதமடையக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தாங்கள் இப்பிரதேசத்தில் மீள்குடியேறுவதை விரும்பாத அரசாங்கமே திட்டமிட்ட வகையில் தங்களது வீடுகளை சேதமடையச் செய்வதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இருப்பு



சு'மைக்'கு மேல் சுமை!

## இராணுவப் பயிற்சியாக மாறிவருகின்ற பல்கலைக்கழக தலைமைத்துவப் பயிற்சி

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் வழங்கப்பட்டு வரும் தலைமைத்துவப் பயிற்சி படிப்படியாக கடுமையாக்கப்பட்டு இராணுவ பயிற்சியாக மாற்றமடைவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் எம்பிலிப்பிட்டி துன்கம இராணுவ முகாமில் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களில் சிலர் பயிற்சியின் தீவிரத் தன்மையால் தப்பிச்செல்ல தீர்மானித்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஆரம்பத்தில் தலைமைத்துவப் பயிற்சி இலகுவாக இருந்ததாகவும் தற்போது இது கடுமையான இராணுவ பயிற்சியாக பரிணமித்துள்ளதாகவும் மாணவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்குறித்த முகாமிலுள்ள மாணவர்களில் 16 பேர் கடந்த வார இறுதிப் பகுதியில் தமக்கு வழங்கப்பட்ட உணவு விசமானதால் பாதிப்புக்குள்ளாயினர். இவர்களில் 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




# வடக்கு நிலங்களில் மிதிவெடியகற்றும் பணியில் பெண்கள்

மிதிவெடி செயற்றிட்டங்கள் பற்றி நாம் ஏற்கெனவே பல முறை எமது சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளோம். இன்றும் வடக்கு கிழக்கு மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பது மிதிவெடி பற்றிய அபாயமே. இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறவும் அவர்கள் அங்கு பாதுகாப்பாக வாழவும் இப்பணியில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். போரின் போது படையினரால் அமைக்கப்பட்ட முன்னணி காவலரண் பகுதிகளில் பெருமளவான மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன. அவற்றை முழுமையாக அகற்றுவதென்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. தற்போது இந்த மிதிவெடி அகற்றும் செயற்றிட்டத்தில் பெண்களும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்

2004, 2005 போர் நிறுத்த காலப் பகுதிகளிலேயே மிதிவெடி அகற்றும் பணிக்கு பெண்களின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது. மக்களின் பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு





பாதைகள், விளை நிலங்கள் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கி மிதிவெடி அகற்றும் பணிகள் நடைபெறுகின்றன. யுத்தம் முடிவடைந்த இக்காலப்பகுதியிலும் மிதிவெடி அகற்றும் பணிக்காக பல பெண்கள் முன்வந்துள்ளனர். இன்று மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் யாழ்ப்பாண பகுதிகளில் பெண்கள் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையின் வடக்கில் வாழ்கின்ற தமிழ்ப் பெண்களைக் கொண்ட குழுவொன்று யுத்தத்தின் முன்னரங்குகளாக இருந்த இடங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளையும் வெடிக்காத யுத்த ஆயுதங்களையும் அகற்றும் ஆபத்தான பணியில் ஈடுபட்டுள்ளமையை கிளிநொச்சிக்கு சென்றிருந்த வேளை காணக்கிடைத்தது. எவ்வித பயமும் இன்றி ஒரே மாதிரியான ஆடைகளை அணிந்த வண்ணம் தலைக்கவசத்துடன் தம் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். அவர்களது செயற்பாடுகளை கண்ணுற்ற போது அவர்களுடன் கதைக்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. இரும்புக்கம்பிகளால் ஆன விளக்குமாற்றால் மதிவெடிகள் இருக்கின்றனவா என பார்த்துக்கொண்டிருந்த தவராசா சிறிதேவியிடம் சென்று கதைத்தோம்.

'நாங்கள் ஆண்களோடு இந்த மிதிவெடி அகற்றும் வேலைகளை செய்யும் போது அவங்களும் எங்களுக்கு உதவி செய்வாங்க. எங்களாலும் இதனைச் செய்யமுடியும் என்று ஊக்கம் தந்தவர்களும் அவர்கள்தான். இதை துப்பரவு படுத்துவதுதான் எங்களுக்கு கொஞ்சம் கஷ்டம். மற்றபடி எங்களுக்கு பிரச்சினை எதுவுமே இல்லை' என்றார் தன் வேலையை தொடர்ந்தவாறு.

இலங்கையின் வடக்கில் மிதிவெடி அகற்றும் பத்து முகவர் நிலையங்கள் செயற்படுகின்றன. இந்தக் குழுக்கள் ஆயிரக்கணக்கான சதுரக் கிலோமீற்றர் பரப்பளவிற்குள் காணப்பட்ட மிதிவெடிகளை வெற்றிகரமாக அகற்றியுள்ளன என்பதை 2011ஆம் ஆண்டின் அறிக்கை வெளிப்படுத்துகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, மாரவிலன்பற்று, வவுனியா, மயிலங்குளம் மற்றும் பட்டிக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக மிதிவெடி அகற்றும் பணியில் அரசு அதிக அவதானம் செலுத்திவருகிறது. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் வாழ்வாதாரத்தையும் அடிப்படை கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளவும் மிதிவெடி அகற்றும் குழுவின் பங்களிப்பு முக்கியம் பெறுகிறது.

பெண்கள் தமது குடும்பத்தின் கஷ்டங்களைப் போக்குவதற்காகவும் தமக்கான ஒரு தொழிலைச்



தவராசா சிறிதேவி | நவரத்தினம் புஸ்பகுமாரி

செய்யவேண்டும் என்பதற்காகவும் பாதுகாப்பற்ற மிதிவெடி அகற்றும் செயற்றிட்டத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதைக் காணக்கூடியதாக இருந்தது.



நேரடி ரிப்போர்ட்

பாதுகாப்புக் கவசங்களுடன் சுட்டெரிக்கும் வெயிலில் அவர்கள் சற்று இளைப்பாறி இளைப்பாறி தம் வேலையைத் தொடர்ந்த வண்ணமிருந்தனர். அத்தனை பேர் முகமும் எதையோ ஒன்றை வேண்டி நிற்கின்றது என்பதை மட்டும் தெளிவாகக் காணமுடிந்தது. மிதிவெடியினைக் கையில் எடுத்து அதனை எந்தவொரு பாதிப்பும் இல்லாத வகையில் மிகவும் கவனத்துடன் அதனைச் செயலிழக்கச் செய்த அப்பெண்களின் துணிச்சலைப் பார்த்து வியந்து போனேன்.

ஆண்களுக்கு நாம் எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதைப்போல பாரமான ஆயுதங்களை ஏந்திக்கொண்டு சென்ற மிதிவெடி அகற்றும் இக்குழுவின் தலைவி நவரத்தினம் புஸ்பகுமாரியுடன் உரையாடினோம்.

◀ த.சிந்துஜா ▶

'நாங்கள் கண்ணிவெடி அகற்றுவதன் நோக்கம் இங்குள்ள இடம்பெயர்ந்த மக்கள அந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தி அவங்களுக்கு இயல்பு வாழ்க்கையைத் தேடிக் கொடுப்பதுதான். மற்றது கட்டுமானப் பணிகள் பள்ளிக்கூடங்கள், ரோட்டு, சனம் வந்து குடியமர்ந்தால் அவங்களுக்குரிய தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் நாங்க இந்த வெடிபொருட்களை அகற்றுறம்' என்றார்.

தமது உழைப்பின் விளைவால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது கிராமங்களை நோக்கி வருவதைக் காண முடிகின்றமையே ஆபத்துக்கு மத்தியிலும் இப்பெண்கள் இப்பணியில் உற்சாகத்துடன் பணியாற்றத் தூண்டும் காரணியாகும். மேலும் இவர்களில் அனேகமானவர்கள் நேரடியாக யுத்தப் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். மக்கள் தமது சொந்தக் கிராமங்களில் வாழ அத்தகைய ஆபத்தான பணியைப் பொறுப்பேற்றுள்ள இப் பெண்களது அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கதாகும்.

தாம் பாதிக்கப்பட்டிருந்தாலும் இனிவரும் காலங்களில் யாரும் அவ்வாறு பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் இப்பெண்கள் தம்மை வருத்தி இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் அரசும் ஏனைய நிறுவனங்களும் இணைந்து இப்பணியைத் துரிதப்படுத்தி செய்து முடித்தால் மக்கள் எவ்வித பயமுமின்றி மீளக்குடியமர ஏதுவாக இருக்கும்.

## வாசகர்களே...!

**'இருக்கிறம்' பற்றிய உங்கள் காத்திரமான விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம். வேறெதிலும் பிரசுரமாகாத உங்களுடைய சொந்தப் படைப்புக்களை எங்களுக்கு எழுதி அனுப்பலாம். அனுப்பவேண்டிய முகவரி.**

**The Editor
'IRUKKIRAM'
# 03, Torington Avenue,
Colombo - 07**

E-mail : irukiram@gmail.com
Skype : irukkiram
Tel : 011 3150836
Fax : 011 2585190
Website: www.irukkiram.tk

30.05.2011
காத்திருப்பு 01 இருக்கை 10

## முடிந்ததைச் செய்வோம்

வணக்கம் என் உறவுகளே!

பயங்கரவாதத்தை தோற்கடித்தவர்கள் தமது அனுபங்களை சர்வதேசங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்களாம். உயர்ரக விடுதியில் உட்கார்ந்து கொண்டு தமது வீரப்பிரதாபங்களை ஆளுக்கு ஆள் புகழ்ந்து தள்ளியிருக்கிறார்கள்.

மனிதாபிமான யுத்தம் நடத்தியவர்களின் மனிதாபிமானம் இன்று உலகத்திற்கு நன்றாகவே தெரிந்து விட்டிருக்கிறது. முள்வேலிகளுக்குள் அடைக்கப்பட்டவர்களின் சாவும், மனநிலை பாதிக்கப்பட்டு நடைபிணமானவர்களின் வேதனைகளும் துண்டாக்கப்பட்ட அவயவங்களுடன் வாழும் எம் உறவுகளின் உணர்வுகளும்தான் இன்று அந்த யுத்தத்தைப் பற்றி பேசவைத்திருப்பதுடன் அதை வெற்றியும் கொள்ள வைத்திருக்கின்றன.

யுத்த அழிவின் இரண்டாவது வருட வெற்றியைக் கொண்டாடும் இவ்வேளையில் யுத்த நிலத்தில் குருதிசிந்த நிராயுத பாணிகளாய் பிடிக்கப்பட்ட எம் சகோதரர்களின் விதி எழுதாத கதையின் மறுபக்கம் சிறைகளுக்குள் அட்டகாசமாய் அரங்கேறிக் கொண்டிருப்பதை அறிவீர்களா?

இறுதி யுத்தத்தில் வன்னி நிலத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட 250க்கும் மேற்பட்ட பட்டதாரி இளைஞர்கள் வவுனியாவில் உள்ள தனிச் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் மீது தினம் தினம் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளும் சொல்லொணாத் துன்பங்களும் போதாது என்று ஏற்கனவே அங்கிருக்கின்ற சிங்களக் கைதிகளும் இவர்களைத் துன்புறுத்திவருகிறார்கள். இது மட்டுமன்றி இவர்களை உளவியல் ரீதியான கொடும் செயல்களுக்கும் உட்படுத்தி மனநிலையை பாதிக்கச்செய்திருக்கின்றனர். இதில் பெரும்பாலான பட்டதாரிகள் இறந்து விட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இவர்கள் மட்டுமன்றி நாட்டின் ஏனைய சிறைகளிலும் பல வருடங்களாக விசாரணைகளின்றி சின்னாபின்னப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்து வாழும் எம் சகோதரர்களின் கண்ணீர்க்கதைகள் நெஞ்சத்தை உறையச் செய்பவை. இன்று போர்க்குற்ற நடவடிக்கைகள் குறித்து சர்வதேச அளவில் ஆய்வுகளும் விசாரணைகளும் நடந்துவரும் நிலையில் இன்னுமின்னும் பழையவைகளை கிளறிக் கொண்டு தமிழர்களுடைய மனங்களை புண்படுத்தாமல் அவர்களுடைய எதிர்கால வாழ்வுக்குரிய நடவடிக்கைகளையும் பாரபட்சமற்ற அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ள முன்வர வேண்டியது அவசியமே.

யுத்த அழிவுகளிலிருந்து மீண்ட எமது நாடு சரியானதொரு தீர்வைப் பெற்றுத்தர முடியாமல் இரண்டும் கெட்டான் நிலையில் இன்று இருக்கின்றது. அரசியல் தலைமைகளோ தங்கள் சுயலாபங்களுக்காகவும் தங்கள் கட்சி நலனுக்காகவும் அதிகாரப்போட்டியில் ஆளையாள் முட்டிமோதி விழுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

மக்களோ அநாதைகளாக்கப்பட்டு கையறு நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தொடரும் தற்கொலைகளும் காணாமல் போதல்களும் கைதுகளும் சமூகத்தின் பல முகங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. வாழ வழியின்றியிருக்கும் எம்மக்களுக்கானதைச் சிந்திப்போம். அந்த சிந்தனை எங்களுடையதாகவேயிருக்கட்டும். சிறைகளில் வாடும் எம் உறவுகள் விடுதலைபெற்று வெளியுலகிற்கு சுதந்திரமாக வரவேண்டும். முடிந்ததைச் செய்வோம். முடியாததை முயற்சிப்போம்.

மீண்டும் வன்னி மண்ணில் வசந்தம்வீச வேண்டுமென உங்களுடன் பிரார்த்திக்கும்...

ஆசிரியர்




# வாக்குமீறிய றட்கோ மிலாடிக்

அணி சேரா நாடுகள் அமைப்பு உருவாக்கத்தில் முக்கிய இடம் வகித்தவர்களில் ஒருவரும் இலங்கையுடன் நட்பாக இருந்து ஆலோசனை கூறியவரும் ஒரு காலத்தில் உலகத் தலைவர்கள் வரிசையில் முக்கிய இடம் பெற்றிருந்தவருமான மார்ஷல் டிட்டோ ஆட்சி செய்த நாடு யூகோஸ்லாவியா.

டிட்டோவின் மறைவுக்குப்பின் இன, மத ரீதியாகப் பிரிவினைகள் ஏற்பட்டு யூகோஸ்லாவியா, பொஸ்னியா, சேர்பியா, கொசோவா என்று பல துண்டுகளாகப் பிரிந்தன.

இந்தப் பிரிவினைப் போராட்டங்களில் பொஸ்னியா, சேர்பிய இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் றட்கோ மிலாடிக் மீதும் செரபெறனிக்கா என்ற இடத்தில் ஆண்கள் என எண்ணாயிரம் முஸ்லிம்களைப் படுகொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஐரோப்பாவில் தேடப்பட்டு வந்த கொடிய போர்க் குற்றவாளியான றட்கோ மிலாடிக் கடந்த பதினாறு வருடங்களாக அகப்படாமல் பல இடங்களிலும் ஓடித்தப்பிக் கொண்டிருந்தாராம். சராஜீவா முற்றுகையின் போது பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டனர் இதற்கு இவர்தான் படைத் தளபதி.

முன்னாள் சேர்பிய படைத்தளபதியான றட்கோ மிலாடிக் சேர்பியாவின் தலைநகரிலிருந்து வடக்கேயுள்ள கிராமம் ஒன்றில் அவரது உறவினர் ஒருவரின் பழைய வீட்டிலிருந்த அழுக்கு படிந்த அறையிலிருந்தபோது அதிகாலை ஐந்து மணியளவில் சேர்பிய இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யுத்த காலத்தில் சேர்பியாவின் அதிபராகவிருந்த றடோலன் கடறட்சிக் ஏற்கனவே ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். ஹேக்கிலுள்ள சர்வுதேச நீதிமன்றத்தின் ஆணைப்படியே முன்னாள் சேர்பிய படைத்தளபதி மிலாடிக் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவரும் விரைவில் ஹேக் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படுவார். கடும் நோயாளி என்பதை பொலிஸார் ஏற்கவில்லை!

இனப் படுகொலை உள்ளிட்ட பதினைந்து குற்றச்சாட்டுக்கள் மிலாடிக் மீது சுமத்தப்பட்டுள்ளன. இதை அவர் மறுத்துள்ளார். நான் கைதானால் என்னை நானே அழித்துக் கொள்வேன். என்று மிலாடிக் முன்பொரு தடவை கூறியிருந்தார். மிலாடிவி கைது செய்யப்பட்ட போது, தான் வைத்திருந்த இரண்டு கைத்துப்பாக்கிகளையும் கைது செய்த பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

மிலாடிக் பிடிபட்டு விட்டதால் இனி ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்பியாவுக்கு அங்கத்துவம் கிடைக்கும் என்று சேர்பிய அதிபர் போறிஸ்ரடிக் மகிழ்வுடன் தெரிவித்தார்.



முன்னாள் யூகோஸ்லாவிய அதிபர் சிலோபோடன் மிலசேவிக்கின் ஆதரவுடன் பொஸ்னியா, சேர்பிய படைகள் நாட்டின் பாதிக்கு மேற்பட்ட பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முஸ்லிம் குரோட் மக்களுக்கெதிராகத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 1995ஆம் ஆண்டில் டேய்ற்றன் உடன்பாட்டின் மூலம் 1995ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து சேர்பிய அதிபர் கரடிக் மிலவிக்கும், தளபதி றட்கோ மிலாடிக்கும் தலைமறைவாகினர். அதிபர் கரட்கோ 2008 ஜூலையில் கைதானார். தளபதி மிலாடிக் இப்பொழுது அகப்பட்டிருக்கிறார்.

இருக்கிறம்
ஒரு பொல்லாப்புமில்லை
வார இதழ்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்படுகிறது.
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk

ஆசிரியர் : அருளானந்தம் சஞ்ஜீத்
நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்
செய்தி ஆசிரியர்கள் : கலாவர்ஷ்னி கனகரட்ணம்
தவநாதன் இரவிவர்மன்
நிருபர் குழு : தர்மராசா சிந்துஜா
கந்தலிங்கம் மாலா
சண்முகநாதன் பார்த்தீபன்
கார்ட்டூன் : சஞ்ஜீத்
புகைப்படம் : யாத்ரா
தமிழியன்
பக்க வடிவமைப்பு : ஏ.ஜே.எம். பிறவ்ஸ்

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.

மிஸ்டர் க்றோ

# ‘சர்க்கரைக் கட்டிகளும் குரங்குகளும்’

முன்பெல்லாம் மலேசியாவில் குரங்குகளைப் பிடிப்பதற்காக ஒரு யுக்தியை அங்குள்ள விவசாயிகள் கைக்கொண்டு வந்திருந்தனர். தங்களுடைய தோட்டத்திலுள்ள ஒவ்வொரு மரத்தின் அடிப்பகுதியில் ஒரு தேங்காய்ச்சிரட்டையை உறுதியாகக் கட்டி விடுவர். அச்சிரட்டைக்குள் குரங்குகளுக்கு மிகப் பிடித்தமான சர்க்கரைக்கட்டி ஒரு சிறிய துண்டு இடப்பட்டிருக்கும். சிரட்டையின் வாய் மூடிக் கட்டப்பட்டு அதன் நடுவில் ஒரு துவாரத்தைச் செய்வர். இந்தத் துவாரத்தினூடாக ஒரு சராசரிக் குரங்கு வெறுங்கையை நுழைக்கலாம், ஆனால் சர்க்கரைக்கட்டியைப் பற்றிய தனது கையை வெளியே எடுக்க முடியாது. அடுத்த நாள் விவசாயிகள் ஆறுதலாக தோட்டத்துக்கு வருவார்கள். எல்லாக் குரங்குகளும் சிரட்டைக்குள் கையை விட்ட வண்ணம் அகப்பட்டுப் போய் நின்றுகொண்டிருக்கும். அவை சர்க்கரைக்கட்டியை விட்டால் லேசாக கையை வெளியில் எடுத்துத் தப்பி விடலாம். அப்படிச் செய்வதில்லை. தாம் பிடிபடும்வரை சர்க்கரைக்கட்டியை விடமாட்டா. ஆங்காங்கே நின்று கொண்டிருக்கும் இந்தக் குரங்குகளை அப்படியே அள்ளிக் கொண்டு போவார்கள்.

எங்கும் அரசியல் அதிகாரமானது இந்தச் சர்க்கரைக்கட்டி போன்றுதான் தொழிற்படுகின்றது. அதைப் பற்றிக் கொண்டிருந்தால் நாட்டுக்கும் தமக்கும் அழிவு நிச்சயமே என்று நன்றாகத் தெரியும். சந்தர்ப்பமிருந்தாலும்கூட விடவே மாட்டார்கள். சர்க்கரைக் கட்டியைக் கைவிடுவதற்கு ஒரு தூர நோக்கின் முதிர்ச்சி உடைய அரசியல்வாதிகள் தேவை. அந்த வகை இனம்தான் எங்களுக்கு இல்லையென்று ஆகிவிட்டதே.

இப்பொழுது இந்தியா சற்றே, சற்றே தான், சர்க்கரைக்கட்டியைக் கைவிடும்படி இலங்கையைக் கேட்கிறது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டத்தினைச் செயற்படுத்தினால் இந்த யுத்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்புவதற்கு ஒரு வழி செய்யலாம் என்று சூசகமாகத் தெரிவித்திருக்கின்றது. அதன் அடிப்படையிலேயே இலங்கை இந்திய கூட்டு அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது. பௌத்த சிங்கள வருக்குத்தான் முழு அதிகாரமும் என்கின்ற சர்க்கரைக்கட்டி இருக்கும்போது அதனைக் கைவிடுவது என்ன லேசான காரியமா? யுத்தக் குற்ற விசாரணை வந்தாலும், அது ஆளும் குடும்பத்தினருக்கும் அதியுயர் இராணுவ அதிகாரிகளுக்கும் கழுத்துச் சுருக்காகப் போனாலும் கூட, அதிகாரத்தைக் கைவிட முடியுமா? எப்படியாவது, இப்பொழுது செய்தது போல ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வுகளைத் தள்ளிப் போடச் செய்தோ வேறு தகிடு தத்தங்கள் பண்ணியோ காலத்தைக் கடத்திவிட்டால் போதும். ஆனால், அதுவரை அதிகாரப் பரவலாக்கல் செய்ய எத்தனிக்கின்றோம் என்கின்ற பாசாங்காவது காட்ட வேண்டும். பின்னே இந்தியா கூறியபடி இப்போது தூக்கியிருக்கிறார்கள் 13வது திருத்தச் சட்டத்தினை.

உடனே சகலரதும் கவனம் மாகாண சபைகளுக்கான காணி, மற்றும் பொலிஸ் அதிகாரங்களின்மீது திரும்பியிருக்கின்றது. அவ்வதிகாரங்கள் சட்டத்திலிருந்தும் இதுவரை மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. தமிழ்தேசியக் கூட்டமைப்பும் ஜனாதிபதியுடனான தமது பேச்சுவார்த்தைகளில் இவ்விடயத்தைத் தொட்டிருக்கின்றது. ஆனால், 13ஆவது திருத்தச் சட்டமே பிரச்சினையாக இருக்கும்பொழுது, ஏதோ காணி பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்து விட்டால் மேலதிகமான அதிகாரங்கள் வடக்கு கிழக்கு மக்களுக்குக் கிடைத்துவிடும் என்ற தவறான அபிப்பிராயம் சகல தரப்பினராலும் கொடுக்கப் பட்டிருக்கின்றது. 13வது திருத்தச் சட்டம் எத்தகைய தமாசு என்பதை உணர்வதற்கு அதன் சில அம்சங்களை இங்கு தொட்டுக் காட்டுகின்றோம்.

இச்சட்டத்தின்படி, ஒவ்வொரு மாகாணத்திற்கும் நிறைவேற்று



அதிகாரம் கொண்ட ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். அவரைப் பதவி விலக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்குத்தான் உண்டு. ஆளுநரானவர் மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் குறித்து நிறைவேற்று அதிகாரம் பொருந்தியவர். இதனை நேரடியாகவோ மாகாணத்தின் அமைச்சரவை மூலமோ அல்லது மாகாண அரச அலுவலர்கள் மூலமோ அவர் பிரயோகிக்கலாம். இந்த அலுவலர்களின் மாற்றல்கள், அவர்களை வேலைக்கமர்த்தும் ஒப்பந்தங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எல்லாமே ஆளுநரின் அதிகாரத்திற்குட்பட்டது. ஆளுநர் ஆட்சி செய்வதற்கு ஆலோசனை தந்து உதவுவதே முதலமைச்சரினதும் அமைச்சரவையினதும் பிரதான கடமைகளாகும். ஆனால் இத்தகைய ஆலோசனைகளைப் புறக்கணிப்பதற்கு ஆளுநருக்கு உரிமையுண்டு. எந்த விடயங்களில் ஆலோசனை பெறப்படவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதும் ஆளுநரே. இதில் ஏதும் முரண்பாடுகள் ஏற்பட்டால் நீதிமன்றம் செல்ல மாகாணசபைக்கு உரிமை கிடையாது. அமைச்சர்களுக்கிடையே வேலைகளைப் பகிர்ந்தளிப்பதும் அவர்களை அழைத்து கட்டளைகள் பிறப்பிப்பதும் ஆளுநரே. அமைச்சரவையின் தீர்மானங்கள் சகலவற்றையும் ஆளுநருக்குத் தெரிவிப்பது முதலமைச்சராவர். இதன்படி ஆளுநர் தமது தீர்மானங்களை எடுப்பார். இவருடைய கட்டளைகளை மாகாணசபை மீறி நடக்குமாயின், சபையின் அதிகாரங்களை பாராளுமன்றம் வலிந்தெடுப்பதற்கும் அமைச்சரவையின் அதிகாரங்களை ஜனாதிபதி வலிந்தெடுப்பதற்கும் முடியும்.

இது இப்படியென்றால் இன்னும் கேளுங்கள். எந்த நிறுவனத்துக்கும் நிதிமூலம் மிக முக்கியமல்லவா? மாகாணங்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் யாவும் ஜனாதிபதியால் தீர்மானிக்கப் படும். ஜனாதிபதியானவர், மத்திய வங்கியின் ஆளுநர், நிதியமைச்சின் செயலாளர், மேலும் ஒவ்வொரு இனத்தின் பிரதிநிதிகளான மூவர், இவர்களடங்கிய ஒரு ஆணைக் குழுவினை நியமிப்பார். இந்த ஆணைக் குழு பரிசீலனை செய்து ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஒதுக்க வேண்டிய நிதிகள் பற்றி ஆலோசனை கூறும். இதை வைத்துக்கொண்டு ஜனாதிபதி ஒதுக்கீடுகளைத் தீர்மானிப்பார். ஆளுநரின் அனுமதியின்றி மாகாணசபைகள் வரி விதிப்பதோ, வரிகளை மாற்றியமைப்பதோ, வரி விலக்கு அளிப்பதோ கூடாது. மத்திய அரசாங்கம் ஒதுக்கிய நிதியாகத்தன்னும் இருந்தால்கூட, மாகாண ஒதுக்கீட்டிலிருந்து எந்தச் செலவையும் ஆளுநரின் அனுமதியின்றி மாகாணசபை செய்யமுடியாது.

மாகாணசபை மாகாணத்திலுள்ள நிதி நிறுவனங்களிலிருந்தோ, வெளியிலுள்ள நிதி நிறுவனங்களிலிருந்தோ கடன் எடுக்க முடியாது. பிணை நிற்க முடியாது. நேரடியாக எந்த வர்த்தகத்திலும், அதை ஒழுங்குபடுத்துதலிலோ ஈடுபடுதலிலோ கூடாது. மாகாண சபைகளின் கணக்கறிக்கைகளை கணக்காய்வு செய்யும் சகல அதிகாரங்களும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு நாயகத்திடமே உண்டு. பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் (Public Security Ordinance) கீழ் மாகாணசபைகளைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இயலும். இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஒன்றுமே எடுக்க முடியாது. இது எப்படி இருக்கு? இந்த ஓட்டைச் சட்டத்தைக்கூட கடந்த 25 வருடங்களாக எந்த அரசாங்கத்துக்கும் முழுமையாகச் செயற்படுத்த முடிய வில்லை.


சென்ற வாரம் ஜனாதிபதி முதலமைச்சர்களையும் ஆளுநர்களையும் கூட்டிய கூட்டம் நாம் சொன்னதற்கெல்லாம் உகந்த உதாரணமாயிற்று. சட்டத்தின்படி மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளை நிர்வகிப்பதற்கான நிதிகள் இதுவரை ஒதுக்கப்படவில்லை என்று முதலமைச்சர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். சபைகள் இதுவரை எடுத்து வந்த பிடி வரி வருமானங்களும் அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைகளின் பயனால் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறதாம்.

கல்வி, மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரம் என்றாலும் அதன் வளப்பகிர்வு எப்பொழுதுமே மத்திய அரசாங்கத்துக்கு சார்பாகவே செயற்பட்டிருக்கின்றது இன்னுமொரு தலையிடியாகத் தூக்கிவைக்கப்பட்டது. உதாரணமாக சமீபத்தில் 2.500 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வெளியேறியபோது அவர்களில் 2,000 பேர்கள் தேசிய பாடசாலைகளில் மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட, ஒரு 800 பேர்களே சகல மாகாணசபைகளின் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டிருக் கிறார்கள். மாகாண சபைகளின் அதிகாரத்தின் கீழ் சுமார் 8,000 பாடசாலைகள் இருக்கின்றன. தமக்கு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் இல்லையென கிழக்கு மாகாண முதலமைச்சர் குறைப்பட்டிருக்கிறார். இப்படியான சகல குறைபாடுகளையும் ஆராய்வதற்கு ஒரு ஆணைக்குழுவினை நியமிப்பதாக அக்கூட்டத்தில் ஜனாதிபதி உறுதி பூண்டிருக்கிறார்! இனி ஆணைக் குழு சந்திக்கின்றது, ஆணைக்குழு அறிக்கை எழுதுகின்றது என இவ்வாறாக இந்தியாவுக்குப் பராக்குக் காட்டித் திரியலாந்தானே.

காணி அதிகாரம் தாருங்கள், பொலிஸ் அதிகாரம் தாருங்கள் என்று அரசியல் கோரிக்கைகளை அறிக்கைகளாக முன்வைப்பதற்கு முன்னால், 13வது திருத்தச் சட்டத்தின் முழு விபரங்களும் சகல மக்களுக்கும் தெரியப்படுத்தப்படவேண்டும். அது முழுமையாக செயற்படுத்தப்பட்டாலும் எந்த விதத்திலும் அதிகாரப் பகிர்வு ஆகாது என்பது எல்லோராலும் தெளிவாக உணரப்படவேண்டும்.

மக்கள் மத்தியில் இதன் குறைபாடுகள் உணரப்படும் கணத்திலேயே அதன் தீர்வுக்கான சூழ்நிலை உருவாக்கப்படும். 1981ம் ஆண்டு பாழாய்ப்போன மாவட்ட அதிகார சபைகளை எப்படியாவது தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வாகக் காட்டிப் பிழைத்துக் கொள்ளலாம் என்று அப்போதைய கூட்டணி தேர்தலில் குதித்ததுபோல, இப்போது காணி அதிகாரங்களைப் பெற்று விட்டோம், வெட்டினோம், வீழ்த்தினோம் என்று மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் தமிழ்க் கட்சிகள் இறங்கக்கூடாது. இந்தியா பின்னால் நெட்டித் தள்ளினாலும்கூட.

# ‘எவருக்கும் எந்தப் பிரதேசமும் தாயகம் என்றில்லை’



◀ எஸ்.எம்.ஜி. ▶

தற்போதைய அரசாங்கம் ஆட்சியிலிருக்கும்வரை யுத்த வெற்றி விழா ஆண்டு தோறும் இலங்கை மக்களுக்குப் படைப்பலத்தை காட்டும் விழாவாகவும் பலியான படையினரின் குடும்பங்களுக்கு தமிழ் பயங்கரவாதிகளை அழித்த வீரவிழாவாகவும் நினைவூட்டி நாட்டில் வேறு எந்தப் பிரச்சினையுமில்லை என்று காட்ட முயன்று கொண்டேயிருக்கும் என்பதை இரண்டாவதாண்டு வெற்றி விழா புலப்படுத்தியிருக்கிறது.


யுத்தம் தொடங்குவதற்கு முன்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. சார்பான அமைப்புக்களின் அலுவலர்கள், செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் என பலர் அவர்களின் பாதுகாப்புக்கென காரணம் காட்டி வெளியேற்றப்பட்டனர் அல்லது முடக்கப் பட்டனர்.

யுத்தம் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளுக்குள் வெளிநாட்டு உள்நாட்டு ஊடகவியலாளர்கள் எவரும் நுழைவதற்கு இடமிருக்கவில்லை. யுத்தம் நடந்தபகுதிகளில்மக்களின்நிலைமைபற்றிஎவரும் அறிந்து கொள்வதற்கு வழியிருக்கவில்லை. எறிகணை வீச்சு, குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு என தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் வைத்தியசாலை மீதும் குண்டு வீசப்பட்டதாகவும் இதில் மாண்டவர்கள் பற்றியும் யுத்தம் நடந்த பகுதியில் உயிராபத்தான சூழலிலும் எறிகணை வீச்சிலும் குண்டு வீச்சிலும் காயப்பட்டவர்களுக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் சிகிச்சையளித்த இரண்டு மூன்று டொக்டர்களுடன் தொடர்பு கொண்டு லண்டன் பி.பி.சி. செய்தியாளர் ஒலிபரப்பிய செய்திகள்தான் வெளி உலகுக்குக் கிடைத்த செய்திகளாகும்.

யுத்தக்களப்பகுதியில் விசுவமடு, சுதந்திரபுரம் போன்ற இடங்களைத் தினமும் குறிப்பிட்டு அல்லது தினம் இரண்டு மூன்று தடவைகள் அந்த இடங்கள் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாக வானொலிகளில் அறிவிப்புக்கள் வெளிவந்தன. இப்படி அறிவிக்கப்பட்ட பாதுகாப்பான பகுதிகளில் தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காக மக்கள் தங்கள் குழந்தை குஞ்சுகளையும் இழுத்துக்கொண்டு ஓடுவார்கள். பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் போய்ச் சேரும்போது தொடரும் எறிகணை வீச்சுக்க ளுக்குள் சிக்கி மாண்டவர்கள் பலர், இதில் தந்தையை இழந்தவர்கள், தாயை இழந்தவர்கள், கை கால்களை இழந்தவர்கள் மற்றும் பலர்.

இவற்றிலிருந்து உயிர் தப்பி படையினரிடம் சரண டைந்தவர்கள்தான் பின்னர் விசாரணைகளில் பிரிக்கப்பட்டு பூசா முகாமிலும் சிறைச்சாலைகளிலும் இன்னமும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இச்சிறைச் சாலைகளில் சந்தேகத்தின் பேரில் சில வருடங்களுக்கு முன்னரே அடைக்கப்பட்டவர்களைப் பார்த்து இவர்கள் சிறிது ஆறுதல் பட்டதுமுண்டு. பாதுகாப்பு வலயங்களிலும் உயிர்தப்பிப் பிழைத்தவர்கள்தான் பின்னர் முட்கம்பி வேலிகளுக்குள் அமைந்திருந்த முகாம்களுக்குள் போய்ப் பாதுகாக்கப்பட்டு தொடர்ந்து அழுத்தங்கள் காரணமாக பல்வேறு முகாம்கள் வழியாக சொந்த இடங்களுக்குப் போய்ச் சேர்ந்தனர். இன்னமும் சொந்த இடங்களுக்குப் போய்ச் சேராமல் உறவினர்கள் நண்பர்களின் வீடுகளில் தங்கியிருப்போர் ஆயிரக்கணக்கில் உள்ளனர். சொந்த இடங்களில் மீள் குடியேறியுள்ளோர் இடிந்த வீடுகளுக்கு வெளியே தறப்பாளின் கீழேயே வாழ்கின்றனர்.

மீள்குடியேற்றப்படாதவர்கள் பற்றியும் ஐ.நா. அறிக்கையொன்றே தகவல் வெளியிட்டிருக்கிறது. போர்க்காலத்தில் போர் நிறுத்தம் செய்வதற்கு உலக நாடுகளிடம் மட்டுமல்ல உலக அரங்கான ஐநாவிடமும் அயல்நாடான இந்தியாவிடமும் தமிழ் சமூகம் கோரி நின்றது. அச்சமயம் ஐ.நா. செயலாளர் நாயகம் செயல்படாமல் மௌனம் சாதித்தார். தமிழ் சமூகம் மட்டுமல்ல, உலகில் மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் அமைப்புக்களும் போர் நிறுத்துக்குக் குரல் கொடுத்தன. தமிழ் நாட்டின் முதல்வர் கருணாநிதி இந்திய மத்திய அரசின் மூலம் ஈழத்தில் தமிழ் இனம் அழிக்கப்படுவதை தடுத்துப் பாதுகாப்பார் என்றே உலகத் தமிழ் இனம் நம்பியிருந்தது.



கருணாநிதியின் நம்பிக்கைத் துரோ கத்துக்கு தமிழ் நாட்டு மக்கள் சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் நல்ல பாடம் புகட்டிவிட்டனர். கருணா நிதிக்கு மட்டுமல்ல டில்லியில் ஆட்சியிலிருக்கும் தேசிய காங்கிர ஸிற்கும் பதில் கொடுத்தனர். இந்தியா வின் யுத்தத்தையே இலங்கை நடத்தி யது என்றும் பெருமையாகப் பேசப் பட்டது. இப்பொழுது எல்லாம் முடிந்து ஈழத்தமிழினம் இனி என்ன என்று ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டி ருந்த நிலையில்தான் இலங்கையில் என்ன நடந்தது என்பதை உலகமே கேட்கத் தொடங்கி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அயல்நாடுகளிடமும் உலக நாடுகளிடமும் உதவி கேட்டுப் பெற்றுக் கொண்ட இலங்கை, உள்நாட்டு விசயங்களில் எவரும் தலையிடுவதற்கு உரிமை இல்லை என்று இன்று சொல் கிறது.

யுத்தம் முடிந்ததும் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று கூறிய ஆட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இப்பொழுது பிரிவினைவாதி கள் அல்லது இனவாதிகள் கோருவதை வழங்குவதற்கு நாங்கள் தயாரில்லை என்று வெற்றி விழாவில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார். ‘பயங்கரவாதிகள் ஒழிக்கப்பட்டுவிட்டனர். உலகில் வேறு எந்த நாடும் செய்யாத சாதனையை நாங்கள் செய்திருக்கிறோம்’ என்று கூறி வந்தவர் ஜனாதிபதி ராஜபக்ஷ. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்காக தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தத் தொடங்கி இதுவரை ஆறு தடவைகள் இரு தரப்பும் சந்தித்துப் பேசியும் இருக்கின்றனர். இந்நிலையில் பிரிவினைவாதிகள் அல்லது இனவாதிகள் கோருவதை வழங்குவதற்கு நாம் தயாரில்லை என்று வெற்றிவிழாவில் அறிவிக்கிறார்.

பிரிவினைவாதிகள் என்றும் இனவாதிகள் என்றும் நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள சகல சக்தியும் கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுகிறாரென்றால் மக்கள் எப்படிச் சிந்திப்பார்கள்?

பிரிவினைவாதிகள் என்றும் இனவாதிகள் என்றும் யாரைச் சொல்லுகிறார் ராஜபக்ஷ? ஜனாதி பதியின் இந்த அறிவித்தலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் சரியாகப் பதில் சொல்லியிருக்கிறார்.

யார் எதைச் சொல்லியும் எந்தப் பயனும் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இலங்கையில் மிக உயர்ந்த பதவியிலிருப்பவர்களும் அரசியல் வாதிகளாகத்தான் இருக்கிறார்களே தவிர இங்கு நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் அரசியல்ஞானி இதுவரை தோன்றவில்லை என்றே தோன்றுகிறது.

வில்மட் பெரேரா என்று ஒருவர் இருந்தார். அவர் நாட்டின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்துச் செயல்பட முனைந்தார். ஆனால் அவர் நீண்டகாலம் வாழவில்லை. அந்நியர் இலங்கையைக் காப்பாற்றுவதற்கு முன் இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் எப்படி வாழ்ந்தார்கள், வெள்ளைக்காரர்களிடமிருந்து நாடு விடுதலை பெறுவதற்கு முதலில் குரல் கொடுத்தது யார், சுதந்திரம் பெற்றபின் சிறுபான்மையினரான தமிழ்



பேசும் மக்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் என்ற பழைய வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டும்.

1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றதும் ஓராண்டிலேயே 1949ஆம் ஆண்டில் மலையகத்தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன.

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமையைப் பறிக்கும் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

சிங்களம் மட்டும் சட்டத்தினால் தமிழர்கள் அரச வேலைவாய்ப்பை இழந்தனர். சிங்களம் மட்டும் மசோதா 1956 ஜூன் மாதம் ஐந்தாம் திகதி நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக புத்தர், காந்தி வழியில் சாத்வீக முறையில் நாடாளுமன்றப்படிகளில் அமைதியாக உண்ணாவிரதமிருப்பதாக தமிழ்த் தலைவர்களும் தொண்டர்களும் சென்றனர். இச்சமயம் நாடாளுமன்றக் கட்டிடம் அமைந்த காலி முகத்திடலில் ஆளும் கட்சி யைச் சேர்ந்தவர் சிலரின் அனுசரணையுடன் திரண்ட காடையர்கள் பொல்லுகளாலும் கல்லாலும் தாக்குதல் நடாத்தித் தலைவர்களையும் தொண்டர்களையும் காயப்படுத்தி பயங்கரவாதத்தைத் தொடங்கி வைத்தனர். இதன் தொடர்ச்சி கல்லோயாவில்

(08 ஆம் பக்கம் பார்க்க...)



நேரடி ரிப்போர்ட்

# கொழும்பு நகரை அச்சுறுத்தும் நச்சு வாயுக்களின் வெளியேற்றம்

அஹமட் உசாமா

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஒன்றையொன்று முந்திக்கொண்டு செல்லும் இந்த காலத்தில் அழிவுக்கும் பஞ்சமில்லை என்றுதான் கூறவேண்டும். எந்த ஒரு நாடும் துரித அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே செயற்படுகின்றன. அதற்கு இலங்கை ஒன்றும் விதிவிலக்கல்ல.

யுத்தம் நிறைவடைந்த பின் அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும் இலங்கை அதிவேக நெடுஞ்சாலைகள், பாரிய கட்டிடங்கள், அடுக்கடுக்கான தொழிற்சாலைகள் என தன்னை விஸ்தரித்துக் கொண்டு செல்வதைக் காணலாம். நாட்டின் அபிவிருத்தி மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகுக்கலாம். ஆனால் மறுபுறத்தில் சுற்றாடல் மாசடைகின்ற அதேவேளை மக்களுடைய சுகாதாரமும் பாதிப்படையவே செய்கின்றது. சுத்தமான காற்றை சுவாசிக்க பணம் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் இன்று உலகில் ஏராளமானவர்கள் வாழ்கின்றனர். இவ்வாறு வளிமாசடைந்த பகுதிகளில் ஒன்றாக கொழும்பும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது அபிவிருத்தி குறித்து தீவிரமாக சிந்திக்கின்ற எமது நாட்டிற்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகும்.

நாளாந்தம் நகரை நோக்கி வருகின்ற இலட்சக்கணக்கான வாகனங்களைக் கட்டுப்படுத்துவதே ஆசியாவின் பிரதான நகரங்கள் அனைத்தும் முகங்கொடுக்கின்ற முக்கியமான பிரச்சினையாகும். இந்த வாகனங்கள் வெளியிடுகின்ற நச்சுத் தன்மையுள்ள வாயுக்கள் சூழலை மாசுபடுத்துகின்றன. கொழும்பு நகரத்தில் 60 வீதமான வழிமாசடைதல் வாகனங்களில் இருந்து வெளியேறுகின்ற புகையினாலேதான் ஏற்படுகின்றது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் விஞ்ஞான மற்றும் சுற்றாடலுக்கான மத்திய நிலையம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின் புதிய தகவலின்படி கொழும்புநகரம் வளிமாசடைந்த நகராக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இது பாரிய பின்விளைவை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.



லலித் குணருவான்

இதுதொடர்பாகபொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் லலித் ஸ்ரீ குணருவான் அவர்களை நாம் தொடர்புகொண்டு கேட்டபோது 'வாகனங்கள் மெதுவாகச் செல்லுவதனால் அதிகமான எண்ணெய் விரயமாகின்றது. ஒரே அளவான தூரத்திற்கு அதிகளவான எண்ணெய் பயன்படுத்துகின்றோம். அதிக எண்ணெய் விரயமாவதால் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதிகளவு எண்ணெய் நாட்டுக்கு இறக்குமதி செய்யவேண்டும். இந்த வளங்களை குறிப்பிட்ட அளவைவிட அதிகமாகப் பயன்படுத்துவதென்பது அதனை வீணாக்குவதற்கே சமமாகும். இக்காரணிகள் பொருளாதாரத்தில் அதிகளவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இரண்டாவது, எண்ணெய் எரிவதனால் நச்சுப்புகை வளியுடன் கலந்து மக்கள் நோய்வாய்ப்பட்டு, சுகாதாரத்தை பாரியளவில் தாக்கத்திற்குள்ளாக்கிறது' என்று தெளிவுபடுத்தினார்.

உண்மையில் மனிதனின் தூரநோக்கற்ற செயற்பாடுகள்தான் பாரிய விளைவுகளுக்கு காரணமாகின்றன. வீதிக்கு வருகின்ற வாகனங்களின் தொகை அதிகரிக்கும்போது நச்சுப்புகைகள் வளிமண்டலத்துடன் கலக்கும் வீதம் அதிகரிக்கின்றது. அதேநேரம் தரம்குறைந்த டீசல், பெற்றோல் பாவனை வாகனங்களை முறையாகப் பராமரிக்காமை போன்ற விடயங்களும் தாக்கம் செலுத்துகின்றன. இவை அனைத்தையும் விட வாகன நெரிசல் மிகப் பிரதான காரணியாகும். இதற்காக தற்போது வாகனங்கள் வெளியேற்றுகின்ற புகைகளை முகாமைப்படுத்துவதற்கான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டியுள்ளன. மேலும் தரம் வாய்ந்த பொதுப்போக்குவரத்தின் முக்கியத்துவம் இன்று பலமாக உணரப்படுகின்றது.

இந்நிலையில், அதிகமான வாகனங்கள் நகரத்திற்கு வருவதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கையும் நச்சுப்புகையை வெளிவிடுகின்ற வாகனங்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளும் துரிதமாக தேவைப்படுகின்றன. வாகனங்களால் வளிமாசடைவதைக் குறைப்பதற்கான ஒரு சில நடவடிக்கைகள் கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய நகரங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வாகனப் புகையினைப் பரிசோதித்து தகுதியுள்ள வாகனங்களுக்கு மாத்திரமே வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கை 2008ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டது. அது எந்தளவு வெற்றியளித்தது என்பதுதான் சந்தேகம்.

இதற்கு தீர்வாக என்ன செய்யலாம் என்று போராசிரியர் லலித் குணருவானிடம் கேட்டபோது, 'வாகன நெரிசலுக்கு பெருந்தெருக்களால் விடை காண்பதை விட ஒரு வகையில் அது செலவு மிக்கது. அதைத் தாங்க முடியுமா என்று ஒரு பிரச்சினை இருக்கின்றது. அவ்வாறு செய்த பாதையில் மீண்டும் வாகனங்கள் அதிகரிக்கின்றது. இப்போது 'பேஸ் லைன்' பாதை புனரமைக்கப்பட்டுள்ளது. 'வாகன நெருக்கடி குறைந்துள்ளதா? இல்லையே அந்தப் பாதையிலும் வாகன நெருக்கடி அதிகரித்துள்ளது. நெடுந்தெருக்கள் அமைப்பதன் ஊடாக வாகன நெருக்கடிக்கு தீர்வு தேடுவது என்பது கானல் நீருக்கு பின்னால் செல்வதற்கு சமனாகும். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமானால் வாகன நெருக்கடிக்கு நீண்ட காலத் தீர்வு ஒன்றை தேட வேண்டும். அத்தோடு அது சாதகமான தீர்வாக அமைய வேண்டும். குறிப்பாக நாங்கள் பொதுப் போக்குவரத்து சேவையை அதிகரிக்க வேண்டும்' என்று தெரிவித்தார்.



இன்றுரூஸ்ரொக்வாகனங்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. ஈயமற்ற ஒக்டேன் மாத்திரம் கொண்டுள்ள பெற்றோலும், யூரோப் 4 தரம் கொண்ட டீசலும் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன. எனினும் தற்போது இலங்கையில் பயன்படுத்துகின்ற யூரோ வான் யூரோ 2 (ரூ) எரிபொருட்கள் ஐரோப்பாவில் 20 வருடங்களுக்கு முன்னமே பயன்படுத்தப்பட்டுள்ளன. வாகன நெருக்கடியைக் குறைப்பதற்கு இன்று அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தாலும்அவை பிரச்சினைக்கானசிறந்த தீர்வுகளா என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது.

இன்று வளிமாசடைதல் இலங்கையின் மறைமுகமான சுகாதாரப்பிரச்சினைகளின் ஒன்றாக இனம் காணப்பட்டுள்ளது. நச்சு டீசல் புகையினால் சுகாதாரத்துறைக்கு வருடாந்தம் 17 தொடக்கம் 22 பில்லியன் ரூபாய் நட்டம் எற்பட்டு வருவதாக பேராசிரியர் லலித் குணருவான் கூறுகிறார். 'நாங்கள் அதிகமாக பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும் மக்கள் பிரயாணம் செய்வதற்கும் தனியார் துறையில் இருந்து பொதுத்துறைக்கு பிரவேசிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது தேசிய வளங்களை எதிர்காலத்தில் சிறந்த முறையில் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தேடவேண்டுமானால், தனியார் போக்குவரத்தின் மீதுள்ள மக்களின் ஆதரவைக் குறைத்து, பொதுப் போக்குவரத்தில் அதிகமாக ஆர்வம் காட்டுகின்ற கொள்கைகளை அமைக்கவேண்டும்'

கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள வாயுப்பரிசோதனை நிலையம் மற்றும் றிச்வே ஆரியா சிறுவர் வைத்தியசாலை அறிக்கைகளானது 1998 யூலை மாதம் தொடக்கம் அவசர சிகிச்சைக்காக ஆஸ்மா நோயினால் துன்பப்படுகின்ற 30,932 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறுகின்றது. இவர்களில் 95 வீதமானவர்கள் கொழும்பில் காணப்படும் நச்சுவாயுக்களை சுவாசித்ததால் நோய்வாய்ப்பட்டுள்ளனர். மேலும் 2005 ஆம் ஆண்டில் றிச்வே ஆரியா சிறுவர் வைத்தியசாலைக்கு ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற வந்த பிள்ளைகளில் 20 வீதமானவர்கள் கொழும்பு நகரின் நச்சுவாயுவை சுவாசித்ததன் ஊடாக பாதிக்கப்பட்டவர்கள் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வளி மாசடைதலானது சமூக பொருளாதார பிரச்சினைகளை விடவும் சுகாதார ரீதியினான ஆபத்துக்களை இளம் சந்ததியினர் எதிர்நோக்கக் காரணமாகியுள்ளதையே இவைகள் உணர்த்தி நிற்கின்றன. ஆகவே வாகனப் பாவனையை அதிகரிக்கின்ற பாலங்கள் மற்றும் பாதை விஸ்தரிப்புத் திட்டங்களை விடவும் தரமான பொதுப்போக்குவரத்துச் சேவையினை உருவாக்குவதன் மூலம் அதிகரித்துவரும் வாகனப் பாவனையைக் குறைப்பதற்கு அரசாங்கம் மற்றும் கொள்கை வகுப்பாளர்களும் அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அன்றேல் எதிர்காலத்தில் பாரிய சுகாதாரப் பின்னடைவை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

# அருகிவரும் கலைகள்



ஒன்றரை நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டுள்ள சமூகமாகக் காணப்படும் மலையகப்பெருந்தோட்டப்புறஇந்தியவம்சா வழித் தமிழர்களின் வாழ்க்கையானது பின் தங்கிய ஒன்றாக காணப்பட்டாலும் அவர்களின் அடையாளங்களாக காணப் படும் கலைகள் பாதுகாக்கப்பட்டே வந்தன. ஆனால், இன்றைய தலைமுறை இதனை தவறவிட்டிருக்கிறது.

மலையக தமிழ் மக்களின் அடையாளங்களான காமன் கூத்து கோலாட்டம், கும்மி, உருமி, உடுக்கை, கரகம், மற்றும் பொன்னர் சங்கர் கூத்து, முதலானவையும் பிறவும் தேடிக்கற்று அறிந்து கொள்ள வேண்டிய கலைகளாக சென்றுகொண்டிருக்கிறதே ஒழிய தினமும் பயின்று வரும் கலைகளாக இல்லை. இது வேதனைக்குறியதும், வெட்கப்பட வேண்டியதுமான ஒரு விடயம்.

அரசியல், சமூகம், கலை, கலாசார பண்பாட்டம்சங்களும் வாழ்வியல் அம்சங் களும் ஏனைய சமூகத்தோடு ஒப்பிடும் போது பின்னடைவைக் கண்டுள்ளதாக குறிப்பிடப்படும் சந்தர்ப்பத்தில் தடை களைத் தாண்டிக்கொண்டு முன்னேறிச் செல்லும் முனைப்பு மலையக சமூகத்திடம் இல்லை என்பதற்கில்லை. அதன் வேகம் தான் குறைவு.

இதற்குச் சான்றுதான் 'நாவலப்பிட்டி பிரதேசத்தில் சங்கீதம், நடனம் மற்றும் கலைத்துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை ஒன்றாக இணைத்து நடாத்தப்பட்ட இசை, நடன விழா. இந்நிகழ்வு மலையக ஆசிரியர் களின்திறமைகளுக்குஒருகளம்தந்ததோடு ஏனைய சமூகத்தோடு இவர்கள் சளைத்த வர்கள்அல்லர்என்பதைநிரூபித்துவிட்டது' என்ற பாராட்டுப்பத்திரம் மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் பீ.எஸ். சதீஸிடமிருந்து கிடைத்தது.

நாவலப்பிட்டியில் முதன் முறையாக இடம்பெற்ற இசை, நடன விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

முன்னேறிச்செல்வோர் ஒரு புறம் இருக்க மாற்றங்களை உள்வாங்கும் மனப்பாங்குஇல்லாதவர்கள்பெரும்பாலும் தொய்வைக்கண்டு நிற்கும் வாழ்வையே வரவேற்பவர்களாக காணப்படுவதால் முன்னேற்றமின்றி பின்தங்கியிருப்பதாக மலையகம் பேசப்படுகிறது.

குறிப்பாக கலைகளைப் பொறுத்த மட்டில் மலையக மண்ணை மணக்கச் செய்யும் பாரம்பரிய கலைகள் மறைந்து போய்க் கொண்டிருக்க சாகித்ய விழாக் களிலும், நூதனசாலைகளிலும் கட்டாயப் படுத்திகவனப்படுத்தவேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது நம் கலைகள்.

மாகாண கல்வித் திணைக்களங்களி னாலோ சட்டம் போட்டு கட்டுக்கோப்புக்குள் அமைந்த கலைப் போட்டிகளிலும் விழாக்களிலும் சினிமாப்பாடல்களும் சினிமா அம்சங்களும் தவிர்க்கப்படுகிறதே ஒழிய ஏனைய அனைத்து கலை நிகழ்ச்சி களிலும் போட்டிகளிலும் சினிமா புகுந்து விளையாடிக்கொண்டிருக்கிறது.

**◀ மருதமுத்து நவநீதன் ▶**

தற்போது பாடசாலை கலை விழாக் களிலும்கூட பெரும்பாலும் சினிமாப் பாடல்களை ஒலிக்கவிடுவதும் நடனமா டுவதும் என சென்றுகொண்டிருக்கின்றது. இந்த நிலை சொந்தப் படைப்புக்கள் அருகிப்போய்க் கொண்டிருக்க காரணமா கின்றது.

வாத்திய இசைக்கருவிகளை இசைப் பது, சொந்தப்பாடல்களை உருவாக்குவது, கர்நாடக பாடல்களை அரங்கேற்றுவது, கவியாக்கம், சிறுகதையாக்கம், மேடை நாடகம், தனிநடிப்பு போன்ற சொந்த ஆக்கங்களுக்கு பஞ்சம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாவலப் பிட்டியில் ஒரு நல்ல விடயம் அரங்கேறியது பாராட்டத்தக்கது


உண்மையில் தனித்துவமிக்க நல்ல பல கலைகள் மலையகத்தில் காணப்ப டுகின்றன. அதனை பயின்று பாதுகாக்க வேண்டியது அனைத்து மலையக மக்க ளினதும் கடமையாகும்.

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## 'எவருக்கும்...

தமிழ் மக்களுக்கெதிராக சிங்களக் குடியேற்றவாசிகள் பயங்கரவாதத்தாக்குதல் நடத்தி கல்லோயா அபிவிருத்தி சபைத் தலைவரையும் ஊழியர்களையும் செயல்படவிடாமல் தடுத்தனர். கல்லோயாத் திட்டத்தில் குடியேறியிருந்த தமிழர்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப் பட்டு விரட்டியடிக்கப்பட்டனர்.

1958ஆம் ஆண்டு மே மாத இறுதியில் பொலநறுவை ரயில் நிலையத்தில் தொடக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலகம் நாடு முழுவதிலும் பரவி தமிழ் மக்கள்



சிலர் உயிரைப்பலி கொடுத்ததுடன் உழைத்துத் தேடிய உடைமைகள் யாவும் இழந்து அகதிகளாயினர். தமிழ் மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொழும்பு தமிழ்ப் பிரமுகர்கள் எடுத்த முயற்சியால் அகதிகளான தமிழர்கள் பாதுகாக்கப்பட்டு அவர்களுடைய தாயகமான வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு கப்பல்களில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.


இதே போல் 1977ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரிக் களியாட்ட விழாவில் சிங்களப் பொலிஸார் சிலர் தொடக்கி வைத்த இனக்கலகம் நாடு முழுவதும் தமிழர்களுக்கு எதிராகப் பரவி உடைமைகளை இழந்து உயிர்ப்பலி கொடுத்தும் தமிழர்கள் தமது தாயகம் திரும்பினார்கள்.

1983ஆம் ஆண்டிலும் திட்டமிட்டு தமிழர்களுக் கெதிராக இனக்கலகம் தூண்டி விடப்பட்டது. தமிழ் மக்கள் பலர் உயிரிழந்ததுடன் அவர்கள் தேடிய சொத்துக்கள் யாவும் அழிக்கப்பட்டன. தமிழர்கள் மீண்டும் கப்பல்களில் தாயகத் துக்குப் போய்ச் சேர்ந்தனர். சிலர் வெளிநாடுகளுக்கும் இந்தியாவுக்கும் சென்றனர்.

இனவாதம் யாரால் எப்படி தூண்டப்பட்டுப் பரவியது என்பது வரலாறு. இப்பொழுது தமிழர் தாயகம் என எதுவுமில்லை. என்பதை நிலை நாட்டுவதற்கான திட்டம் செயல்படத் தொடங்கியிருப்பது தெளிவாகத்தெரிகிறது. 'எவருக்கும் எந்தப்பிரதேசமும் தாயகம் என்று இல்லை' என அமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்னரே தெளிவாகத் தெரிவித்துவிட்டார். அது இப்போது செயல்படுத்தப்படுகிறது.

இனவாதிகள் யார் என்பதைப் பற்றி சொல்லிப் பயனில்லை. ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை உலக நாடுகளில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை தமிழர்களுக்கெதிராகத் திருப்புவதற்கு அதிக காலம் செல்லாதென்றே தோன்றுகிறது. புலம்பெயர் தமிழர்கள் மீது இப்போது சாட்டப்படும் குற்றச்சாட்டும் பழியும் உள்நாட்டிலும் ஏற்படலாம். இதற்கு முதற்படியாகத்தான் இனவாதிகள் பிரிவினைவாதிகள் கோருவதைக் கொடுக்கமுடியாது என்ற அறிவிப்பாகும்.


பேச்சு வார்த்தையும் 'பழைய குருடி கதவைத்திறடி' என்ற கதைதான். எதுவும் நடக்காது. சட்டம் கைகொடுக்குமா என்று சட்ட வல்லுநர்கள் சிந்திப்பது நல்லது. ஆனாலும் மனித உரிமைப் பேரவையின் கூட்டம் தொடங்கிய போது அதில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட மனித உரிமைகள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க, இடப்பெயர்வு உட்பட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக



இலங்கை மனித உரிமை ஆணைக் குழு விசாரணை செய்ய நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்திருக்கிறார். உள்நாட்டில் என்ன பேசினாலும் வெளிநாட்டில் நடவடிக்கை வேறாகத்தானிருக்கிறது.

## ஊர் சுற்றி...

◄ எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) ►



# மனிதாபிமானப் போரிலும் மடிந்துவிடாத கல்வி

எழுவான்கரை, படுவான்கரை என்ற அர்த்தமுள்ள தமிழ், மட்டக்களப்பு மண்ணுக்கே உரித்தானது. மட்டக்களப்பின் வாவிக்கு இந்தப்பக்கம் நகரப் பகுதியாக இருக்கிறது. வாவிக்கு அந்தப்பக்கம் வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த பகுதி படுவான்கரை என்றழைக்கப்படும். வாவிக்கு இந்தப் பக்கமுள்ள நகரப்பகுதி எழுவான்கரையென்று அழைக்கப்படும்.



சில வாரங்களுக்கு முன்னர் மீண்டும் படுவான்கரையில் சில இடங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்பு கிடைத்தது. படுவான்கரையில் நான் சந்திப்பதற்காகச் சென்ற இடங்களைவிட பயணம் செய்த தூரமே அதிகம்.

அங்கு போய்ச்சேர்ந்ததும் இரண்டாயிரமாம் ஆண்டில் இன்று அமரர்களாகிவிட்ட தராக்கி சிவராம், நடேசன் ஆகியோருடன் இப்பொழுது சுவிஸில் தஞ்சமடைந்துள்ள இரா. துரைரத்தினம், சண்தவராஜா, ஜெயானந்த மூர்த்தி ஆகிய நண்பர்களுடன் சேர்ந்து மோட்டார் சைக்கிள்களுடன் மண்முனைத்துறை ஊடாக படுவான்கரைக்குச் சென்று திரும்பியது நினைவுக்கு வருகின்றது.

சிவராமின் அரசியல் கட்டுரையும் நடேசனின் அரசியல் சம்பந்தமான செய்திகளையும் வாசித்து பாராட்டியவர்கள் பலர். சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சிவராம் நடேசன் நினைவுதினக்கூட்டத்துக்கு வந்திருந்தோர் தொகை ஐம்பதைக்கூடத் தாண்டியிராது. பத்திரிகையாளர்கள் எரியும் மெழுகு திரிதான் என்பது இதில் புலனாகியது. சிவராமிடம் கட்டுரைகள் வாங்கி வெளியிட்டவர்கள் கூட மறந்துவிட்டனர்.

படுவான்கரைக்கு நான் போயிருந்தது நல்ல கோடை காலம். விடுதலைப்போரில் பெரும் வேதனைகளையும் சோதனைகளையும் கண்டு அனுபவித்தும் பல உயிர்களைப் பலி கொடுத்ததும் படுவான்கரை மண். கொக்கட்டிச்சோலையில் உள்ள தான்தோன்றீஸ்வரர் கோயிலில் அந்நியனின் ஆட்சியை நினைவூட்டும் சின்னமாக நந்தியும் நந்தி (மாடு) போட்ட சாணமும் இன்றும் பித்தளையில் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன.

தான்தோன்றீஸ்வரன் கோயிலுக்குச் சென்ற வெள்ளைக்காரத் துரை கோயில்களில் மூலவரைப் பார்த்தபடி வீற்றிருக்கும் நந்தி (மாடு) யைப் பார்த்து அங்கு நின்ற அந்தணரிடம், இந்த மாடு புல்லுத்தின்னுமா, சாணி போடுமா? என்று கேட்டானாம். இதை ஒரு சோதனையாக எடுத்துக் கொண்ட அந்தணர் ஈஸ்வரா நீயே துணை என்று உச்சரித்தபடி இந்த நந்தி புல்லும் தின்னும் சாணமும் போடும் என்று சொன்னாராம். அந்த வெள்ளைத்துரை அதைச் சோதிக்க எண்ணி தனது பரிவாரங்களில் ஒருவன் மூலம் புல் எடுத்து நந்தியின் வாயில் வைக்கவும் நந்தி வாய் திறந்து சாப்பிட்டு சாணமும் போட்டதாம். இதைப் பார்த்துத் திகைத்துப்போன அந்தத்துரை ஈஸ்வரனை வணங்கியதுடன் கோயிலுக்கு பல ஏக்கர் நிலம் வழங்க உத்தரவு பிறப்பித்ததுடன் வேறு காணிக்கைகளும் செலுத்திச் சென்றதாக வரலாறு கூறுகிறது. இதை இன்றும் மக்கள் நினைவு கூறத்தக்கதாக பித்தளையில் நந்தியும் புல்லும் சாணமும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன!

ஆனால் கொக்கட்டிச் சோலையில் 'மனிதாபிமானப் போருக்கு' முன்னர் நடந்த மனித வேட்டையில் மாண்ட அப்பாவிகளை நினைவு கூர்ந்து அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தைக் காணோம். துயிலும் இல்லங்கள் போல இதுவும் 'ஒரே நாடு ஒரே மக்கள்' என்பதைநிலைநிறுத்துவதற்காக காணாமல் போய்விட்டது போலும்.


கொக்கட்டிச் சோலை மனித வேட்டையை நீதிமன்றத்துக்குத் துணிந்து கொண்டு சென்று வாதாடிய மாமனிதர் குமார் பொன்னம்பலம், பின்னர் கொழும்பில் நயவஞ்சகமாகக் கடத்திக் கொல்லப்பட்டார். இக்கொலையாளிகளும் கண்டுபிடிக்கப்படாத பட்டியலில் இடம் பெற்றுவிட்டனர்.

பட்டிப்பளையில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குப்போகும் சந்தர்ப்பம் கிட்டியது. அன்று விடுமுறை நாள். பாடசாலை விடுமுறையென்றாலும் உயர்வகுப்புப் பிள்ளைகள் வந்திருந்தனர். பாடசாலை அதிபரும் ஆசிரியர்கள் சிலரும் அங்கே இருந்தனர். விடுமுறை நாட்களில் இந்தப் பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் வகுப்பு நடத்திப் பாடம் சொல்லிக் கொடுத்து அவர்களை பரீட்சைக்குத் தயார் செய்கிறார்கள்.

வெய்யிலில் எங்கும் வறண்ட நிலத்தையே பார்க்கக் கூடியதாக இருந்தது. ஆனாலும் பிள்ளைகளும் ஆசிரியர்களும் முகமலர்ச்சியுடன் கல்வி கற்கவும் கற்பிக்கவும் வந்திருந்தனர். வெகு தூரத்திலிருந்தும் பிள்ளைகள் சிலர் நடந்தும் சிலர் சைக்கிளிலும் வந்திருந்தனர். தங்களுடைய குறைகளையும் சில மாணவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மாணவிகள் ஒருவர்கூட வாய்திறக்கவில்லை. மாணவர்கள் தெரிவித்த குறைகளை வெளிப்படுத்த வேண்டுமென நினைத்திருந்தேன். வழமைபோல் மறந்துவிட்டேன்.

பட்டிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் திரும்பிய இடங்களிலெல்லாம் மணிமொழிகள் பெரிய எழுத்துக்களில் கண்ணையும் கருத்தையும் கவரக்கூடியதாக அழகாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தன. உயர் வகுப்பு மாணவ மாணவியர் சிலர் நடந்து முடிந்த பரீட்சைகளில் திறமைச்சித்தி பெற்றிருந்தனராம். போர்க்காலத்தில் மாணவ மாணவியரும் ஆசிரியர்களும் அவலத்துக்குள்ளானபோதும் கல்வியைத் தொடர்வதற்கு அவர்கள் பின்னிற்கவில்லை!

---



# காத்திருப்பு

**சிறு கதை**

◄ ம. புவிலக்ஷி ►

உடலெங்கும் நனைந்தபடி வியர்வை சொட்ட சொட்ட நிலத்தில்விழ, காலடிதடம் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நிலத்தில் பதிய, கண்கள் இரண்டும் குடிகாரனைப்போல் சிவந்தவனாய் ஓடிவருகிறான் குமார்,

'சித்தி...சித்தி.... சித்தியேய்..' என்று கத்திக்கொண்டு.

'என்னடா?' என கேட்டுக்கொண்டு வீட்டிற்குள் இருந்து வந்த நளினிக்கு தூக்கிவாரிப்போட்டது. 'என்னடா தம்பி இந்தக் கோலம்'

'என்ன நடந்தது' ஏன் இப்படி கத்திக்கொண்டு வந்தனி? என்ற கேள்வி கம்பீரமாய் இருந்தாலும் மனம் படபடவென உள்ளே அடித்துக்கொண்டிருப்பதை அவள் மட்டுமே உணர்வாள்.

'சித்தி...' அவனால் பேச முடியாமல் திணறுகிறான்.

'என்னடா என்ன நடந்ததெண்டு சொல்லன். உடம்பெல்லாம் இப்படி வேர்த்துக்கொட்டுது. நடுங்குறாய... ஏதும் அசம்பாவிதம் நடந்துட்டுதா..?'

'ஐயோ கடவுளே' என்று இடையில் கடவுளையும் கூப்பிட்டுவிட்டு குமாரை அழைத்து வீட்டிற்குள் செல்கிறாள் நளினி.

'இப்பயாவது சொல்லன்டா? பயமா கிடக்குது' என கொஞ்சம் கோபத்துடன் கேட்டாள்.

'சித்தி... சித்தப்பாவை எஸ்.ரீ.எப். சந்தேகத்திலகூட்டித்துப்போறானுகளாம். நம்மட ஊரில இருந்து அஞ்சு பேராம். அதில சித்தப்பாவும் ஒராளாம் எண்டு கள்ளுத் தவறணையில வச்சு எல்லாரும் கதைக்கிறாங்க'

என்றான் குமார் கண்களில் கண்ணீர் ததும்ப.

குமாரின் சித்தப்பா நீலாவணையில் மீன் பிடித்து தனது மனைவியையும் பிள்ளையையும் தனது தாயையும் பார்த்துவந்தான். இரவு நேரங்களில்தான் தோணியில் போவான். இல்லாவிட்டால் போர்ட்டில் போய் மீன் பிடிப்பான், கரவலை இழுப்பான். இப்படி மாறிமாறி அந்த கடலுக்குள்தான் கிடந்து தன் பொழுதைப் போக்கிக் கொள்வான்.

2000ஆம் கண்டு காலப்பகுதியில் ஆமி, எஸ்.ரீ.எப். என்று வீதியிலும் வீடுகளிலும் சேர்ந்து செக் பண்ணுவார்கள். எல்.ரீ.ரீ.ஈ. இலிருந்து தப்பியோடி வந்துவிட்டார்கள், ஊருக்குள் யாரோ சந்தேகத்திற்கு இடமான ஆள் வந்துவிட்டார்கள் என்று அன்றைய நாள் முழுவதும் ஊரையே சுற்றிவளைத்து நிற்பார்கள். அப்படி ஒரு நாள் எல்.ரீ.ரீ.ஈ.யினருக்கு உதவி செய்தான் என்று அவனோடு கடலுக்குச் செல்லும் இன்னும் இரண்டு பேரையும், ஊரில் சும்மா சுற்றித் திரிந்த இரண்டு பொடியன்மாரையும் நீலாவணைக் கள்ளுத் தவறணையடியில் வைத்து எஸ்.ரீ.எப். அடித்து கொண்டு போகின்றதை ஊராரின் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி விடியற்காலையிலே மென்று கொண்டிருக்க, பாடசாலைக்குப் போக தயாரான குமாரின் காதுக்கும் அந்த செய்திவந்து எட்டியது.

'கடவுளே...'

என்று நெஞ்சை அடித்துக்கொண்டு,

'விடிய நேரத்தோட கடைக்குப் போன மனுசன் என்ன செஞ்சார் எண்டு கூட்டிப் போறானுகளோ தெரியாதே... முருகா அவர ஒண்டும் செய்யாம விட்டனும். உனக்கு கோழிச்சாவல் கொண்டு வந்து பெரிய பொங்கல் பொங்குறன்' என்று புலம்புகிறாள் நளினி. ஆறுதல் சொல்ல வந்தவர்களைவிட புதினம் பார்க்க வந்தவர்கள்தான் நளினியின் வீட்டில் குவிந்து நின்றார்கள்.

தலையில் கையை வைத்துக்கொண்டிருந்த நளினிக்கு, புட்டுக்குழலின் ஆவி கையை பதம் பார்க்கவே சுயநினைவுக்கு வருகிறாள். தன் கணவர் சிவபாலனுக்கு சர்க்கரைப் புட்டு என்றால் கொள்ளைப் பிரியம். அதுவும் அவனது அம்மா அவிப்பதுதான் அவனை வயிறுமுட்ட சாப்பிட வைப்பது. இதைச் சொல்லியே நளினியைக் கிண்டலடிப்பான் சிவபாலன். எஸ்.ரீ.எப். கூட்டிப்போய் இரண்டரை வருடங்களாகியும் தன் கணவன் எங்கிருக்கிறான், என்ன நடந்தது என்று அறியாமலே இன்று ஒரு நடைபிணமாக வாழ்கிறாள் நளினி.

'எந்தப் பலனுமில்ல.. வாறவர் போறவர் எல்லாம் பதிஞ்சு தான் போறாங்க. எனக்கினும் விடிவுகாலம் இல்ல. அவரிருக்கிற நேரமாவது மூண்டு நேரமும் நல்லா சாப்பிட்டு குடித்து கிடந்தம். இப்ப ஒருவேளைக்கும் நான்தான் கஷ்டப்பட வேண்டிக் கிடக்கு' என்று அலுத்துக் கொள்வாள்.

அவள் பக்கத்தில் இருந்த பொலிஸ் ஐ.சி.ஆர்.சி. என எல்லா இடங்களிலும் போய் அறிவித்தும் எந்தப் பதிலும் இல்லை. ஆனால், தவறாமல் கோயிலுக்குப் போவாள். அதுமட்டுமல்ல நேர்த்திக்காக ஒரு கோழி வாங்கி விட்டவள் நளினி. இன்று ஐந்தாறு சேவலுக்கு சொந்தக்காரியும் ஆகிவிட்டாள்.

# மாற்றம்

சி று க தை


◄ எஸ்.எல். மன்சூர் ►

அந்த ரயில் வண்டி தன்பாட்டுக்கு ஒரே சீரான வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அப்பொழுது தன் கணவரின் முகத்தைப் பார்க்கிறாள் சுஹைறா. தன் கணவர் மனம் நொந்து வெந்து தவிப்பதை மனைவி சுஹைறாவால் பொறுக்க முடியவில்லை. நேற்று நடைபெற்ற சம்பவத்தை நினைத்து நினைத்து அன்புக் கணவன் படும் வேதனை வெட்டவெளியில் தனித்துவிடப்பட்ட பட்டமரம்போல காய்ந்து கறுத்துப் போவதை எண்ணி தானும் வேதனைப் பட்டவளாக 'இஞ்சாறுங்க நீங்க யோசிக்கிறத்தப் பாத்தா எனக்கும் வேதனையாகத்தான் இருக்கி. ஒரே பெண் பிள்ளை.. அவளைப் படிப்பித்து ஆசிரியையாக்கி கலியாணமும் முடிச்சி பேரப்புள்ளைகளும் கண்டாச்சி. இதுக்குப் போய் ரயில் ஏறி இவ்வளவு தூரம் வரணுமா?' என்று ஒரு போடு போட்டாள் மனைவி சுஹைறா.

'என்ன புள்ள.. உங்களுக்கு அந்த வேதனை தெரியலயா. நாம இரண்டு பேரும் சேர்ந்துதான் மகளிண்ட திருமணத்தை முடிப்பிச்சம். சீதனமாக 10 ஏக்கர் காணி, 3 இலட்சம் ரொக்கம், வீடுவளவு, அதற்குரிய சாமான்கள் எல்லாம் கொடுத்தும் வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னாங்களே என்ன மனிதாபிமானம். படிச்ச புள்ளகள்தானே, இப்படி வீட்டை விட்டு வெளியேறுங்க என்று சொன்னா அதுக்கப்புறமும் இருந்தா நம்மளப்போல ரோசமத்தாக்கள் இருக்காங்களா? அதனாலதான் உடனே வெளிக்கிட்டு நான் படிப்பிச்ச அந்த ஊருக்கு வெளிக்கிட்டுப் போறத்திற்கு காலடி எடுத்து வைச்சன்' என்று ஏக்கப் பெருமூச்சுடன் கூறினார் கலந்தர் மாஸ்டர்.

கடந்தகால நினைவுகளை மீட்டியபோது தனது நெஞ்சு கனத்தது. 'அன்று மாலைப் பொழுது. தனது மகள் உயர்தரம் படித்துக் கொண்டிருந்தாள். இரவு 10 மணியாகியும் அறையில் இருந்து படித்துக் கொண்டிருந்த மகள் சாப்பிட வரவில்லை. சாப்பாட்டை எடுத்துக் கொண்டு படிக்கும் அறையில் வைத்து பிசைந்து ஊட்டிய மனைவியின் செயலை இன்று மகள் மறந்து விட்டாள். கணவன் கூறிய அந்த வார்த்தைக்கு மறுப்புத் தெரிவிக்காத மகளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. திருமணம் முடித்து 3 பிள்ளைகளையும் வளர்த்தது நாங்களேதான். மருமகன் தொழிலுக்குச் சென்றால் மாலையில்தான் வீடு வருவார். மகளும் பாடசாலைக்குச் சென்றால் 2.30 மணிக்குத்தான் வீடு வருவாள். சாப்பாடு, பிள்ளைகளின் உடுபிடவை கழுவுதல், வீட்டு வேலை அனைத்தும் தன்னுடைய கைகளால்தான் செய்வது, இத்தனைக்கும் வேலைக்காரி வைத்திருந்தால்கூட மாதம் 10,000 ரூபா கொடுத்தாலும் ஈடாகாது. தன்னுடைய மகள் ஒரே ஒரு செல்வமகள் என்று தவமிருந்து பெற்றெடுத்த பிள்ளை நன்றாக வாழ வேண்டும் என்பதால் இத்தனை வேலைகளையும் செய்தும் நன்றி தேவையில்லை. இந்தப் பெரிய வீட்டில் ஒரு அறையில் நாங்கள் இருக்கிறதுக்கு ஏன் இத்தனை எதிர்ப்புக் காட்டினார்கள் என்பதுதான் புரியவில்லை'

அன்று கணவன் மனைவியிடையே சண்டை. சண்டை முற்றி தன் மகளை மருமகன் அடிக்கிறார். 'ஏன் மருமகன் அடிக்கிறீர்கள்.. உங்களைப்போல அவவும் சம்பளம் எடுக்கிற புள்ள.. கைநீட்டி அடிக்கிறது நாகரீகம் இல்லையே' என்று கூறியதுதான் தாமதம், உடனே 'நீங்கள் இப்படிப் பேசுறதுதான் இவருக்குப் பிடிக்கயில்ல. நீங்கள் எந்நேரமும் பேசிக்கொண்டும் எங்கள் குடும்பத்துப் பிரச்சினைகளை





பெரிதாக்குவதுதான் பிரச்சினை. என் கணவர் அடிப்பார் உதைப்பார்.. நீங்கள் இங்கிருப்பதனால்தான் பிரச்சினையே.. உடனே வீட்டைவிட்டு வெளியேறுங்க' என்றாள் மகள். குடும்பச்சண்டை இவ்வளவுக்குக்குப் போய் நிற்கும் என்று கலந்தர் மாஸ்டர் நினைக்கவில்லை. உடனே மரியாதை நிமித்தம் அடுத்தநாள் மாலையே வெளியேற முடிவாகி தனது உடுபிடவைகளை மடிக்க ஆரம்பித்தார்கள்.

கலந்தர் மாஸ்டர் ஓய்வு பெற்று 5 வருடங்களாகின்றன. தனது பேரக்குழந்தைகளுடன் விளையாடுவது, நாளாந்தம் பத்திரிகை வாங்கிப் படித்து நாட்டு நடப்புக்கள், உலகநடப்புக்களை எல்லாம் விலாவாரியாகவே தன் வாயினால் விநியோகிக்கும் பழக்கமுள்ளவர். இதன் காரணமாக பத்திரிகை படிப்பதற்கும், செய்திகளை அறியவும் கலந்தர் மாஸ்டரை அணுகும் பலர் அந்த ஊரில் இருக்கின்றனர். நேற்றைய பிரச்சினை அவர்களுக்குத் தெரியாது. 'மாஸ்டர் எங்கே?' என்று பலர் கேட்பார்கள். மகளிடமும் மருமகனிடமும் விசாரிப்பார்கள். அவர்கள் என்ன பதில் கூறுவார்களோ தெரியாது. என்ன கூறினால்தான் நமக்கென்ன நாம் ஊரையே விட்டுவிட்டுப் தனிமையைத் தேடிப் போகின்றோமே' என்று ரயிலின் இரைச்சலே கேளாதபடி தன் கடந்தகால வாழ்வின் சில கட்டங்களை நினைவுபடுத்தியபோதுதான் அந்த சம்பவம் நடைபெற்றது.

'ஐயோ...! ஐயோ, அம்மா! அப்பா! கடவுளே!! காப்பாற்றுங்கள் என் கால் ஐயோ' என்கிற சத்தம் காதைக் கிழித்துக் கொண்டு வந்தபோதுதான் ஓடிய ரயில் வண்டி விபத்திற்குள்ளாகிவிட்டது தெரிந்தது. நினைவு வந்தவராக தன்னை அறியாமலே சப்தமிட்டவராக அருகில் இருந்த மனைவியைத் தேடினார். மனைவி நித்திரையில் இருந்தபோது இவ்விபத்து ஏற்பட்டிருக்கின்றது. இருக்கையின் கீழே விழுந்தபடியால் நினைவிழந்து காணப்பட்டார். விபத்தின் காரணமாக அழுகுரல் பல பக்கங்களில் இருந்தும் கேட்டது. அது மட்டுமல்லாது ரயிலினுள் பயங்கர இருட்டும் குடி கொண்டிருந்தது. தன்னிடம் இருந்த செல்போனின் வெளிச்சத்தில் தான் இருந்துவந்த ரயில் பெட்டிக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்பதை அறிந்தாலும் ஒரு பக்கம் சாய்ந்து கீழே விழாதபடி காணப்பட்டதை கலந்தர் மாஸ்டர் உறுதிப்படுத்திக் கொண்டார். போட்டி போட்டுக் கொண்டு ஆரவாரப்பட்டு பிரயாணிகள் தங்களது உயிரைக் காப்பாற்றியபடி வெளியேறிக் கொண்டிருந்தனர். அதற்கிடையில் மனைவி சுஹைறாவை தட்டியெழுப்பிக் கொண்டார் கலந்தர் மாஸ்டர்.

சற்று நேரத்திற்குப்பிறகு வெளியே வந்தபோதுதான் நிம்மதிப் பெருமூச்சு விட்டார் கலந்தர். 'அல்லாஹ்ட வேலையைப் பார்த்தீங்களா? நம்முடைய பெட்டியில வந்தவர்கள் மாத்திரம்தான் எவ்வித காயங்களும் இல்லாமல் காப்பாற்றப்பட்டுள்ளார்கள்' என்கிற செய்தி ஒரு பக்கம் சந்தோஷத்தைத் தந்தாலும் பலர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டது மனவேதனையைத் தந்தது. 'மரத்தால விழுந்தவனை மாடு குத்தின கதைபோல நாம வீட்ட விட்டு கிளம்பிவர நாம வந்த ரயில் வண்டியும் தடம்புரளணுமா?' என்று மனைவி கேட்டபோது அருகில் இருந்து ஒரு குரல் கேட்டது. அக்குரல் எங்கோ கேட்ட குரல்போல ஞாபகம் வந்ததும் மனைவி கூறினார் 'நம்முட மருமகனைப் போல கிடக்குது நல்லாப் பாருங்கோ' என்று மனைவி சுஹைறாவும் கூற சரியாகத்தான் இருந்தது.

'நீங்கள் வீட்டை விட்டுக் கிளம்பியதைக் கேள்விப்பட்டு உடனே எனது நண்பர் ஒருவரின் காரில் ரயிலைத் தொடர்ந்து பின்னால் வந்து கொண்டிருக்கும் போதுதான் எங்கள் எதிரே இவ்விபத்து ஏற்பட்டது. இருப்பினும் நீங்கள் எந்தப்பெட்டியில் வருகின்றீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஒவ்வொரு இடமாகப் போய் பார்த்துக் கொண்டு வந்தபோதுதான் உங்கள் சப்தம் கேட்டு அருகே வந்தேன். உங்களுக்கு ஏதும் காயங்கள் இருக்கின்றதா?' என்று கேட்ட மருமகன் 'உடனடியாக வாருங்கள் நான் கொண்டுவந்த காரில் செல்வோம்' என்று கூறினார். தனது இந்த நிலைமைக்கு காரணமான மகளும் மருமகனும் கீழே இறங்கியதற்குப் பிறகும் பழிகாட்டினால் தான் ஒரு படித்தவன் என்பதில் அர்த்தமே இல்லாமல் போகும் என்பதை நினைத்து உடனே காரில் ஏறினார்கள்.

சில மாதங்கள் சென்றன. மகளும் மருமகனும் புதிய வீட்டைக் கட்டினார்கள். அந்த வீட்டுக்கு குடிபோவதற்குரிய ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கும் போது தனது கடந்தகால சம்பள ஏற்றத்திற்கு அமைவாக 3 இலட்சம் ரூபா பணம் கிடைத்தது. அதனை தன் மகளின் கையில் ஒப்படைத்து 'இதனைக் கொண்டு உங்களது வீட்டை சரி செய்து கொள்ளுங்கள்' என்று தந்தைகூற மருமகனோ 'இது உங்கள் பணம், இதை உங்களது விருப்பப்படி செலவு செய்வதற்கு உரிமை உண்டு. நானும் சில தவறான முடிவுகளை மேற்கொண்டதனால்தான் நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை உருவானது. இனிமேல் நீங்கள், நாங்கள் என்று பிரிவு இல்லாது நாம் எல்லோரும் ஒரே குடும்பமாக இருப்போம். பழைய வீட்டை நீங்கள் தாராளமாக பயன்படுத்தலாம். உங்கள் நண்பர்கள் அனைவரும் வரவும் போகவும் நான் இனிமேல் இடையூறாக இருக்க மாட்டேன்' என்று மருமகன் கூறியபோது மகளின் கண்ணிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. இப்படிப்பட்ட தந்தையையா நாம் வெளியேற்றியது. என்று தன் உள்ளத்தில் நினைத்து பாசத்திற்கு ஏங்கினாள் மகள். மாற்றம் அனைவரிலும் ஏற்பட்டுள்ளதை நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் மனைவி சுஹைறா.


(யாவும் கற்பனை)

---

நண்பன் 1: இண்டைக்கு கனவுல எண்ட கனவுக் கன்னிடா மச்சான். ஆனா, முடியல....

நண்பன் 2: ஏன்டா, நல்லா என்ஜோய் பண்ண வேண்டியது தானே...?

நண்பன் 1: முடியாதுடா மச்சி, எண்ட கனவுல வந்தது, உண்ட லவ்வர்டாப்பா...



# வீடுகளில் கொள்ளையிட்ட போலி '119' அவசர பொலிஸ் அதிகாரிகள் மடக்கிப் பிடிப்பு




இலங்கையில் அவசர பொலிஸ் அழைப்புச்சேவை (119) மிகவும் துரிதமாக செயற்பட்டு வருகின்றமை நாம் அறிந்ததே. அவசரமான இக்கட்டான நேரங்களில் 119 இல் கிடைக்கும் தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்து வருவார்கள். ஆனால் இதே 119 அவசர அழைப்பு அதிகாரிகள் இவ்வாறான சேவையில் ஈடுபடும்போது கையில் கிடைத்ததையெல்லாம் சுருட்டிக் கொண்டு சென்றால் அந்த பொலிஸ் அதிகாரிகளை என்னவென்று சொல்வது?

இப்படியும் நடக்கின்றதா என நீங்கள் வியப்பீர்கள். இந்த மாதிரியான சில சம்பவங்கள் கடந்த சில நாட்களில் தலங்கம, மஹரகம போன்ற பகுதிகளில் நடைபெற்றுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அண்மையில் குறிப்பிட்ட ஒரு வீட்டுக்குச் சென்ற சிலர் 119 இலிருந்து வந்திருப்பதாக கூறினார்கள். ஒருவர் எஸ்.ஐ. அதிகாரி என்றும் மற்றவர் கொன்ஸ்டபிள் என்றும், தாங்கள் மிரியான யூனிட்டிலிருந்து வந்திருப்பதாகவும் கூறி வீட்டிலிருந்தவர்களிடம் வாக்குமூலமும் பெற்றிருக்கின்றனர். வீட்டைச் சோதனையிட வேண்டுமென்று எஸ்.ஐ. அதிகாரி கூற வீட்டிலுள்ளவர்களும் சம்மதித்தார்கள். அவர்கள் சோதனை முடிந்து சென்றபின் வீட்டினுள் சென்று பார்த்தபோதுதான், அலுமாரியில் வைத்திருந்த நகைகள், பணம் முதலியவை காணாமல் போன விடயம் தெரியவந்தது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் பொலிஸ் சீருடை அணிந்திருந்ததோடு 'பொலிஸ்' எனக் குறிப்பிடப்பட்டிருந்த ஹெல்மட்டும் அணிந்திருந்ததாக வீட்டிலுள்ளவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருவதாக தகவல் கிடைக்கவே காவல்துறையினர் நிலை குலைந்து போனார்கள். உண்மை யிலேயே இவர்கள் 119ஐச் சேர்ந்த அதிகாரிகள் தானா? அல்லது பொலிஸாரின் வேஷத்தில் நடமாடிக் கொண்டிருக்கும் வேறொரு கும்பலா என்று கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் மிகவும் சிரமப்பட்டனர்.



கொள்ளையிட பயன்படுத்தப்பட்ட போலியான ஹெல்மட்

திடீரென்று தலங்கம ஹலல்கொடயில் உள்ள வீடொன்றுக்குச்சென்ற அவசரப் பொலிஸ் 119ஐச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து நகைகளைத் திருடியுள்ளனர் என்ற தகவல் தலங்கம பொலிஸ் அதிகாரி உபுல் பெரேராவுக்குக் கிடைத்தது. தகவல் கொடுத்தவர் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தையும் கொடுத்ததால் பொலிஸார் ஒருவனை மடக்கிப் பிடித்தனர். சைக்கிளிற்கு சொந்தக்காரன் பொல்லேயன்கொடையைச் சேர்ந்தவன். அவனோ அது தான் இல்லை என்றும் பொலிஸ் சீருடையணிந்து வீடுகளுக்குப் போவது தன் நண்பன் எனவும் குறிப்பிட்டான். அவனையும் மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸிற்குக் கொண்டுசென்று இலக்கத் தகட்டை பரிசோதனை செய்தபோது அது வேறொரு வண்டியின் இலக்கமாக இருந்தது. அந்த வேறொரு வண்டியின் சொந்தக்காரரே கைது செய்யப்பட்ட இந்த நபர். ஆனால் இந்த நபர் ஏற்கனவே தன் மோட்டார் சைக்கிளை விற்றிருந்தது பொலிஸாருக்கு தெரியவந்தது. இலக்கத் தகட்டை மட்டும் தன்னோடு வைத்துக்கொண்ட இந்நபர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட இந்த மோட்டார் சைக்கிளுக்கு அதனைப் பொருத்தி இவ்வாறான திருட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளான். பின் மோட்டார் சைக்கிள் பற்றி நடத்திய தேடுதல் வேட்டையில் அதுவும் திருடப்பட்டது என்பது தெளிவாகியது.

இதன் பிறகு அவனது நண்பனைத் தேடி பொலிஸார் வலை விரித்தார்கள். அவனும் பொல்லேயன்கொடையைச் சேர்ந்தவன். கைதுசெய்யப்பட்டவனுடன் அவனது


உபுல் பெரேரா ருஷான் அனுருத்த

நண்பனின் வீட்டுக்குச் சென்ற போது வீட்டில் தாயார் மட்டுமே இருந்துள்ளார். குறிப்பிட்ட நபர் நள்ளிரவாகி வீட்டுக்கு வந்தபோது வீட்டினுள் ஒளிந்திருந்த பொலிஸார் அவனை மடக்கிப் பிடித்தனர்.

அதற்கு அடுத்ததாக பொலிஸாரின் 'வரவேற்பு' அவனுக்குக் கிடைத்தது.

'அடிக்க வேண்டாம் சேர் நான் உண்மையைச் சொல்கிறேன்' என்று பொலிஸாரிடம் தெரிவித்த நல்ல உயரமான அம்மனிதன் உதவிப் பொலிஸ் அதிகாரியாகத்தான் நடித்திருக்கிறான். அவர்கள் இருவரிடமும் நடத்திய விசாரணையில் பல உண்மைகள் வெளி வந்தன.

சந்தேக நபர் லொறி ஒன்றிற்கும் சொந்தக்காரர். ஒருவர் லொறியில் செல்ல மற்றவர் பின்னால் சைக்கிளில் வருவார். தாங்கள் இலக்கு வைக்கும் வீடுகளை நெருங்கும்போது அவசர பொலிஸ் அதிகாரிகள் போல வேடமிட்டு வீடுகளுக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பிப்பார்கள். அவர்கள் உண்மையான பொலிஸ்காரர்கள்தான் என்று நம்பி வீட்டு சொந்தக்காரர்களும் வீட்டைச் சோதனையிட அனுமதிப்பார்கள்.

இவர்கள் குறிவைப்பது அலுமாரிகளைத்தான். அப்படி அவர்கள் அலுமாரிகளைச் சோதனையிடும்போது வீட்டு சொந்தக்காரர் யாராவது வந்தால் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வருமாறு அவர்களை அனுப்பிவிட்டு அங்குள்ள பணம், நகை போன்றவற்றை சுருட்டி விடுவார்கள்.

ஆனால், இப்படியான சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டதும் உண்டு. சில புத்திசாலியான வீட்டுச் சொந்தக்காரர்கள் இவர்களை நம்பாமல் துருவித்துருவி இவர்களிடம் விசாரணை செய்வார்களாம். அப்படியான சந்தர்ப்பங்களில் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு அங்கிருந்து நழுவிவிடுவார்கள்.

'நாங்கள் மிரியானை அவசரப்பொலிஸ் 119இல் இருந்து வருகிறோம். எங்களுக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. உங்கள் வீட்டில் ஆயுதங்கள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. உங்கள் வீட்டினைச் சோதனையிட வேண்டும்' என்று சொல்லிக்கொண்டுதான் வருவார்களாம். அப்படி ஒன்றும் இல்லை என்று வீட்டுக்காரர்கள் மறுத்தால் 'அப்படியென்றால் இவரிடம் ஒரு வாக்கு மூலம் கொடுங்கள் நான் வீட்டிற்குள் சோதனை செய்துவிட்டு வருகிறேன்' என்று ஒருவரை நிறுத்தி விட்டு மற்றவர் உள்ளே போய் தன் வேலையைக் காட்டுவாராம்.

இவர்கள் அணிந்து செல்லும் பொலிஸ் சீருடையை மஹரகமவிலுள்ள ஒரு டெய்லர் கடையில்தான் தைத்திருக்கின்றார்கள் என்ற விபரமும் வெளியாகியது. இந்த ஹெல்மெட்டை மஹல்வராவ பகுதியிலுள்ள கடையொன்றில்தான் தயார் செய்துள்ளார்கள். இவர்கள் பல பொலிஸாரிடம் நட்பு வைத்துள்ளமையால் பொலிஸாரின் நடவடிக்கைகள் எல்லாம் அவர்களுக்கு நன்கு தெரிந்துள்ளன. அதைப் பயன்படுத்தித்தான் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை நாம் இப்போது பிடித்திருக்காவிட்டால் இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருந்திருக்கும். மஹரகமவில் இருந்த வீட்டிலிருந்து மூன்றரை இலட்சம் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்து அடகும் வைத்துள்ளார்கள்.

நுகேகொட பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி தேசபந்து தென்னகோன் அவர்களின் ஆலோசனையின் பெயரில் உதவிப் பொலிஸ் அதிகாரி நிசாந்த சொய்சாவின் மேற்பார்வையில் தலங்கம பொலிஸ் அதிகாரி வி.எஸ்.ஜே. உபுல் பெரேரா, குற்றப்புலனாய்வு அதிகாரி ருஷான் அனுருத்த ஆகியோருடன் உதவிப் பொலிஸ் அதிகாரி சுமதிபால, சார்ஜன்ட் பிரேமானந்த, புஸ்பகுமார, அமரசேகர, கொர்ன்ஸ்டபிள் அனுராத கருணாரத்ன ஆகியோர் இந்த விசாரணையில் பங்கேற்றார்கள்.

சந்தேக நபர் இருவரையும் தங்கள் கண்காணிப்பில் வைத்துள்ள பொலிஸார் நன்றாகவே கவனித்து வருகின்றனர். இவர்கள் இன்னும் எவ்வாறான மோசடி வேளைகள் செய்துள்ளனர் என்பது பற்றி தீவிர விசாரணை நடாத்தி வருகின்றனர். திருடர்களைக் கண்டுபிடிக்க பொதுமக்கள் பொலிஸாரை நாடுகின்றனர். இங்கு பொலிஸாரைப் போல வேடமிட்டு இவ்வா றான திருட்டு வேளைகளில் ஈடுபடும் ஒரு சிலரால் யார் உண்மையான பொலிஸ் யார் கள்ளப் பொலிஸ் என்று தடுமாறும் மக்கள் பீதியில் உள்ளனர். எனவே இவ்வாறான போலிகளுக்கு கொடுக்கப்படும் தண்டனையானது மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டுமென்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.


◀ மிஸ்டர் உளவாளி ▶

CRIME REPORT


சந்தேக நபர்

வாழ்க்கையில ஆயிரம் மேடு, பள்ளம்.... ஆயிரம் கல்லு, முள்ளு இருக்கும்.

ஆகவே, உங்களைக் காப்பாத்திக்க நல்ல செருப்பையே எப்பவும் பாவிங்க...





# வெற்றிவேல் துஷ்யந்தன்

# 'சமூகத்தையும் சமூக பிரச்சினைகளையும் பதிவு செய்யவேண்டும்'

இன்று இளம் படைப்பாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதானது தமிழ் எழுத்துத்துறைக்கு நிச்சயம் ஒரு எதிர்காலம் உண்டு என்பதைக் காட்டி நிற்கின்றது. அதுமட்டுமல்ல பல கவித்துவம் மிக்க இளம் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை ஏதோ ஒரு வழியில் வெளிக்கொண்டு வருகின்றார்கள். இவ்வாறு பல சஞ்சிகைகள், பத்திரிகைகளில் தன் கவிதைகளால் வாசகர் மனதில் இடம்பிடித்த இளம் கவிஞர்களில் ஒருவர்தான் கவிஞர் வெற்றிவேல் துஷ்யந்தன்.

யாழ்ப்பாணம் வடமராட்சியின் புகழ் பூத்த கிராமங்களில் ஒன்றான அல்வாய் கிராமத்தை பிறப்பிடமாகக்கொண்ட இவர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'ஜீவநதி' சஞ்சிகையில் துணை ஆசிரியராக இருந்துவருகின்றார். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக கவிதைகளை எழுதிவரும் இவர் 'வெறிச்சோடும் மனங்கள்' எனும் கவிதைத் தொகுதிக்கூடாக அநேக இலக்கிய நெஞ்சங்களை தன் பக்கம் ஈர்த்துக் கொண்டவராவார். கவிதைகளோடு கட்டுரை, சிறுகதை, விமர்சனம், போன்றவற்றையும் எழுதிவரும் துஷ்யந்தன் நாடகங்களிலும் நடித்து வருகின்றார். இருக்கிறமின் விருந்தினர் பக்கத்துக்காக அண்மையில் அவரைச் சந்தித்தோம். பார்ப்பதற்கு சற்று வயது கூடியவர் போன்ற தோற்றம் என்றாலும் வயதில் மிகவும் இளையவர்.



**எழுத்து மீதான இவரது ஆர்வம் பற்றிக் கேட்டபோது;**

'எந்தவொரு படைப்பாளிக்கும் எழுத்துமீது ஆர்வ மேலீடு ஏற்படுவதற்கு ஒவ்வொரு காரண காரியங்கள் பின்புலமாக இருந்துவிடுகின்றன. அதுபோல நானும் சிறுவயதில் வாசிப்புமீது ஆழ்ந்த பிரியத்தை கொண்டிருந்தேன். அதிலும் பத்திரிகை வாசிப்பு எனது தீராத தாகமாக இருந்தது. பத்திரிகைகள் பார்க்காத நாட்களில் உறக்கத்தின்போது ஏதோ ஒரு உருப்பெறாத ஏக்கம் என்னுள் கிளர்ந்து கொண்டிருக்கும்.

ஆகவே, அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு படிப்படியாக எனது வாசிப்பு மீதான ஆர்வம் மேலோங்கத்தொடங்கிற்று. பத்திரிகைகளில் வெளிவரும் கவிதைகளில் ஆரம்பகாலம் தொட்டு போர்க்கால வாழ்வு. அவலங்களைப் பாடுகின்ற கவிதைகளை நன்கு விரும்பிப்படித்தேன்' என்றவர் 2004ம் ஆண்டு வடமராட்சி வலயம் நடாத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதைத் தொடர்ந்து கவிதைத் துறையில் தன்னை இணைத்துக் கொண்டதாக கூறினார்.

**உங்கள் முதல் கவிதை எந்த இதழில் வெளிவந்தது?**

'எனது முதல் கன்னிக் கவிதை 2005ஆம் ஆண்டு வலம்புரியில் வெளியாகியது. அதன் பின்னர் பல பத்திரிகைகளில் எழுதத் தொடங்கிய நான் 2008ம் ஆண்டு ஜனவரி 'ஜீவநதி' இதழில் 'ஆறாம் அறிவு' என்ற தலைப்பில் கவிதை ஒன்றை எழுதியிருந்தேன். அதனைத் தொடர்ந்து பல சஞ்சிகைகளில், பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்கின்றேன். சிறுவயதில் தனியான வாசகனாக மட்டும் இருந்த நான் ஆழ்ந்த வாசிப்பின் விளைவாய் இன்று கவிதை எழுதாத நாட்கள் ஏதோ ஒரு குறையை என்னுள் உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றன. என்னுள் என்று சொல்லுமளவிற்கு எழுத்து மீதும், கவிதைகள் மீதும் மிகுந்த விருப்புடன் எழுதிக் கொண்டிருக்கின்றேன்' என்றார் பூரிப்புடன்.

**கவிதை என்ற இலக்கிய வடிவத்தின் வாயிலாக நீங்கள் அடைய முயல்வது என்ன?**

'ஒவ்வொரு படைப்பாளியும் தன்னுடைய படைப்பினூடாக தான் எதனை அடைகிறேன் என்று சிந்திப்பதிலும் காட்டிலும் தனது படைப்பு சமூகத்திற்கு எவ்வாறு உதவுகின்றது என்று சிந்திப்பவர்களாக இருக்கவேண்டும். இதன் மூலம் மிகச்சிறந்த படைப்பையும் படைக்க இயலும். இப்படித்தான் நான் எனது படைப்பாக்கத்தின்போது சிந்திப்பதுண்டு' என்றவர் இந்த நேரத்தில் 'வலம்புரி, உதயன், தினக்குரல், நமது ஈழநாடு, மெட்ரோ நியூஸ் போன்ற இதழ்கள் தன் கவிதைகளை பிரசுரித்து தனக்குக் களம் அமைத்துக் கொடுத்ததாக நன்றியுடன் தெரிவித்தார்.

**இப்போது 'ஜீவநதி' சஞ்சிகையில் உதவி ஆசிரியராக இருக்கின்றீர்கள். அதுபற்றி...**

'ஜீவநதி' சஞ்சிகையில் பதினைந்துக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளேன். அதன் பின்புதான் எனது கவிதைகள் ஈழத்தில் கவனிப்புப் பெறத் தொடங்கின. அதன் பின்னர் 'ஜீவநதியின்' துணை ஆசிரியராக பொறுப்பேற்றபின் பல வெளியுலக தொடர்புகள் விஸ்தீரமாகிக்கொண்டது. ஜீவநதி வெளியீடாகவே என்னுடைய முதல் தொகுப்பான 'வெறிச்சோடும் மனங்கள்' வெளிவந்தது. இது இலக்கியத் தடாகத்தில் எனக்கு இன்னொரு அடையாள அஸ்திவாரமாகியது. இதன் பிரதம ஆசிரியராக இருக்கின்ற க.பரணீதரன் நான் சோர்வுற்றுருக்கின்ற பொழுதுகளில் எல்லாம் கவிதை எங்கே? என்று என்னை ஊக்கப்படுத்துவார்' என்று நன்றியுணர்வுடன் கூறினார்.

**படங்களும் சந்திப்பும்**
**◄ இளவரசன் ►**


**யுத்த சூழ்நிலைக்குப்பின் இன்று அவற்றைப் பிரதிபலிக்கும் கவிதைகள் வடகிழக்கில் அதிகமாகவே வெளிவருகின்றன. உங்களது பிரதேசத்தில் கவிதைச்சூழல் எவ்வாறு இருக்கின்றது?**

'எனது பிரதேசம் என்று பார்க்கின்ற போது கிராம வாயிலைத் தவிர்த்து வடமராட்சிப் பிரதேசத்தில் கவிதைச் சூழல் ஆரோக்கியமானதொரு நிலையிலேயே காணப்படுகின்றது. மூத்த படைப்பாளிகளில் இருந்து இளம் படைப்பாளிகள் வரை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இளம் படைப்பாளிகளின் வீச்சும் வேகமும் இப்பிரதேச கவிதைச் சூழலுக்கு வளம் சேர்த்து விடுகின்றன. ஆனாலும் மூத்த படைப்பாளிகளின் அனுபவம், ஆழ்ந்த வாசிப்புக்குட்பட்ட படைப்புக்கள் இப்பிரதேச இளம் கவிப் படைப்பாளிகளுக்கு தூண்டுகோலாக இருக்கின்றன'

**'வெறிச்சோடும் மனங்கள்' கவிதை நூல் வெளியீடு உங்களது எழுத்துப் பயணத்தில் எத்தகைய இடத்தைப் பெற்றுள்ளது?**

'உண்மையைச் சொல்லப்போயின் 'வெறிச்சோடும் மனங்கள்' நூல் என்னிலும் சரி, எனது கவிதைகளிலும் சரி ஏற்படுத்திய ஆரோக்கியமான தாக்கம் அளப்பரியது.

இந்நூல் வெளிவந்தபின் பல இலக்கிய சுவைஞர்களும் சமவயதையொத்த படைப்பாளிகளும் கூறிய ஆரோக்கியமான கருத்துகள் என்னை ஊக்கப்படுத்தியிருந்தன. கடந்த வருட நவம்பர் மாத வீரகேசரி செய்திக்குறிப்பில் 'தமிழர்களின் துயரங்களை பதிவுசெய்த வெறிச்சோடும் மனங்கள்' என்ற செய்திக்குறிப்பை வெளியிட்டது. மேலும் பல எழுத்தாளர்கள் நூல் குறித்த விமர்சனங்களை எழுதியிருந்தார்கள். கவிதை உலகில் எனது இருப்புக்கான அஸ்திவாரமாகவும் எனக்கும் எனது கவிதைகளுக்குமான அடையாளமும் இதுவென்பேன்' என்றார் துணிச்சலுடன்.




**எழுத்துலகைப் பொறுத்தவரை ஒரு படைப்பின் தாக்கமே இன்னொரு படைப்பின் அஸ்திவார மாகிவிடுகின்றது. ஒரு படைப்பு சிந்தனா ரீதியில் ஏற்படுத்துகின்ற சிறு அதிர்வு இன்னொரு படைப்பை ஆக்குவதற்கான வேகத்தை எழுத்தாளனுக்கு வழங்குகின்றது. உங்களது வாழ்க்கையிலும் அவ்வாறான பாதித்த கவிதைகள் பற்றிய மனப்பதிவுகள் இருக்கின்றனவா என்று கேட்டேன்.**

'பல கவிதைகளை உணர்வு ரீதியில் படித்ததன் விளைவுதான் எனது கவிதைகளுக்கான நிலைக்களமாக இருக்கின்றது. தமிழ்க் கவிதைச் சூழலில் நான் பல கவிதைகளை படித்துள்ளேன். ஆனால், சில கவிதைகள் என்னில் ஏற்படுத்திய தாக்கங்கள் அளப்பரியவை. வாசிப்பு




முடிவில் அடுத்த பக்கத்தை புரட்ட முடியாத உணர்வுகளை சில கவிதைகள் ஏற்படுத்துவதுண்டு. இவ்வகையில் கடந்த ஜீவநதி ஆண்டு மலரில் வெளிவந்த புலம் பெயர் கவிஞரான திருமாவளவனின் 'சிதம்பர ரகசியம்' என்ற கவிதை என்னைப் பாதித்து வித்தியாசமான சிந்தனைக்கு இட்டுச் சென்றது என்பேன். அடுத்து கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'தென்னிலங்கை தோழனுக்கு' என்ற கவிதையையும் சொல்ல முடியும். இக்கவிதை 1986 மல்லிகை ஜூன் இதழில் வெளியாகியிருக்கின்றது. அடுத்து இ.சு முரளிதரனுடைய 'பூதகியிடமும் பால் குடிப்போம்' என்ற கவிதையும் என்னைப் பாதித்த கவிதைகள் என்பேன். அடுத்து தமிழக கவிஞரான 'மனுஷ்ய புத்திரனின்' எனது படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள்' தொகுதியில் இடம் பெற்ற 'சபிக்கப்பட்ட நகரம்' என்ற கவிதையும் என்னை வெகுவாக பாதித்தன' என அடுக்கிக் கொண்டே போனார்.

**உங்கள் கவிதைகளில் அதிகம் பாதிப்புச் செலுத்தும் உள்ளடக்கங்கள் எவை?**

'எனது கவிதைகளில் தனியே ஒரே மாதிரியான உள்ளடக்கங்களை மாத்திரம் நான் எழுதிக் கொள்வதில்லை. அனைத்து மன உணர்வுகளுக்கும் எனது கவிதைகளில் நான் இடம் கொடுத்திருக்கின்றேன். ஆனாலும் பெரிதும் மனித அவலம்,துயரம்,இழப்புஎன்பவற்றையும் மனிதம் கண்டிருக்கின்ற ஜீரணிக்க முடியாத இழப்புகள், வலிகள் என்பவற்றை பெரிதும் உள்ளடக்கமாக கொண்டுள்ளேன்.

ஆனாலும் காதல் உணர்வு, இயற்கை வர்ணனை என பரந்துபட்ட உள்ளடக்கங்களையும் எனது கவிதைகள் கொண்டுள்ளன. மிகவும் எளிய சொற்பதங்களையே எனது கவிதைகளில் பயன்படுத்தி வருகின்றேன். ஒட்டுமொத்தமாகச் சொல்லப் போயின் எனது கவிதைகளில் சமூகத்தையும் சமூக பிரச்சனைகளையும் பதிவு செய்யவேண்டும் என்பதில் குறியாக உள்ளேன்' என்றவரிடம்

**சமகால சிற்றிதழ்கள் கவிதைகளுக்கு எவ்வளவுமுக்கியத்துவம்கொடுக்கின்றன?**



'இலங்கையைப் பொறுத்தவரை கவிதைகளுக்கான களங்களாக இச்சிற்றிதழ்கள் இருக்கின்றன. அண்மைக்காலமாக பல சிற்றிதழ்கள் இளம் கவிஞர்களை ஊக்குவிக்கும் நோக்கோடு அவர்களது கவிதைகளை பிரசுரித்து களம் கொடுக்கின்றன. இவை இளம் படைப்பாளர்களுக்கு பெரும் ஊக்கமாக இருக்கின்றது. எனது கவிதைகள் பல சிற்றிதழ்களில் வெளிவந்திருக்கின்றன. அப்படி முன்னணி சஞ்சிகைகளில் எனது கவிதைகள் இடம்பெறுகின்றபோது அவை தொடர்பான விமர்சனங்கள் ஆரோக்கியமான தாக்கத்தை செலுத்துகின்றன. ஆனால் இளம் படைப்பாளிகள் தாம் அனுப்புவதையெல்லாம் சிற்றிதழ்கள் பிரசுரித்தால் என்ன என்ற மாறுபட்ட கருத்து நிலையில் இருந்து மாறவேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்.

**இவ்வருட நடுப்பகுதியில் தன்னுடையஇரண்டாவதுகவிதைத்தொகுப்பை வெளியிட இருப்பதாக எம்மிடம் கூறி மகிழ்ந்த துஷ்யந்தனிடம் கவிதை உலகில் நுழையும் இளையவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்டேன்.**

'அறிவுரை சொல்லுமளவிற்கு நான் பெரியவன் அல்லன். இருந்தாலும் நன்றாக வாசியுங்கள், நூல்களை தேர்ந்தெடுக்காமல் கவிதைகளை நன்றாக ஆழமாக வாசியுங்கள். நல்ல வாசிப்புத்தான் நல்ல படைப்பாளியை உருவாக்கும். சமூக அக்கறை, மக்களின் செயற்பாடுகளை பதிவுசெய்யுங்கள். இளம் படைப்பாளிகள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தொகுப்பு நூல் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்பதற்காக எழுதக்கூடாது, நிறைய தொகுப்பு போட்டால் நிலைக்கலாம் என்று நினைக்கக்கூடாது. ஒரு தொகுப்பு போட்டாலும் அது சமூகப் பெறுமானம் உடையதாக அமையும்படி எழுதுங்கள். நிச்சயமாக கவிதை உலகில் வலம் வருவீர்கள்' என்றவரிடம் விடைபெற்றோம்.

புதிய தலைமுறை எழுத்தாளர்கள் நல்ல படைப்புகளை வாசகனுக்குத் தருவதில் குறியாக இருக்கவேண்டும். அத்தோடு மக்களின் வாழ்க்கை, இந்த காலகட்டத்துக்கு பொருத்தமான படைப்புகளே மாற்றத்தை உருவாக்க உதவும். அனுபவத்தால் முதிர்ந்த கவிஞர்களுடைய கவிதைகளை வாசிப்பதுடன் அவர்களின் ஆலோசனைகளும் இவரைப் போன்ற வளர்ந்து வரும் கலைஞர்களுக்குஅவசியமே.ஒருஎழுத்தாளனின் எழுத்து என்பது ஒரு கூறிய ஆயுதத்திற்கு ஒப்பானது. அதனைத் தீட்டிக்கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் அதன் வலிமை எல்லோருக்கும் புரியும். இன்று எம்கையில் இருக்கும் ஒரே ஆயுதம் பேனா மட்டுமே, அதனைச் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

## அரங்கேறிவரும் அவலநிலை

சமாதானச் சூழ்நிலைதானே
சந்தோஷமாக வாழ்வோம்
அனேகமானவர்களின்
அவாவாக இருந்தது?

மீள் குடியமர்த்தப்படல்
மீளப் பார்த்துக் கொண்டிருந்தோம்
வாய்ப் பேச்சாகவே
வலம் வந்தவை நிஜமாகவில்லை

வெள்ளை வான் விவகாரம்
வேகமாய் தொடர்ந்த வண்ணமுள்ளது
பயப் பீதியில் அன்றாடம்
பதற்றத்தோடு படுத்துறங்குகிறோம்

கண்ணிமைக்குமுன்
காவு கொண்டுவிட்டான்
இடம் பெயர்ந்தபோது
இடை மறித்த மிதிவெடிகள்

நிம்மதியிழந்து
நிர்க்கதியானோம்
அடிமைப் பட்டுவிட்டோம்
அரியதொரு வட்டத்துக்குள்
அன்றாடம் அவலநிலைதான்?

- அ. ராஜேந்திரகுமார்
ஹொப்டன்.



## நாணமில்லா நேரிழையின் நடத்தைக்கு ஒப்பாகும்

நிர்வாணங்களை மறந்த
உச்சந்தலை அலங்காரங்கள்
நிர்மாணம் செய்துள்ள
கோட்டைக்குள்ளே
துர்நாற்றம் கவிந்துள்ளது
சாந்தி சமாதானம்
கொண்டுவரும்
தென்றலின் சுகமுந்தான்
தூரமாகிப் போகின்றது.

தொட்டிலில் துயில்கொள்ளும்
குழந்தைக்கும் தொல்லைதான்
முட்டி மோதும் துயரங்களும்
இமாலயமாய்ப் போகின்றது.
அரச மரக்கிளையொன்றை
ஆகாய விமானத்தில்
முரசறைந்து அனுப்புகிற
சடங்குகளும் கச்சிதமாய்
நடக்கிறது.

யுத்தக் கொடுமைகள்
அதர்மங்கள் அநியாயங்கள்
முத்தம் கொடுத்து
முன்னேறிக் காய்நகர்த்தும்
காட்சிகளும் எம்முன்னே
களியாட்டம் செய்கிறது
மீட்சிக்கு வழிகாண
முடியாத நிலைமைதான்
தீர்வாகிப் போகிறது.

அக்கினிக் குழிக்குள்ளே
சத்தியமும் நேர்மையுந்தான்
அடைக்கலமாய்ப் போனதையும்
படைத்தவனும் நன்கறிவான்
வக்கிரமும் விறைப்பான -
வார்த்தைகளும் இம்மண்ணில்
உக்கிரமாய்ப் போகின்ற
நிலைமைதான் யதார்த்தமாகும்.

கடல் நீரைத் தரையாக்கி
நகரொன்றை உருவாக்க
கோடி பணம் கொட்டவும்தான்
திட்டங்கள் உண்டென்றால்
உடல் வெந்து நொந்து போன
உள்ளங்களின் மறுவாழ்வு
கனவாகிப் போவதுதான்
சரியான தீர்வாமோ?
மானிட நேயத்தை மயான
பூமிக்குள்
கொண்டு செல்லும் தேரோட்டம்
நாணமில்லா நேரிழையின்
நடத்தைக்கு ஒப்பாகும்.
கோனிடமும் கோணலான
புத்திதான் உள்ளதனால்
கோமேதக வாழ்வெமக்கு
எட்டாக்கனிதானோ?

ஊமைகளாய் ஆமைகளாய்
உறங்கியது போதும் போதும்
தீமைகளைச் சாம்பலாக்க
விரைந்து வா! விடை காண்போம்
துப்பாக்கிக் கலாசாரம்
துவம்சங்களைக் கக்குவதால்
எப்பாடு பட்டேனும்
நிம்மதியை உருவாக்கும்
செம்மையான வாழ்வுக்கு
வழிகாண எழுவோமே!

- அ.மு. பாறூக்






# 6 மாதங்களுக்கான இலவச Anti Virus

F-Secure

நமது கணனியில் இணைய இணைப்பு இருந்தால் கட்டாயம் ஒரு எண்டி வைரஸ் நிறுவியேயாக வேண்டும். கணனியில் Operating System ஐ நிறுவியவுடனே இந்த Antivirus மென்பொருளை Install செய்ய வேண்டும். தற்போது F-Secure என்ற Antivirus ஆறு மாதங்களுக்கு இலவசமாக பயன்படுத்தக் கிடைக்கின்றது.

மென்பொருள் தரவிறக்கச் சுட்டி: http://www.facebook.com/pages/F-Secure/107471754306?sk=app_10467688569




சுட்டியில் குறிப்பிட்ட தளத்திற்குசென்று, Facebook பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை உள்ளிடவும். பின் Like என்னும் பொத்தானை அழுத்தவும். Like பொத்தானை அழுத்தியவுடன் முகப்பு திரையானது விலகும். அதில் உங்களுடைய மின்னஞ்சல் முகவரி மற்றும் நாட்டினை தெரிவு செய்யவும். பின் Submit பொத்தானை அழுத்தவும். உங்களுக்கான கடவுச் சொல் உங்களுடைய மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.


அடுத்ததாக மின்னஞ்சல் முகவரியை Open செய்து, புதிதாக வந்துள்ள மின்னஞ்சலை Open செய்யவும். அதில் லைசன்ஸ் கீ மற்றும் Antivirus மென்பொருளை பதிவிறக்கம் செய்வதற்கான சுட்டி கிடைக்கும். மென்பொருளை இணையத்தின் உதவியுடன் பதிவிறக்கி, லைசன்ஸ் கீயை பயன்படுத்தி மென்பொருளை உங்களுடைய கணனியில் முழுமையாக பதிந்து கொள்ளவும்.




இந்த லைசன்ஸ் கீயினை கொண்டு F-Secure இண்டர்நெட் செக்கியூரிட்டியை 6 மாதம் வரை மட்டுமே இலவசமாக பயன்படுத்த முடியும். இந்த Antivirus மென்பொருளானது கணனிக்கு மிகவும் பாதுகாப்பான Antivirus மென்பொருள் ஆகும். ஸ்பைவேர்கள் நம் கணனியில் இருந்து தகவல்களை திருடாமல் இருக்கவும் இந்த மென்பொருள் உதவி செய்கிறது. வைரஸ் தொடர்புடைய வெப்சைட்களையும் இந்த Antivirus மென்பொருள் முடக்குகிறது.

# பாதிப்படைந்த கோப்புகளை மீளப்பெறுவதற்கான வழி

வைரஸ் போன்ற பிரச்சினைகளால் சிலவேளைகளில் Microsoft Word, excel, power point கோப்புகள் திறக்க முடியாமல் இருக்கும். இப்போது அதிலுள்ள தகவல்களைப் பாதுகாப்பாக பெற்றுக்கொள்வதற்கு Corrupt office 2 txt என்ற இலவச மென்பொருள் ஒன்று உள்ளது.



Corrupt office2txt

File Help

Euro Foreign Exchange References Rates

Historical Data

This information has been collected from the website of the European Central Bank. Use at your own risk.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Date | USD | JPY | CYP | CZK | DKK | EEK | GBP | HUF | LTL |
| LVL | MTL | PLN | SEK | SKK | CHF | ISK | NOK | AUD | CAD |
| HKD | KRW | NZD | SGD | ZAR | | | | | |
| 39202 | 1.3605 | 162.82 | 0.5826 | 28.123 | 7.4505 | 15.6466 | 0.6827 | 247.18 | 3.4528 |
| 0.6978 | 0.4293 | 3.781 | 9.1523 | 33.727 | 1.6458 | 87.44 | 8.1265 | 1.6427 | 1.5187 |
| 10.6396 | 1266.49 | 1.8393 | 2.0679 | 9.5946 | | | | | |
| 39199 | 1.3643 | 162.76 | 0.5821 | 28.166 | 7.4501 | 15.6466 | 0.68225 | 245.98 | 3.4528 |
| 0.698 | 0.4293 | 3.7786 | 9.1435 | 33.655 | 1.6431 | 87.67 | 8.138 | 1.6423 | 1.5235 |
| 10.6701 | 1267.64 | 1.8385 | 2.0683 | 9.5915 | | | | | |
| 39198 | 1.3596 | 162.26 | 0.5821 | 28.115 | 7.4507 | 15.6466 | 0.68215 | 245.88 | 3.4528 |
| 0.6979 | 0.4293 | 3.7744 | 9.152 | 33.579 | 1.6432 | 87.66 | 8.1185 | 1.6409 | 1.5236 |
| 10.6343 | 1263 | 1.8405 | 2.0597 | 9.5143 | | | | | |

தரவிறக்கச் சுட்டி: http://godskingsandheroes.info/software/

இத்தளத்திற்கு சென்று Download Link என்று கொடுக்கப்பட்டிருக்கும் இணைப்பை சொடுக்கி மென்பொருளை கணனியில் எளிதாக தரவிறக்கலாம். தரவிறக்கிய மென்பொருளை நம் கணனியில் நிறுவி இயக்கியதும் File என்பதை சொடுக்கி Open என்பதை தேர்ந்தெடுத்து பாதிக்கப்பட்டுள்ள கோப்பை தேர்ந்தெடுக்கவும்.

உடனடியாக பாதிக்கப்பட்டுள்ள கோப்புகளில் உள்ள Content நமக்கு Text Content-Mf Recover செய்து மாற்றி கொடுக்கப்படும். doc, docx, xls, xlsx, ppt, pptx, odt, ods, and odp போன்ற போர்மட்களுக்கு துணைபுரியும் வண்ணம் இந்த இலவச மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

WINDOWS KEY -> START
WIN+R -> RUN DIALOG BOX
WIN+M -> WINDOWS MININIZE
WIN+E -> MY COMPUTER
WIN+F -> SEARCH OPTION
WIN+D -> ALL WINDOWS MINIMIZE
WIN+Pause -> SYSTEM PROPERTIES
ALT+Space Bar+N ->PROGRAMME MININIZE
ALT+Space Bar+R -> PROGRAMME RESTORE
Shift+Delete -> Permanent Delete




# Flash Drive USB DEFENDER




நமது Flash Driveகளை வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாக்க இலவசமாக கிடைக்கக்கூடிய USB DEFENDER எனும் மென்பொருள் உள்ளது. இதை தரவிறக்கி நமது Flash Drive இல் நிறுவி வைத்துக் கொண்டால், இது ஒரு தடுப்பு மருந்துபோல செயற்பட்டு Flash Drive ஐப் பாதுகாக்கும் .

இதை செயற்படுத்த இந்த portable மென்பொருளை தரவிறக்கி நமது Fash Drive இல் நிறுவிக் கொள்ளவேண்டும். நமது Flash Driveஐ கணனியில் இணைத்து திறந்து USB DEFENDERஐ இயக்கவேண்டும்.




இப்போது படத்தில் உள்ளவாறு Protect மற்றும் Unprotect என இரு OPTIONகள் இருக்கும். இதில் Protect ஐ அழுத்த வேண்டும். இனி Flash Drive மூலம் ஆகக்கூடிய வேலைகளை தைரியமாக மேற்கொள்ளலாம்.

தரவிறக்கச் சுட்டி: http://www.softpedia.com/progDownload/USB-Defender-Download-155986.html

# உங்கள் முகம் சேர்த்து அனிமேசன் வாழ்த்து


ஒரு அனிமேசனில் உங்கள் முகத்தோடு உங்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பலாம். என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா?

http://www.got-free-ecards.com/

இத்தளத்திற்கு சென்று நாம் எந்த வகையான வாழ்த்துச்செய்தி அனுப்ப வேண்டுமோ அதற்கான வாழ்த்து அட்டையின் படத்தை சொடுக்கி அடுத்து வரும் திரையில் Personalize Card என்பதை சொடுக்கி கணனியில் இருக்கும் நம் புகைப்படத்தை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். அடுத்து படத்தில் Zoom in அல்லது Zoom Out என்ற முறையில் Size என்பதை சொடுக்கி பொருத்தமாக நம் முகம் மட்டும் தெரியும்படி மாற்றி அமைத்து பின் Done என்பதை சொடுக்கி வெளியே வரலாம்.

இனி Play Card என்பதை சொடுக்கி நாம் அனிமேசனில் நாம் அனுப்ப இருக்கும் வாழ்த்தைப் பார்க்கலாம். அடுத்து யாருக்கெல்லாம் அனிமேசனில் வாழ்த்து அனுப்ப வேண்டுமோ அவர்களின் பெயர் மற்றும் ஈ-மெயில் முகவரி மற்றும் வாழ்த்துச் செய்தியையும் கொடுத்து Send Now என்ற பொத்தானை சொடுக்கி அனைவருடனும் பகிர்ந்து கொள்ளலாம்.





## சட்டம் பேசுகிறது

# குசுமாவதி, சமிந்த இரட்டைக் கொலை வழக்கு

## எதிரிகள் இருவருக்கும் மரண தண்டனை விதிப்பு



கணவன் பிரியந்த, மகள் டில்ஹானி ஆகியோரைக் கொண்ட சிறு குடும்பமே குசுமாவதியின் குடும்பமாகும். இவர்களுக்கு சமிந்தகுமார என்ற நண்பன் ஒருவனும் இருந்தான். 1999ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ந் திகதி பிரியந்தவின் வீட்டில் ஒரு சிறு உற்சவம் நடக்க இருந்தது. பிரியந்த சமிர்தவையும் இரவுச் சாப்பாட்டிற்கு வருமாறு அழைத்திருந்தார்.

அனைவரும் விருந்துக்கு முன்னர் நடைபெறுகின்ற கலகலப்பான கலந்துரையாடலையும் வேறு பானங்களையும் பருகியதன் பின்னர் இரவு உணவை உண்பதற்காக எழுந்த போது திடீரென்று சேனக புஷ்பகுமாரவிதான என்பவனும் கயான் சம்பத் கோறளகே என்பவனும் பிரியந்தவின் வீட்டிற்குள் நுழைந்து பிரியந்தவையும் சமிந்தவையும் தாக்கத் தொடங்கினர். சேனகவின் கையில் கித்துல் கம்பும் கத்தியும் இருந்தன. மற்றையவனின் கையில் வாள் இருந்தது. தாக்குதல் பலமாக இருந்ததுடன் குசுமாவதியும் சமிந்தவும் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகினர். பிரியந்த தனது 12 வயது மகளான டில்ஹானியுடன் ஓடிச்சென்று ஒரு அறைக்குள் ஒளிந்துகொண்டு அறைக்குள் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டார். இவர்களது தாக்குதலால் பிரியந்தவின் மனைவியான குசுமாவதியும், சமிந்தவும் உயிரிழக்க வேண்டியதாயிற்று மற்றைய இருவரும் ஒளிந்துகொண்டதால் தப்பிப்பிழைத்தனர்.

பொலிஸார் மேற்படி கொலைகாரர்களான சேனகவுக்கும், கயானுக்கும் எதிராக கொலை வழக்கை அவிசாவளை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். சட்டமா அதிபர் திணைக்களம் பொலிஸாரின் சார்பில் வழக்கை நடத்தியது. வழக்கின் இறுதியில் மேல் நீதிமன்றம் இருவருக்கும் மரணதண்டனையை விதித்தது. மரணதண்டனையை பெற்ற இருவரும் மேன்முறையீடு செய்தனர். மேன்முறையீட்டில் பல்வேறு சட்டப் பிரச்சினைகளை எதிரிகளின் சட்டத்தரணி எழுப்பினார். அவற்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்து, எதிரிகளுக்கு அவிசாவளை மேல் நீதிமன்றம் விதித்த தண்டனையை உறுதிப்படுத்தியது.

இந்த வழக்கில் பின்வரும் சட்டப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. குசுமாவதியையும் சமிந்தவையும் கொல்ல வேண்டுமென்ற நோக்கத்துடன் எதிரிகள் தாக்கினார்களா? அல்லது உடலில் காயங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் தாக்கியமை காலப்போக்கில் மரணத்தை விளைவித்ததா? என்பதை மேல் நீதிமன்றம் கவனத்தில் எடுக்காமல் தண்டனை வழங்கியது என்பதாகும்.

இதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. 'அ' என்பவர் 'ஆ' என்பவரைத் தாக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் வாளால் அல்லது கூரிய ஆயுதங்களால் தாக்குகின்றார் என வைத்துக்கொள்வோம். இதன் பலனாக 'ஆ' நீண்ட நாட்களின் பின்னர் இறக்கின்றார். இங்கு 'அ' கொலைக் குற்றத்திற்கு ஆளாகின்றார். இவர் தாக்கும்போது கொலை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் தாக்காமல் உடலுக்குதீமைஏற்படுத்தவேண்டும்என்றஎண்ணத்துடனேயே காயம் விளைவிக்கின்றார். ஆனாலும் நீண்ட காலத்தின் பின்னர் அக்காயத்தால் தாக்கப்பட்டவர் இறந்ததால் அது கொலையே என்று மேன்முறையீட்டு நீதி மன்றம் கூறியது.

மரண அறிக்கையின்படி வைத்திய அதிகாரி கூறியுள்ளது என்னவெனில் குசுமாவதியின் 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம், 13ஆம் காயங்கள் பாரதூரமானவை. இவற்றில் 11ஆம் காயம் நீண்ட காலத்தின் பின்னர் உயிரைப் பறிக்கக் கூடியது. ஆகவே, குசுமாவதியைக் கொல்லவேண்டுமென்ற எண்ணமில்லாமல் உடலில் காயங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் தாக்கிய ஆயுதங்களையும் முறையையும் பார்த்தால் அது கொலைக்குள்ளேயே வருகிறது என்றது மேன்முறையீட்டு நீதிமன்றம்.



சட்டத்தரணி. கே.ஜீ. ஜோன்

சமிந்தவின் காயம் தலையில் வாளால் வெட்டப்பட்ட காயமாகும். இவனது மூளை வெட்டப்பட்டு இரத்தம் பீச்சிட்டுக்கொண்டு இருந்தது. இந்தக்காயத்தால் அவன் இறந்ததால் இதுவும் கொலை என்றே கொள்ளவேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.

சில கொலைகளைப் பொறுத்தவரையில் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் உடலில் காயங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் பல காயங்களை உண்டாக்கும் எதிரியைக் கொலைக்குள் கொண்டுவர முடியாது என்பது உண்மையே. ஆயினும் வழக்குக்கு வழக்கு இது வேறுபடுகின்றது. இந்த வழக்கைப் பொறுத்தவரை கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் இருந்தது என்பதை கவனிக்கத்தேவையில்லை என்றும் நீதிமன்றம் கூறியது.

இரண்டு எதிரிகளுக்கும் குசுமாவதியையும் சமிந்தவையும் கொல்லவேண்டும் என்ற பொது எண்ணம் இருந்தது என்பது நிரூபிக்கப்படவில்லை என்பதாகும். ஒருவரைக் கொல்ல வேண்டுமென்று சிலர் தனிப்பட விரும்புகின்றனர். அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒருவரைத் தாக்கும்போது தமது தனிப்பட்ட விருப்பத்தை நிறைவேற்றுகின்றனரா? அல்லது எல்லோரது பொது எண்ணத்தை நிறைவேற்றுகின்றனரா? என்பது நிகழ்வுப் பிரச்சினையாகும். இந்த வழக்கில் பிரதான எதிரி செய்வதற்கெல்லாம் மற்ற எதிரி உதவி புரிந்திருப்பதுடன் பிரதான எதிரியுடன் கதைத்துக்கொண்டும் தாக்கியுள்ளார். ஆகவே, அவர்கள் இருவருக்கும் பொதுவான எண்ணம் இருக்கவில்லை என்பதை நீதிமன்றம் ஏற்கமுடியாது என்றது.

கொலை செய்வதற்கு பாவிக்கப்படட்ட கத்தி, வாள், கம்புகள் என்பன தங்களால் பொலிஸாருக்கு காண்பிக்கப் படவில்லை என்றும் அதுபற்றி தமக்கு ஒன்றும் தெரியாது என்றும் ஆனால், அவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டதால் தமக்கு தீமை விளைவித்துள்ளது என்றும் கூறினார்.

பொலிஸார் இதற்கு மறுப்புத் தெரிவித்ததுடன் எதிரிகளின் வாக்குமூலத்தில் இருந்தே கொலைசெய்யப்பட்ட ஆயுதங்கள் இருந்த இடத்தை தாங்கள் கண்டுபிடித்ததாகவும் அவ்வாயுதங்களை சாட்சிய சட்டத்தின் 27ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்தில் முன்வைக்க முடியும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியது.

ஆகவே எதிரிகளின் சார்பில் எடுக்கப்பட்ட பாதுகாப்புக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. கொலைக்கு விதிக்கப் பட்ட மரணதண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இலங்கை மரணதண்டனை நிறைவேற்றம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் எதிரிகள் தூக்கிலிடப்படவில்லை. ஆயினும் இது அதியுயர் ஜனாதிபதியினால் ஆயுள்கால தண்டனையாக அல்லது எண்ணிக்கை கூறப்பட்ட வருடங்களாக மாற்றப்படும்வரை அவர்கள் தூக்குக்கு நியமிக்கப்படுபவர்களாகவே சட்டம் கொள்ளும்.

## ◄ சிலோன் சின்னத்தம்பி ►

*வணக்கம் பாருங்கோ! எப்பிடிச் சுகமா இருக்கிறியளே?*

*மோன ஒரு விசயம் கேட்டியளே.வெளிநாட்டுக்காரரிண்ட காணியள காட்டிக் கொடுத்தா அதுகள காட்டிக் குடுக்குறவையளுக்கே சொந்தமாக்கித் தாறமெண்டு ஒரு குறூப் வரிஞ்சு கட்டிக்கொண்டு திரியுதாம் பாருங்கோ. கோண்டாவில் பக்கம் முழுக்க இப்ப உதுதான் நியூஸ் மோன அதுவும் காணிச் சொந்தக்காரரிண்ட அனுமதியோட செஞ்சு தாறமெண்டெல்லே வாக்குக் குடுக்கினமாம்.*

*என்னடாப்பா உது பம்மாத்தெண்டு விளங்கேல்லயோ? உவங்கட சமூகசேவையை நினைச்சா எனக்குப் புல்லரிக்குதடாப்பா. யாழ்ப்பாணத்தில பக்திப் பரவசத்தில இப்ப எல்லாக் கோயிலையும் தூசு தட்டி திருவிழா கொண்டாடுறது பெசனாகிட்டுது பாருங்கோ. உது நல்ல விசயந்தான் மோன. ஆனா, உந்தத் திருவிழாவால பள்ளிப் படிப்புக் குழம்புது எண்டால் கொஞ்சம் கவலைதானே மோன. உங்க இனுவிலுக்க இருக்கிற பிள்ளையார் கோவில் ஒண்டில ஸ்பீக்கர் வச்சுப் பாட்டைப் பெலத்தாப் போடுறாங்களாம். பக்கத்தில ஒரு பெரிய பள்ளிக்கூடமொண்டு இருக்குது. அதிபரும் ஆசிரியரும் கோயில் நிர்வாகத்திட்டச் சொல்லிக் களைச்சுப் போட்டினமாம் பாருங்கோ. ஏனடாப்பா கோயிலைச் சுத்தியிருக்குற பிள்ளையள் தானே படிக்குதுகள். தங்களைக் கலாசாரக் கா[த]வலர்களெண்டு சொல்லித் திரியிறவையள் இதையும் கொஞ்சம் என்னண்டு பாக்கணும் மோன...*

*படிப்பில சும்மா விளையாடக்கூடாது பாருங்கோ.... சிவ!!! சிவா!!!*

*அப்ப நான் போட்டு வரட்டே...!*



## நிகழ்விழந்த நினைவு

*நித்தமும் இங்கு*
*கண்ணீர்ச்சுவடு*
*எரியும் நிலையில்*
*பூவின் கருகல்*

*பொலிவிழந்த*
*மணவாழ்க்கை*
*நரகத்தின் மடியில்*
*தொகுப்பெடுப்பு*

*உயிர் திரவம்*
*ஒய்ந்து போகிறது*
*அகதி கொடூரம்*
*நிலுவை காணுது*

*செத்து விட்ட*
*மனிதத்தினை*
*தேடி அலையும்*
*ஜீவனுக்குள்ளே!*
*எத்தனையோ*
*வேதனைகள்*
*ஏமாற்றப்*
*படிநிலைகள்*

வே.வே. அகிலேஸ்வரன்
மருதங்கேணியூர்



**'உனது வாழ்க்கையில் என்னென்ன நடந்தனவோ அவற்றின்பயனாகஉருவாகியநீயாகவும்நீஇருக்கலாம். அல்லது, நடந்த சம்பவங்களின் காரணமாக நீ எதுவாக இருக்க விரும்புகிறாயோ, அதைப் பற்றி ஏதும் செய்வதனால் நீ யாராக மாறுகிறாயோ, அப்படியும் நீயாக உருவாகலாம். இந்த இரண்டாவது முறையிலேயே உன்னை நீ உருவாக்குவது உனது முழுப் பிரக்ஞையுடன் நடக்கின்றது..'**



# தத்துவ விசாரம்

இது புதுக் காதலர்களுக்கும் புதுமணத் தம்பதிகளுக்கும் அதிகமாக நிகழும் விடயம்தான். வாழ்க்கைத் துணைவராக ஒருவர் கிடைத்தவுடனேயே அவர்களது கற்பனை எகிறிப் பாய்கின்றது. எனது கணவர் பார்க்க ஸ்மார்ட்டாகவும் கதைக்க புத்திசாலி யாகவும் இருக்க வேண்டும். அன்போடு அக்கறையோடு நடக்க வேண்டும். ரொமான்டிக்காக விசேட தினங்களில் மலர்கள் பரிசாக அளிக்கவேண்டும். நிறையக் காசு உழைத்து தங்களை வசதியாக வாழ வைக்கவேண்டும். என்று இப்படியெல்லாம் பெண்கள் கற்பனை செய்வார்கள்.

ஆண்களோ தமது மனைவி கட்டிலில் ரதியாகவும் வாழ்க்கையில் தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் பராமரிக்கும் தாயாகவும் இருக்க வேண்டும். சமையல் கைவண்ணத்தில் 'ஃபைவ் ஸ்டார் ஹொட்டேல்' ரேஞ்சில் இருக்கவேண்டும் என்றெல்லாம் எதிர்பார்ப்பார்கள். இருபாலாருமே, தமது துணையைத் தேடிக்கொண்ட பின்பேதான் தமது வாழ்க்கை பூரணமாகிவிட்டது என்று அடித்துக் கூறுவார்கள்.



இதெல்லாம் ஒருசில வருடங்களுக்குத்தான். பிறகு பார்த்தால் நாளும் பொழுதும் போர் அடிக்கும் வாழ்க்கை தொடங்கிவிடும். இதைவிட மோசமான உறவுகளில் 'நீ இப்ப சரியா மாறிவிட்டாய்..' என்கிற குற்றச் சாட்டுக்கள் மலிந்துவிடும். நாற்பது வயதுக்கப்பாலும் முதலிரவு 'மெஜிக்' குறையாமல் அன்பும் சுவாரசியமும் நிறைந்த வாழ்க்கையை வாழும் தம்பதிகள் நம்மில் எத்தனை பேர்? அதன் பிறகு மற்றவரைப் பற்றிய எங்களுடைய எதிர்பார்ப்புக்கள் குறைந்து குறைந்து வந்து கடைசியில் ஒன்றுமே இல்லாமலும் போகிறது. ஏன் இப்படி வாழ்க்கை கசந்து போகிறது?


அனேகமானோர், இதனால் தமக்கு எவ்வளவு நன்மை விளையும், தமது தேவைகள் எவ்வளவு பூர்த்தியாக்கப்படும் என்கின்ற எதிர்பார்ப்புக்களின் காரணமாகத்தான் உறவுகளை ஏற்படுத்துகின்றனர். ஆனால், அந்த உறவுக்காக, தான் எவ்வளவு கொடுக்கலாம் என்பதைச் சிந்திப்பவர் வெகு சிலரே. மற்றவரைப் பற்றிய அதீத எதிர்பார்ப்புக்களுடன் வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது அந்த மற்றவரும் 'அப்படி'யாயிருக்க பகீரதப் பிரயத்தனம் செய்வார். ஆனால் எவ்வளவு காலம் இப்படிப் பாசாங்கு பண்ணுவது? தொடர்ந்து தான் அல்லாத ஒருவராக இருக்க முடியாமல் ஏதோவொரு காலத்தில் தான் தானாக இருக்கவிழைவார். அப்போதுதான் கட்டிய நம்பிக்கைக் கோட்டைகள் தகர்க்கப்பட ஆரம்பிக்கின்றன. 'நான் நினைக்கவேயில்லை நீ இப்படிப்பட்டவன் என்று' எனச் சண்டைகள் உதயமாகும்.

நம்முடைய எந்த இயல்புகள் இந்த உறவினால் விருத்தியடைந்து வெளிக்காட்டப்படுகின்றது என்பதை நாமே உணருவதுதான் நாம் உறவுகளை உருவாக்குவதன் நோக்கமாகும். எம்முடைய துணைவர் எவ்வளவு தூரம் எமக்குக் கட்டுப்பட்டு எமது விருப்பத்தின்படியே நடக்கிறார் என்று பார்ப்பதுதான் எந்த உறவினதும் நோக்கமாக இருந்தால், அந்த உறவு விரிசல் காண்பது நிச்சயமாகும்.

நாங்கள் இயற்கையிலேயே பூரணமானவர்கள். எம்மைப் பூரணப்படுத்த வேறு யாரும் தேவையில்லை. ஆனால் ஏனையவர்கள் இல்லாமல் எமது பூரணத்தை நாம் உணர முடியாது என்பதனால் அவர்களில்லாமல் நாங்கள் இல்லை என்பதும் உண்மையாகும். மற்றவர்கள் எவ்வளவு தூரம் எங்களது உயர்ந்த எதிர்பார்ப்புக்களைத் திருப்திப் படுத்தினார்கள் என்பதை விட, நாங்கள் எவ்வளவு தூரம் அவர்களது எதிர்பார்ப்புக்களைத் திருப்திப்படுத்தினோம் என்பதையும் விட, நாங்கள் எவ்வளவு தூரம் எங்களைப் பற்றிய எங்களது எதிர்பார்ப்புக்களைத் திருப்திப்படுத்தினோம் என்பதே முக்கியமாகும்.

இருவருக்கிடையில் என்ன நடந்தாலும், அதைப் பற்றி என்ன செய்வதால் அவர்கள் ஒவ்வொருவரும் தம்மைத் தமக்கே இனங்காட்டிக் கொள்ளலாம் என்பதை அனுபவ பூர்வமாக உணர வைப்பதே எங்கள் சொந்தங்களும் உறவுகளும் எமக்குச் செய்யும் மிகப்பெரிய உபகாரம் என்பதை மறக்காதீர்கள்.

**◄ ரிஷி பத்தினி ►**





**நூல்: ஒரு குடம் கண்ணீர்**
**வெளியீடு: யாத்ரா**
**விலை: ரூ. 300**
**தொடர்புகளுக்கு: 37 , ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, மாபோளை, வத்தளை.**

எப்பொழுதும் வித்தியாசமான படைப்புக்களை சமூகத்திற்கு தரும் அஷ்ரஃப் சிஹாப்தீனின் மற்றுமொரு படைப்பு 'ஒரு குடம் கண்ணீர்'. யாத்ராவின் வெளியீட்டில் வந்திருக்கும் இந்நூல் முழுக்கமுழுக்க உண்மைக் கதைகளின் தொகுப்பாக அமைந்திருக்கின்றது.

இன்று உலகில் எங்கு பார்த்தாலும் சித்திரவதைகள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒருவருக்கு பிடிக்கவில்லை என்றால் அது அமிர்தமாக இருந்தாலும் சித்திரவதைதான். இது குடும்பத்தில் தொடங்கி பாடசாலை, பல்கலைக்கழகம், ஒரு நாட்டில் இருக்கும் கட்சிகள், குழுக்கள் என எங்குமே சித்திரவதைகள் இடம்பெறத்தான் செய்கின்றன. இன்று உலகளாவிய ரீதியில் இவ்வாறு நடைபெறும் அட்டூழியங்கள், அநியாயங்கள் அனைத்தையும் கதைகளாக தந்து ஆழ சிந்திக்க வைக்கிறார் கதாசிரியர். சோகங்களை அப்படியே அச்சொட்டாக கூறியிருக்கும் கதாசிரியரின் சொல்லாடல்களைப் பாராட்ட வார்த்தைகளில்லை.

ஒவ்வொரு கதையும் எம்மை நெகிழவைக்கின்றது. ஆனால் இவையனைத்தும் வாசிப்போரது இரத்தத்தை உறையவைக்கும் உண்மைக் கதைகள். முழுப் புத்தகத்தையும் வாசித்துவிட்டு மூடும்போது மனம் ஒரு இனம் புரியாத தவிப்பில் மூழ்குவதை உணர முடிகின்றது.





'அவன் ஒரு நட்சத்திரம்' என்ற உண்மைக்கதை மனதை என்னவோ செய்கின்றது. இன்று இலங்கையில் எத்தனையோ தாய்மார்கள் இந்த முஹம்மதுவின் தாயைப்போலத்தான் வாடிச் சோர்ந்து தன் மனதைத் தேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ இளைஞர்களின் எதிர்பார்ப்புகளும் முஹம்மதுவின் இரத்தத்தைப் போலவே மண்ணோடு மண்ணாகக் கலந்துவிட்டன. தொடர்ந்து நெஞ்சை நெகிழ வைக்கும் வரலாற்றுத் தவறுகளும், மனிதப் பேரழிவுகளும், மனித உரிமை மீறல்களும் இவரது கதைகளினூடாக எம்மை ஒரு கணம் துயரத்தில் திக்குமுக்காடச் செய்கின்றன. இதுவே நூலாசிரியரின் வெற்றியும் கூட.

'தப்பிப் பிழைத்த பிக்கு' எனும் உண்மைக்கதையை வாசித்துவிட்டு, அந்தப் பிக்கு பிழைத்ததைவிட இறந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு பிக்குவின் துயரங்களை கண்முன்னே நிறுத்துகிறார் ஆசிரியர். இது அவரின் எழுத்தாற்றலை வெளிப்படுத்தும் ஒரு உதாரணம் மட்டுமே.

'பள்ளிக்கு வந்த பயங்கரவாதி', 'ஹிரோசிமாவின் வேண்டுகோள்' என ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு ரகம். இது ஆசிரியரின் தேடலுக்கும், முயற்சிக்கும் கிடைத்த வெற்றியாகும். சில கதைகள் பாதிக்கப்பட்டவர்களின் நேரடி வாக்கு மூலங்களாகவும் பதிவாகியுள்ளன.

தமிழில் இது ஒரு முன்னோடி முயற்சி என்றால் அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வரலாற்றுத் தவறுகளை அப்படியே புடம்போட்டு காட்டும் இது பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு ஆவணம். ஒரே ஒரு குறை. குறை என்று சொல்வதை விட எதிர்பார்ப்பு என்றும் வைத்துக் கொள்ளலாம். இலங்கையில் நடைபெற்று முடிந்த யுத்தமானது எத்தனையோ வதைகளைப் புரிந்துள்ளது.


இன்றும் கூட பலர் எமக்குத் தெரிந்தும் தெரியாமலும் வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவையனைத்தும் இக் கதைகள் போலவே ஆவணப்படுத்தப்பட வேண்டும். அப்படி ஒரு தொகுப்பை எதிர்காலத்தில் இவரிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

**- மாயா**

காதலி: ஏண்டா... **காதலிக்கலாம், ஆனா, கல்யாணம் மட்டும் வேணாம் எண்டுற?**

காதலன்: எனக்கு **'ரஸ்க்' சாப்பிடத்தான் பிடிக்கும். 'ரிஸ்க்' எடுக்கப் பிடிக்காது...**





லஞ்ச ஒழிப்பு **அதிகாரி: உங்க ஒப்பீஸ்ல யாரு யாரு எல்லாம் லஞ்சம் வாங்குறாங்க....?**

அதிகாரி: அத **சொன்னா, எனக்கு எவ்வளவு தருவீங்க...?**

**புத்தகத்தில படிச்சேன் புரியல. டீ.வி.ல பார்த்தேன் நம்பல. டீச்சர் சொல்லியும் நம்பல. ஆனா, உங்களப் பார்த்த பிறகுதான் தெரிந்து கொண்டேன் 'வால் இல்லாமல் குரங்கு இருக்கு எண்டு...'**



எழுத்தாளர்களே...!
நீங்களும் நூல்களை வெளியிட்டிருந்தால், உங்களுடைய நூலின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பிவையுங்கள். நிச்சயமாக அவை 'இருக்கிறம்' சஞ்சிகையின் றாக்கை பகுதியில் பிரசுரிக்கப்படும்.

'இருக்கிறம்' வார இதழ்,
இல.03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு-07
தொலைபேசி: 011 3150836.
மின்னஞ்சல்: irukiram@gmail.com



## கொழும்பு தேசிய கலாபவனத்தில்

# புனர்வாழ்வு போராளிகளின் ஓவியக் கண்காட்சி

யுத்தத்திற்குப் பின்னரான வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அனுபவத்தைத் தந்திருக்கின்றது என்றுதான் கூறவேண்டும். பல்லாயிரக்கணக்கான முன்னாள் போராளிகள் இறுதி நேரத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்தமை யாவரும் அறிந்ததே. அவர்கள் அனைவரும் புனர்வாழ்வு மையங்களில் தம் காலத்தைக் கழித்து வருகின்றனர். ஆரம்பத்தில் இராணுவத்திடம் சரணடைந்த 11,696 போராளிகளுக்காக 24 நிலையங்களில் புனர்வாழ்வு முகாம்கள் ஆரம்பிக்கப் பட்டன. இவை இன்று ஒன்பதாகக் குறைக்கப்பட்டுள்ளன என அரசாங்கம் தெரிவிக்கின்றது. உளரீதியான




புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டலின் பின்னர் சுமார் ஏழாயிரம் விடுதலைப் போராளிகள் தற்போது, தாம் வாழ்ந்த சமூகத்திற்குள் அனுப்பப்பட்டுள்ளனர். 2010 ஜுன் மாதம், விடுதலை பெற்றவர்களுக்கான திருமண வைபவம் ஒன்றும் வவுனியாவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.


தற்போது புனர்வாழ்வு பெற்றுவரும் போராளிகளின் ஓவியத் திறமையை வெளிப்படுத்தும் நோக்கில் அண்மையில் கொழும்பு தேசிய கலாபவனத்தில் இவர்கள் வரைந்த ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அத்தோடு தமது கைவண்ணத்தில் உருவான கைப்பணிப் பொருட்களையும் காட்சிப்படுத்தியிருந்தார்கள். 'கலையினூடாக மாற்றங்களின் பிரதிபலிப்பு' என்பதைக் கருப்பொருளாகக் கொண்டமைந்த இக்கண்காட்சி, அரங்கம் நிறைந்த பார்வையார்களுக்கு மத்தியில் வைபவ ரீதியாக குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. பல வருடங்களாக போராளிகளாக இருந்து தற்பொழுது புனர்வாழ்வு நிலையங்களில் இருக்கும் இளைஞர் யுவதிகளது திறமைகளை வெளிக்கொண்டு வருவதும், அவர்களுக்காக அரசாங்கம் மேற்கொண்டுவரும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்.

இக் கண்காட்சிக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் உட்பட அரசின் உயர் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். அங்கு சுமார் 400 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அனைத்து ஓவியங்களும் எல்லோர் மனதையும் கட்டிப்போட்டுவிட்டது என்பதற்கு, பலர் ஓவியங்களைப் பார்த்து அசையாது சிலைபோல் நின்ற விதம் நல்ல உதாரணம். அவர்களது ஓவியங்கள் துடிப்பை மட்டுமன்றி தமது சொந்த இடங்களுக்கு தமது பெற்றோர்களிடம் செல்லவேண்டும் என்ற சிந்தனையை வெளிக்காட்டவும் தவறவில்லை.

இன்று வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் நிலை, யுத்த வடுக்களாக அப்படியே அவர்களது சித்திரத்தில் தத்ரூபமாக வெளிப்பட்டு நின்றது. சமாதானத்தை நாடி நிற்கும் அவர்களது குமுறலும் ஆங்காங்கே வெளிப்படத்தான் செய்தது. இவர்களது திறமைகளை வளர்ப்பதற்கான திட்டங்களை இந்தப் புனர்வாழ்வு நிலையங்கள் மேற்கொண்டு வருகின்றமையை அங்கு அவதானிக்க முடிந்தது. அனேகமானவை, புது விடயங்களைப் பிரதிபலித்தாலும் சில படைப்புக்கள் உணர்வுபூர்வமான கதைகளை வெளிப்படுத்தி நின்றன.

தமது கருத்துக்களை ஓவியங்கள் மூலமாகவே வெளிக்காட்டிவிட்டார்கள். இக்கண்காட்சியில் பங்கேற்ற புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க எம்மிடம் உரையாடியபோது, 'சமாதானம், வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புதல், எமது எதிர்கால எதிர்பார்ப்பு, எமது நாட்டின் முன்னேற்றத்திற்கான பங்களிப்பு என்பவைப் பற்றி இவர்களுக்கு நாம் கூறியுள்ளோம். ஆனாலும் நாங்கள் எவருக்கும் எதை வரையவேண்டுமென்று சொல்லவில்லை. நாங்கள் இவர்களுக்குத் தேவையான வர்ணம், பேனை, பென்சில் என்பவற்றை வழங்கினோம். இவர்களின் விருப்பப்படிதான் இவற்றை வரைந்தார்கள். ஒவ்வொரு சித்திரத்தின் ஊடாகவும் ஆழமான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன' என்றார் மகிழ்வுடன்.

'இவ்வாறான புனர்வாழ்வு செயற்பாடுகள் எமது நாட்டின் வரலாற்றில் இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு இருக்கவில்லை. இது புதிய அனுபவம். ஆரம்பத்தில் அனேகமானவர்கள் பத்திரிகையை எடுத்துப்பார்த்தாலும் ஊடகங்களைப் பார்த்தாலும் எம்மை சந்தேகமாக பார்த்தார்கள். முப்பது வருடமாக யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவத்தலைவர்கள் எவ்வாறு இந்த புனர்வாழ்வு செயற்பாடுகளை மேற்கொள்வார்கள், இவர்களுக்கு இந்த பொறுப்பை வழங்க முடியுமா? என்ற கேள்வியும் ஏற்பட்டது. வரலாற்றில் அனுபவம் இல்லாவிட்டாலும் கடந்த ஒன்றரை வருடகாலத்துக்குள் பிரிகேடியர் ரணசிங்க உட்பட ஏனைய உறுப்பினர்கள் பாரிய செயற்பாடொன்றை நடாத்தியுள்ளார்கள். இது மனிதாபிமான செயற்பாடாகும்' என நிகழ்வில் கலந்துகொண்ட சிரேஷ்ட அமைச்சர். டி.யூ. குணசேகர குறிப்பிட்டார்.



மனிதர்களின் சிந்தனைகளை இலகுவாக வெளிப்படுத்தும் சிறந்தவொரு ஊடகம் கலைகள்தான். இந்த போராளிகளுக்கு மத்தியில் எத்தனையோ திறமைகள் முடங்கிக்கிடக்கின்றன. இவர்களுக்குள் ஆயிரம் கலைஞர்கள் உள்ளார்கள். அதற்கான சரியான சந்தர்ப்பம் கிடைக்குமிடத்து அவர்களால் சாதிக்க முடியும். ஓவியங்கள் மட்டுமன்றி வந்தோரை மகிழ்விக்க நடன விருந்தொன்றையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கான பயிற்சிகளை புகழ்பெற்ற நடிகையான அனுஜா வீரசிங்க இவர்களுக்கு வழங்கியிருந்தார். அவரை அணுகி இவர்களது செயற்பாடுகள், எண்ணங்கள் பற்றி வினவியபோது;





சுசந்த ரணசிங்க டி.யூ. குணசேகர நடிகை அனுஜா

'இந்தப் பிள்ளைகளில் எந்தக் குறையையும் நான் காணவில்லை. ஒருவேளை நானும் அங்கு இருந்திருந்திருந்தால் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டிருப்பேன் என்று அவர்களோடு பேசும் போது எனக்கு விளங்கியது. அவர்கள் உண்மையைப் புரிந்து கொண்டார்கள். மிகவும் அழகான பிள்ளைகள். உண்மையில் எமக்கிடையே இருக்கிற இடைவெளியைக் குறைக்கவேண்டும். அந்தப் பிள்ளைகள் இன்னும் பயந்து போய் உள்ளார்கள். நாம் அவர்களை ஆதரவாக ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று பரிவுடன் கூறினார்.

◀ க.மாலா ▶

முன்னாள் போராளிகளை புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்த மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான நடவடிக்கைகள் முக்கியமானதும் பாராட்டக்கூடியதுமாகும். ஆனால் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான சந்தேக நபர்கள் இத்தகைய செயற்பாடுகளில் உள்வாங்கப்படவில்லை என்பது வேதனைக்குரியது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய விடுதலைப்புலி சந்தேக நபர்களை தடுத்து வைத்திருத்தல் தொடர்பான விடயங்களை இவ்வருடம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட குழு ஆராய்ந்து வருகிறது. விடுதலைப்புலிகளுடன் எந்தவித தொடர்பும் இல்லாதவர்களும் குற்றவாளிகளாக சிறைவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் பற்றிய எத்தகைய தகவலும் பெற்றுக்கொள்ள முடியாமல் இவர்களின் குடும்பத்தவர்கள் துன்பப்படுகின்றனர். ஆகவே, இவர்களுக்காகவும் உடனடியான செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய கடமை அரசாங்கத்திடம் காணப்படுகிறது.

இதனைவிட நிரந்தரமாக வாழக்கூடிய வழிவகைகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். அரசாங்கத்தால் அமைக்கப்படுகின்ற தொழிற்சாலைகள், நிறுவனங்களில் இவர்களுக்கு தொழிற்பயிற்சியளித்து தொழில் வாய்ப்பினை வழங்கவேண்டும். ஒரு இருண்ட யுகத்திலிருந்து மீண்ட இவர்கள் வாழ வழிகாட்டவேண்டியது உரியவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவர விரும்பும் இவர்களுக்கு அதற்கான வழிவகைகளையும் செய்துகொடுக்க வேண்டும். புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் தமிழ்த் தலைமைகள் மனித நேயத்தைக் கடைப்பிடித்து அவர்களுடைய விடுதலையை விரைவுபடுத்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும்.

# I SPIT ON YOUR GRAVE

## பெண் எழுத்தாளருக்கு நேர்ந்த வக்கிர கொடூரம்




ஒரு பெண் மீதான பாலியல் வல்லுறவையும் அதை மோசமாக எதிர்கொண்ட அவள் தன்னை வன்புணர்ந்தவர்களை அதைவிட கோரமாக சித்திரவதை செய்து பழிதீர்ப்பதையும் வெளிப்படுத்தும் படம்தான் I SPIT ON YOUR GRAVE. கடந்த ஆண்டு இப்படம் வெளியிடப்பட்டிருந்தாலும் இன்றைய நிலைமையில் எம்மைப் பொறுத்தவரையில் இப்படம் முக்கியத்துவம் பெறுகின்றது.

அதிகாரம்மிக்க இடத்தில் இருக்கும் நான்கு ஆண்கள் ஒன்றாகச் சேர்ந்தால் ஒரு அப்பாவி பெண்ணின் நிலைமை நினைக்கவே கொடுமையாக இருக்கும். பொதுவாக இராணுவ வீரர்களிடம் மாட்டும் அப்பாவிப் பெண்கள் நரகத்தை வாழ்நாள் முழுவதும் அனுபவிப்பார்கள். இங்கும் இராணுவத்திடம் சிக்கி சின்னாபின்னமாகி எத்தனையோ பெண்கள் இறந்துபோயிருக்கின்றார்கள். எத்தனையோ பேர் வெளியில் சொல்ல முடியாமல் வேதனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பெண்ணை பொறுத்தவரை 'ரேப்பே' கொடுமை அதிலும் 'கேங் ரேப்' கொடுமையிலும் கொடுமையானது.

பொதுவாகவே கலைஞர்கள் தனிமை என்றால் அதிகம் விரும்புவார்கள். காரணம் அவர்களின் சிந்தனைக்கும் ஆற்றலுக்கும் தீனி போடுவது தனிமைதானே.

இளம்பெண் நாவலாசிரியரான ஜெனிபர் ஹில்ஸ் தான் ஒரு புதிய நாவலை எழுதுவதற்காக நகரிலிருந்து தூரத்தே உள்ள ஒரு தனிமையான வீட்டில் தங்கி, எழுத ஆரம்பிக்கின்றார். எதிர்பாராதவிதமாக ஐந்து பேர் கொண்ட குழுவொன்று அவரை மிகவும் கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துகின்றனர். அவர்களின் பிடியிலிருந்து தப்பித்து, பின் அவர்களை எவ்வாறு பழி வாங்குகிறாள் என்பதுதான் மீதிக்கதை.



ஜெனிபரின் கதாபாத்திரத்தில் சாரா பட்லர் கனகச்சிதமாக பொருந்துகிறார். அட்டகாசமில்லாத அவரது நடிப்பு இயல்பு. வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின் அவர் செல்லும் காட்சி, அதன்பின் அவர் பழிவாங்கும் படலம் என படத்தை சலிப்புக்கு இடமில்லாமல் ஸ்டீவன் மொன்ரோ அழகாக நகர்த்தியிருக்கிறார். இவர்களோடு ஜெவ் பிரான்ஸன், ரொட்னி ஈஸ்ட்மேன், டானியல் பிரான்ஸிஸ், அன்ட்ரூ ஹொவார்ட், சாட் லைன்பேர்க் போன்ற பொலிவூட் பிரபலங்களும் படத்தில் நடித்துள்ளார்கள்.

ஒரு திகில் படத்தை பார்ப்பதற்கு சமனாக இப்படம் நகர்கின்றது. அதற்கேற்ற ஒலிகளை அமைத்திருக்கிறார் அலன் ஜக்ஸன். நீல் லிஸ்கினின் கமரா காட்சிக்கு காட்சி விறுவிறுப்பைக் கொடுக்கின்றது.

1978ஆம் ஆண்டு வெளிவந்து விமர்சகர்களால் நல்ல அடி வாங்கிய டே ஒவ் த வுமன் (Day of the Women) படத்தின் ரீமேக்காக இந்தப் படம் இருந்தாலும் அப்படத்தில் காட்டியவாறு அபாயகரமான காட்சிகள் இதில் காட்டப்படவில்லை. அந்தப் படத்தை பார்த்துவிட்டு இதைப் பார்ப்பவர்களுக்கு இது சாதாரணமாக இருக்கலாம்.

**இயக்கம்:** ஸ்டீவன் ஆர். மொன்ட்ரோ
**தயாரிப்பு:** லீசாஹன்சன், போல் ஹட்ஸ்பேர்க், மேர் சார்சி
**கதை:** மேர் சார்சி
**இசை:** அலன் ஜக்ஸன்
**தொகுப்பு:** டானியல் டன்கன்
**ஒளிப்பதிவு:** நீல் லிஸ்க்

தன்னை கொடுமைப்படுத்தியவர்களை தான் அனுபவித்ததைவிட பல மடங்கு கொடுமைப்படுத்தவேண்டும் என்பதுதான் ஜெனிபரின் நோக்கம். அதன்படியே அடுத்தடுத்து ஒவ்வொருவரையும் கட்டிவைத்து அணுவணுவாக சித்திரவதைசெய்து கொலைசெய்யும் காட்சி திகிலுடன் கலந்த அபூர்வம். எல்லாவற்றையும்விட ஒருவனின் முகத்தில் மீன் கழிவைப்பூசி அவனது கண் மடல்களை கம்பியில் கோர்த்து மரத்தில் கட்டிவைக்க, அங்குவந்த காகங்கள் அவனது கண்ணை நோண்டி வெளியே போடுவது உச்சக் கட்டம் எனலாம்.

**◀ விக்ரமாதித்தன் ▶**

சில காட்சிகள் அருவருப்பையும் தருகின்றன. ஐவரில் ஒருவனை நிர்வாணமாக கட்டிவைத்து இரத்தம் சொட்டச்சொட்ட அவனை சாகடிக்கும் காட்சி கொஞ்சம் ஓவர். அத்தோடு கடைசியாக பழிவாங்கும் பொலிஸ் அதிகாரியின் மனைவி கர்ப்பமாக இருக்கிறாள். ஆனால், ஜெனிபர் தான் பழிவாங்குவதிலிருந்து கொஞ்சம்கூட பின் நிற்கவில்லை. அந்த இடம் சற்று நெருடலாக இருக்கின்றது.

படத்திலிருக்கும் எல்லா வசனங்களும் எழுதவே முடியாத ரகம். முக்கியமாக அந்தப் பெண்ணை கற்பழித்து வெளியே தப்பவிட்டு பின்பு அந்த ஷெரிப் பின்பக்கம் புணர்வது கொடுமை. சாராவின் இயல்பான யதார்த்தமான நடிப்பு சபாஷ் போட வைக்கிறது. முன் பக்கம் மற்றும் பின் பக்கம் வெறித்தனமாக புணரப்பட்டு நடக்க முடியாமல் நடந்து போவதும் கால் இழுத்து இழுத்து நடக்கும்போது எம்மையறியாமலே எங்களது கண்கள் கலங்குகின்றன.

ஒருத்தனை கட்டிப்போட்டு நிர்வாணமாக அவனை நிற்கவைத்து அவனை அடித்து உதைக்கும்போது, அவன் நக்கலாக, உனக்கு தெரியுமா? என்னை யாருமே நல்லா 'பிலோ ஜாப்' செய்ததில்லைன்னு சொல்ல... அவள் புல் வெட்டும் கத்திரிக்கோலால் அவனது ஆண்குறியைக் 'கட்' பண்ணி அப்படியே அதை அவன் வாயில் திணித்து 'நல்லா பிலோஜாப்செய்' என்று சொல்லும்காட்சி ஒன்றே போதும். வல்லுறவுக்குட்பட்ட பெண்கள் இந்த படத்தைப் பார்த்தால் முக்கியமாக பிற்பகுதியைப் பார்த்தால் மிகவும் சந்தோஷமடைவார்கள்.

வல்லுறவின் வக்கிரத்தையும் பழிவாங்கும் உணர்ச்சியின் உச்சப்பாட்டையும் ஒளிப்பதிவாளர் நீல் லிஸ்க் மிக தத்ரூபமாக வெளிப்படுத்தியுள்ளார். காடு மற்றும் மரங்கள் என்பவற்றைக் காட்டியிருக்கும் விதம் அருமை. பின்னணி இசை தேவைக்கேற்ற விதத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. மெல்லியதான இசையில் வக்கிரம் கலந்ததாக இப்படத்தை வித்தியாசமாக இயக்குநர் காட்சியமைத்திருக்கிறார்.

எது எப்படியோ, பெண்களை ஏமாற்ற நினைப்பவர்களும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த நினைப்பவர்களும் இப்படத்தை பார்த்தால் அந்த எண்ணமே வராது என்றே கூறலாம்.

இப்படம் கொடூரமான வல்லுறவுக்கு காரணமாக இருந்தவர்களுக்கு படத்தில் வருவதுபோல தண்டனை கொடுத்தால் உலகில் எங்கும் வல்லுறவுகள் நிகழாது போலும். இப்படியான வல்லுறவுகளை



எத்தனையோ படங்களில் பார்த்தாலும் இந்தப்படத்தில் அது பழிவாங்கும் படலமாக காட்சிப்படுத்தப்பட்டமை உண்மையில் அழகான சித்தரிப்பாகும். புயலுக்குப்பின் அமைதி என்பதைப் போல ஜெனிபரின் ஒரு மெல்லிய சிரிப்போடு படம் அமைதியாக முடிவடைகின்றது.


ஆகமொத்தத்தில் I SPIT ON YOUR GRAVE– பழிக்கு வெறிகொண்ட பழி.

**குறிப்பு: இப்படத்தில் வக்கிரக் காட்சிகள் இடம்பெறுவதால் சிறுவர்கள் இப்படத்தைப் பார்ப்பதை தவிர்க்கவும்.**

'இருக்கிறம்' சஞ்சிகையில் வெளிவரும் உண்மையின் பதிவு என்ற இப்பகுதி மிகவும் காத்திரமானதும் நுகர்வோரின் பிரச்சனைகளை நேரடியாக துணிச்சலுடன் வெளிக்கொண்டு வரும் பகுதியுமாகும். அண்மையில் கொண்டாடப்பட்ட மே தொழிலாளர் தினமன்று எனக்கு நிகழ்ந்த கொடுமையொன்றை தங்களுக்கு எழுதி அனுப்புகிறேன் பிரசுரிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்.

இதனால் இந்த ஜனநாயக நாட்டில் எனக்கோ ஏன் எவருக்குமோ எந்தத் தீர்வும் ஏற்படப்போவதில்லை என்பது நமக்குத் தெரியும். இருப்பினும் என்னைப்போன்ற சகோதரிகள் இதை வாசித்தாவது எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும் என்ற அக்கறையில் அன்று நடந்த சம்பவத்தை தங்களுக்கு அறியத் தருகிறேன்.

# 154ஆம் இலக்க பஸ்ஸில் ‘குடிமக்களின்’ மே தினம்



அன்று மே ஒன்று, தொழிலாளர் தினம். விடுமுறைதான். ஆனால், ஊடகவியலாளருக்கு ஒருநாளும் விடுமுறை அல்லவே. அன்று பௌத்தாலோக மாவத்தையிலுள்ள எனது அலுவலகத்திலிருந்து கடமை முடிந்து மாலை ஐந்து மணியளவில் வீடு திரும்பினேன். மருதானையிலுள்ள எனது வீட்டுக்குச் சென்று சேரும்வரை நான் வீதியிலும் பஸ்ஸிலும் அனுபவித்த துன்பங்கள் எனக்கு மட்டும்தான் தெரியும்.

அலுவலகம் முடிந்து 154ஆம் இலக்க பஸ்ஸில் ஏறிய நான் இறங்கும் வரை புழுவாய் நெளிந்து வளைந்து கொண்டிருந்தேன். காரணம் பஸ்ஸுக்குள்



காளையர்களின் கட்டுமீறிய அட்டகாசம். மேதினக் கொண்டாட்டம் முடிந்து மது போதையில் பஸ்ஸில் ஏறிய சில இளைஞர்கள் கொடிகளையும் தூக்கிக் கொண்டு பஸ்ஸிற்குள் ஏனையோர் இருக்கின் றனர் என்று துளிகூட சிந்திக்காமல் ஆடுவதும் கூச்சலிடுவதும் பச்சை பச்சையாக சகோதரமொழியில் தகாத வார்த்தைகளைப் பேசுவதுமென அவர்களுடைய மேதினக் கொண்டாட்டங்கள் பஸ்ஸிற்குள் நன்றாகவே அரங்கேறின.

பஸ்ஸுக்குள் இருந்த எவரும் இதைக் கணக்கிலெடுப்பதாகத் தெரியவில்லை. ஏன் நடத்துநர்கூட அந்தப்பக்கம் வரவில்லை. என்னிடம் டிக்கட் கூட வாங்கவில்லை. பஸ் பொரளையைச் சென்றடைந்தபோதுதான் தப்பினோம் பிழைத்தோம் என்று மெதுவாக ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து குதித்து பெருமூச்சு விட்டேன்.

அதோடு நிற்கவில்லை. அன்று பஸ்கள் வேறு போக்குவரத்துச்சேவையில் குறைவாக ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் சனநெரிசலாக இருந்தது. பொரளை மேம்பாலத்தைக் கடந்து மறுபுறத்திற்குச் சென்று 176ஆம் இலக்க பஸ் எடுக்கலாம் என்று நினைத்து பொரளை மேம்பால வழியாகச் சென்றேன். அருகில் நிலக்கீழ் வழிப்பாதைக்கருகில் சில இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு அருகாகச் செல்லும்போது அவர்கள் பேசும் விதத்திலிருந்து அவர்கள் மதுபோதையில் இருப்பது தெளிவாகியது.

ஒருவர் நங்கி, இன்னொருவர் பபா, வேறொருவர் சுது, மற்றொருவர் மெனிக்கே. இன்னும் எத்தனையோ பெயர்களை எனக்குச்சூட்டி அழைத்தார்கள். இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே என்று வழியில் செல்லும் முச்சக்கர வண்டிக்கு கைகாட்டினால் பதிலுக்கு உள்ளிருந்து ஒரு கை வெளியே வந்து கூச்சலிட்டு சென்றது.

இத்தனைக்கும் பாதுகாப்புத்தரப்பினருக்கு ஒன்றும் குறைவிருக்கவில்லை. அவர்கள் வெறும் வேடிக்கை பார்த்தவாறு நின்றிருந்தனர். ஒருவாறு அங்கிருந்து தப்பி 176ஆம் இலக்க பஸ் வர, அதில் ஏறி சீற்றும் கிடைக்க அப்பாடா என்று அமர்ந்துகொண்டேன். என்ன ஜென்மங்களப்பா...!

அந்த பஸ், பயணிகளால் (காடையர்களால்) நிரம்பி வழிந்தது. போதையிலிருந்தோர், தெளிவாக இருந்தோர் எல்லோருமே என்னை மட்டுமல்ல அந்த பஸ்ஸில் உள்ள மற்ற பெண்கள் மடியிலும் உட்காராத குறை ஒன்றுமட்டும்தான். அந்தளவுக்கு சீற்றின் அருகில் வந்து எம்மை நெருக்கி முட்டி மோதிக்கொண்டு இருந்தனர். நிற்பதற்கே இடமில்லாத அந்த பஸ்ஸில் அவர்கள் அபிநயம் பிடித்தால் எவ்வாறு இருக்கும் என்று பாருங்கள். பக்கத்தில் இருந்தவரது கண்கள், எனது உடலைமேய்ந்து கொண்டிருந்தன. இன்னொருவன் தனது கையிலிருந்த கொடிக்கம்பால் எனக்கு அருகிலிருந்த மற்றொரு பெண்ணின் அங்கங் களை உரசிக்கொண்டு நின்றான். வாயைத் திறந்தால் வீண்வம்பு என்று அவரும் சும்மா இருந்துவிட்டார் போலும்.

அவரே அப்படியிருக்கும்போது நான் என்ன செய்வேன். ஒருவாறு பஸ்ஸைவிட்டு இறங்கியாகிற்று. அதிலிருந்து சிறிது தூரம்தான் என் வீட்டுக்கு. நடந்து செல்லும்போது பொலிஸாரைக் கண்டது எனக்கு சிறிது சந்தோசம். தொழிலாளர் தினம் தானே நாமும் சுதந்திரமாக இருப்போம் என நினைத்துவிட்டார்கள் போலும். ஒருவருடைய உடம்பிலும் மேற்சட்டை இல்லை. எல்லோருமே தடித்த உருவமுடையவர்கள். என் நிலை எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

இவற்றைக் கேள்விப் பட்டதனாலோ என்னவோ என்னைப் போன்ற ஒரு யுவதியை கூட்டிச்செல்ல ஒரு தந்தை வந்து வீதியில் காத்திருக்க, நானும் அவர்கள் பின்னாலேயே சென்று ஒருவாறு எனது வீட்டை அடைந்துவிட்டேன்.

தங்கள் உதிரத்தை வியர்வையாகச் சிந்தி உழைத்து மானுட நாகரிகத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றிய உழைப்பாளர்கள் 8 மணிநேரம் கொண்ட உழைப்பு நாளை தங்களுடைய உரிமையாக போராடிப் பெற்ற நாளாகக் கருதி மேதினமாக உலகம் முழுவதும் கொண்டாடுகின்றனர். இந்த நாளில் பொறுப்புடன் செயற்பட வேண்டிய இளைஞர்கள் இவ்வாறு குடித்துக் கும்மாளமிடுவது அநாகரிகமானது என்பது மட்டுமல்ல அருவருக்கத்தக்கதாகும்.

பெண்களுக்கெதிரான வன்முறைகளை வெளியுலகிற்கு காட்டி அதற்கான நியாயமான தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக பல பெண்கள் அமைப்புகள் செயற்பட்டு வந்தாலும் இத்தகைய வன்முறைகள் குறைந்ததாக இல்லை. இத்தகைய வன்முறைகளுள் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுபவையும் வெளியே தெரிய வருபவையும் மிகவும் சொற்பமானவையே. வெளியே வராதவையாகவும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படாதவையாகவும் மூடி மறைக்கப்படுபவைகளும்




உள்ளவை மிக அதிகமானவைகளாகும். பஸ் நடத்துநர்கூட அன்று எதுவுமே செய்யமுடியாத நிலையில் நமது நாட்டில் இன்று நிலைமை மோசமாகியிருக்கிறது என்பதே உண்மை.

**மதுமிதா கனகேஸ்வரன்**

அன்றையதினம் அக்காடையர்கள் எதுவென்றாலும் செய்திருக்கலாம். ஆனால் அதைத் தட்டிக்கேட்க பஸ்ஸில் எவருக்குமே துணிச்சல் வரவில்லை என்பது வேதனையாக இருந்தது. எனவே, பஸ்களில் தனியாக பயணம் செய்யும் பெண்கள் அவதானத்துடன் பயணம் செய்வது நல்லது. அல்லது துணைக்கு எவரையாவது அழைத்துச் செல்லுங்கள். பணியிடங்களில் வேலைபார்க்கும் பெண்களே, மாணவிகளே எனது இந்த அனுபவம் உங்களுக்கும் ஒரு பாடமாக அமையட்டும்.

உண்மையின் பதிவு

**வாசகர்களே! சமூகத்தில் ஏற்படும் இவ்வாறான பிரச்சினைகளை நீங்களும் இப்பகுதிக்கு எழுதி அனுப்பலாம். நுகர்வோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை தூண்டுவதற்கு 'இருக்கிறம்' பாதிக்கப்பட்டோரின் அனுபவங்களை வேண்டுகிறது.**

**'இருக்கிறம்', 03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 7**



*கம்பஸில படிக்கிற சில பெட்டைகள் ‘புக்ஸை’ நெஞ்சோட அணைச்சுக்கொண்டு போறாங்களே... ஏன்?*



*படிக்கிறதில்லை! க்ளாஸ்ல கவனிக்கிறதில்லை... இப்படியாவது பாடம் மனசுல ஏறட்டுமெண்டு நினைக்கிறாங்களோ என்னமோ..?*

# 01 திகிலோடு மர்மம் நிறைந்த தொடர்!




### 'கறுப்பு செப்டெம்பர் அழகி' பற்றி...

'இருக்கிறம்' சஞ்சிகையில் 'காற்றாய் வருவேன்' என்ற தொடர்கதையைப் படித்துவிட்டு நீங்கள் பொழிந்த பாராட்டு மழையில் நனைந்து எனக்கு ஜலதோஷமே வந்துவிட்டது. அந்த உற்சாகத்தில் பிறந்த கதைதான் 'கறுப்பு செப்டெம்பர் அழகி' அதைவிட மிகவும் வித்தியாசமாகவே இந்தக் கதை இருக்கிறது... இருக்கும்...

வித்தியாசமாக எதையாவது செய்யவேண்டும் என்ற பேரார்வம் கொண்டவன் நான். இதனால் இந்தக்கதையிலும் நீங்கள் பல வித்தியாச ங்களைப் பார்க்கலாம்.

அங்கே பாருங்கள். ஆரம்பமே பறக்கிறது. ஆமாம்! நீங்களும் அந்த விமானத்துக்குள் போங்கள். அங்கே ஏதோ ஒரு பயங்கரம் நடக்கப்போகின்றது. அதை நீங்களும் சந்திப்பதற்குத் தயாராகுங்கள்.

நான் குறுக்கே வர விரும்பவில்லை!!!

## ஆரம்பமாகிவிட்டது திகில்வேட்டை அதிரப்போகிறது சூரக்கோட்டை!

ஜனரஞ்சக எழுத்தாளர் **மொழிவாணன்**

எயார் விமான சேவைக்குச் சொந்தமான விமானம்.

சூரிச் விமான நிலையத்திலிருந்து கைரோவை நோக்கிப் புறப்பட்டது.

மற்ற விமானங்களைப் போல் இல்லாமல்,

இந்த விமானம் கடும் சோதனைக்குப் பிறகுதான் மேலே பறப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

காரணம்,

நவீன முறையில் தயாரிக்கப்பட்ட யுத்த ஆயுதங்கள் பல,

அந்த விமானத்தினுள் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தன.

விமானப் பாதுகாவலர்கள் நால்வரைத் தவிர,

அந்த விமானத்தில் மொத்தம் பதினைந்து பேர் மாத்திரம்தான் இருந்தார்கள்.

அவர்களுள்,

நான்கு பேர் வெள்ளைக்கார பெண்மணிகள்.

அவர்கள் எல்லோரும்,

சூரிச் சுங்க இலாகாவினால் கடுமையாக சோதனை செய்யப்பட்டார்கள்.

இப்போது,

எவ்விதப் பரபரப்பும் இன்றி விமானம் அமைதியாகப் பறந்து கொண்டிருந்தது.

பிரயாணிகளில் ஒரு சிலர் பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வேறு சிலர்,

தங்களிடம் இருக்கும் சிறிய போத்தல்களிலிருந்த விஸ்கியைக் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

விமானம் விண்ணில் பறக்க ஆரம்பித்து,

எண்ணி இருபது நிமிடங்கள் கடந்து விட்டன.

கறுப்புக் கண்ணாடி அணிந்து,

பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஓர் இளைஞன்,

தனது கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி,

சரியாக 2.30!

மறுகணம்,

அவன் மின்னல் வேகத்தில் எழுந்து நின்றான்.

இப்போது,

அவன் கையில் ஓர் இயந்திரத் துப்பாக்கி துடித்துக் கொண்டிருந்தது.

விரைந்து முன்னால் பாய்ந்தான் அந்த இளைஞன்.

இயந்திரத் துப்பாக்கியின் முனை,

விமானப் பாதுகாவலர் இருவரையும் நோக்கித் திரும்பியது.

''நண்பர்களே, இருக்கும் இடத்தை விட்டு அசையாமல் நில்லுங்கள். உங்கள் கையில் இருக்கும் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு கைகளை மேலே உயர்த்திக் கொள்ளுங்கள்'' அந்த இளைஞனின் குரல் விமானத்திற்குள் பயங்கரமாக ஒலித்தது.

அதே வேளை,

அந்த இளைஞனுக்குப் பின்னால் அமர்ந்திருந்த மற்ற இரண்டு பேர்,

ரிவோல்வர்களை அவன் முதுகிற்கு நேராக நீட்டியபடியே எழுந்து நின்றார்கள்.



அதைத் தொடர்ந்து,

எவரும் எதிர்பாராத சம்பவமொன்று நடைபெற்றது.

எழுந்து நின்ற அந்த இருவருக்கும் பின்னால் இருந்த ஓர் ஆசனத்தில் இருந்து,

ஒரு மினிஸ்கர்ட் மங்கை மெல்ல எழுந்து நின்றாள்.

அவள் கையில்,

தட்டிவிட்டால் படபடவென்று தோட்டாக்களை தொடர்ந்து அனுப்புவதற்கு தயாராக இருந்தது,

ஓர் இயந்திரத் துப்பாக்கி.

அதன் முனை,

அந்த இருவரது முதுகுகளையும் முத்தமிட்டுக் கொண்டு நின்றது.

அவள் வாயில்,

ஒரு சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

''விரைவு கொள்ளாதீர்கள் தோழர்களே! கையில் இருக்கும் துப்பாக்கிகளைக் கீழே போட்டுவிட்டு நல்ல பிள்ளைகளைப் போல் அப்படியே அமர்ந்து கொள்ளுங்கள்''

அவள் வாயில் இருந்த சிகரெட், அவள் இதழ்களில் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது.

விமானப் பாதுகாவலர்கள்,

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மறுகணம்,

அவர்களின் கைகளில் இருந்த துப்பாக்கிகள் கீழே விழுந்தன.

இவர்கள் திட்டமிட்டுத்தான் எல்லா வற்றையும் செய்து வருகிறார்கள் என்பதை விமானப் பாதுகாவலர்கள் புரிந்து கொண்டார்கள்.

''எல்லோரும் அமைதியாக அமர்ந்து கொள்ளுங்கள். நாங்கள் இந்த விமானத்தைக் கொள்ளையடிக்கப் போகிறோம்!'' சொல்லியபடியே,

புதுமாதிரியான ஒரு நடை நடந்து, முன்னால் வந்தாள் அந்த அழகி.

அந்த அழகியின் மேனியில்,

கவர்ச்சி கஞ்சத்தனமில்லாமல் மஞ்சம் விரித்திருந்தது.

அந்த மஞ்சத்தில் தஞ்சம் கொள்ள வந்தோர் பலர்.

ஆனால்,

அவள் நெஞ்சத்தில் எவருக்குமே இல்லை இடம்.

காரணம்,

அவள் ஒரு வீராங்கனை.

அவள் பெயர்,

லைலா.

மேஜர் லைலா.

லைலாவின் வாயில் இருந்து சுளையாக வந்த வார்த்தைகளைக் கேட்டதும்,

விமானத்துக்குள் இருந்த ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி,

மயக்கம் போட்டு விழுந்தாள்.

இதே வேளை,

பின் பக்க ஆசனங்களில் அமர்ந்திருந்த இரண்டு இளைஞர்கள் எழுந்து,

முன்னால் வந்து,

விமான ஓட்டிகள் இருந்த அறையினுள் நுழைந் தார்கள்.

அவர் களின் கைகளிலும்,

ரிவோல்வர் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.



விமானத்திற்குள் இப்போது,

பரீட்சை மண்டப அமைதி நிலவிக் கொண்டிருந்தது.

எவ்வித பரபரப்புமின்றி,

விமானிகளின் அறைக்குள் நுழைந்த இருவரில் ஒருவன் பேசி னான்.

''அமைதியாக இருங்கள். அமைதியாக இருங்கள். இந்த விமானத்தை இப்போது இலங்கையை நோக்கி திருப்பி ஓட்ட வேண்டும். இது தான் எங்கள் உத்தரவு''

விமானிகள் இருவரும் வியப்புடன் திரும்பிப் பார்த்தார்கள்.

''என்ன இது?'' அவர்களின் புருவங்கள் உயர்ந்தன.

விழிகள் பிதுங்கி,

இதழ்கள் அசைந்தன.

''இது ஒரு கொள்ளை. இந்த விமானத்தை திருப்பி இலங்கைக்கு ஓட்ட வேண்டும். அவ்வளவுதான் எங்களுக்குத் தேவை. எங்கள் கட்டளையை அப்படியே நிறைவேற்றினால் உங்களுக்கோ அல்லது இந்த விமானத்தில் இருக்கும் மற்றைய பிரயாணிகளின் உயிருக்கோ எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது'' இரண்டாவது இளைஞன் ரிவோல்வரை ஆட்டியபடியே சொன்னான்.

''இது சட்டவிரோதமான ஒரு காரியம். நாங்கள் அப்படிச் செய்தால் எங்கள் வேலையே போய்விடும்'' விமானியின் மேனி இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

''அப்படிச் செய்யாவிட்டால், வேலையை விட மதிப்பு வாய்ந்த ஒன்றை நீங்கள் இழக்க நேரிடும். அது மாத்திரமல்ல, இந்த விமானத்தில் இருக்கும் ஒருவர் கூட உயிருடன் திரும்பிப் போக முடியாது'' சொல்லியபடியே,

பொக்கெட்டுக்குள் கையைவிட்டு,

ஒரு உருண்டையை எடுத்தான் அந்த இளைஞன்.

(தொடரும்...)

# ‘நாங்கள் போவதற்குரிய பாதை நீண்டது அடையவேண்டியவை நிறையவே உள்ளன’

## போரின் வருக்களைக்கொண்ட இருவரின் கதை

சுரேஸ் சுந்தரம் மற்றும் வில்பிரட் விக்கிரமசிங்க இருவரும் 350 கிலோ மீற்றர் தொலைவில் வாழும் இருவேறுபட்ட இனத்தவர்கள். இவர்கள் ஒருவரையொருவர் இதுவரை சந்தித்ததில்லை. ஆனால் இவர்களது வாழ்க்கை கடந்த கால் நூற்றாண்டு களுக்கும் மேலாக ஒரே விதமானதாக அமைந்திருந்தது. உள்நாட்டுப் போரின் தாக்கம்இவ் இருவரின்தலையெழுத்தையும் மாற்றியமைத்திருந்தது.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் போர் ஓய்வுக்கு வந்தபோதிலும் இன்று இது பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இப் போரால் ஏற்படுத்தப்பட்ட வடு இன்னமும் மாறாது உயிர் பெற்றுள்ளது.

பல ஆண்டுகளாக ஒருவரையொருவர் முரண்பட்டுக் கொண்டு வாழும் பெரும் பான்மைச் சிங்கள சமூகத்தையும், சிறு பான்மை தமிழ்ச் சமூகத்தையும் சேர்ந்த இந்த இரு குடிமகன்களும் இந்தப் போரின் பாதிப்பை அதிகம் உணர்ந்தவர்கள்.

சிறுபான்மைத் தமிழரான சுந்தரம் தனது புது மனைவியுடன், 1983 ஜூலையின் கடைசி வாரத்தில் தலைநகர் கொழும்பை வந்தடைந்திருந்தார்.

இவர்கள் கொழும்பை வந்தடைந் திருந்த பொழுது, இன்றும் பிரபலமாகப் பேசப்படுகின்ற கறைபடிந்த வரலாற் றைக் கொண்ட ஜூலைக் கலவரம் ஆரம்பமாகியிருந்தது. எதுவும் செய்யத் தோன்றியிராத அந்தப் பொழுதில், சுந்தரம் தம்பதியினர் விமான நிலையத்திலிருந்த முகாம் ஒன்றுக்குள் அடைக்கலம் புகுந்து கொண்டனர்.


அந்த முகாமில் கொடுக்கப்பட்ட மஞ்சள் நிற அட்டையை சுந்தரம் தற்போதும் வைத்திருக்கிறார். ‘இது எனது தேனிலவின் அடையாளமாக உள்ளது’ என சுந்தரம் நெஞ்சம் நெகிழ்கிறார்.

இதை ஒத்ததாகவே பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தைச் சேர்ந்த விக்கிரமசிங் கவின் கதையும் அமைந்துள்ளது.

கறை படிந்த அந்த ஜூலைக் கலவரம் வெடித்தபொழுது இவர் ஒரு விவசாயியாக இருந்தார். பெரும்பான்மைச் சிங்களவராக இருந்தபோதிலும் தமிழ்க்கிராமங்களின் எல்லையில் இவர் வசித்து வந்தார். இந்தக் கலவரத்தின் பின், பல்லாயிரக்கணக்கான இலங்கையர்களைப்போல் இவரது வாழ்வும் நிரந்தரமற்றதாக இருந்தது.

உத்தரவாதமற்ற நிலையிலிருந்த இவர்களது வாழ்வில் மே 19, 2009 இல் மாற்றம் ஒன்று ஏற்பட்டது. மே 19, 2009 இல் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் தற்போது தமது வாழ்வு சுமூகமாக இருப்பதாக இவ்விருவரும் கூறுகிறார்கள்.

‘‘போர் நிறைவுற்ற பின்னர் நாம் மிகவும் சந்தோசமாக வாழ்கிறோம்’’ என தற்போது 60 வயதை அடைந்துள்ள கொழும்பில் வாழும் இரு ஆண் பிள்ளை களின் தந்தையான சுந்தரம் தெரிவித் துள்ளார்.



திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பின்தங்கிய கிராமமான கித்துலுதுவவுக்கு திரும்பி வந்துள்ள 70 வயது விவசாயியான விக்கிரம சிங்க தனது தோட்டத்திலுள்ள பயிர்களை நாசம்செய்யும் காட்டு யானைகளை துரத்துவது தனக்குப் பெரிய பிரச்சி னையாக இருக்கவில்லையென ஊர் திரும்பிய மகிழ்வுடன் கூறுகிறார்.

முன்னரைவிடக் கூடுதலான சந்தோ சத்துடன் வாழும் இந்த இரு மனிதர்களும் முற்று முழுதாக சமாதானமும் அமைதியும் திரும்பிவிட்டதாக நினைக்கவில்லை.

‘நாங்கள் போவதற்குரிய பாதை நீண்டது. நாம் அடைய வேண்டியவை நிறைய உள்ளன’ என சுந்தரம் குறிப்பிடு கிறார்.

தனது உறவுகள், நண்பர்கள் எனப் பலர் இந்தப் போரின் போது கொல்லப் பட்டதாகத் தெரிவிக்கும் விக்கிரமசிங்க ‘25 ஆண்டுகளாக இந்த மண்ணில் ஏற்பட்ட பயங்கரமான யுத்தத்தின் விளைவை வெறும் இரு ஆண்டுகளில் துடைத்தழிக் கலாம் என நாம் எதிர்பார்க்கமுடியாது. இதற்கு சில காலங்கள் எடுக்கும்’ எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் தமிழ்ப் பிரதிநிதித் துவத்தை அதிகம் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான இணக்கப்பாட்டு முயற்சிகள் மிக மெதுவாகவே மேற்கொள்ளப்படு கின்றன.

‘இந்நடவடிக்கை மிக மெதுவாக நகர்கின்றன’ என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் பேச்சுக்களில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பி னரான சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவித் திருந்தார்.

கடந்த ஜனவரியிலிருந்து இதுவரை ஆறு சுற்றுப் பேச்சுக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ள போதிலும் எந்தவொரு முன்னேற்றமும் எட்டப்படவில்லை. இந் நிலையில் இரு தரப்புப் பேச்சுக்களும் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பிரதானமானது என அமெ ரிக்கா அறிவித்திருந்தது.

புலிகளின் கட்டுப்பாட் டுக்குள் இருந்து மீட்கப்பட்ட வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் மக்கள் தற்போதும் புலிகளுடன் தொடர்பு டையவர்கள் என்ற சந்தே கத்தில் பார்க்கப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள் ளனர்.

இராணுவம் மற்றும் புலனாய்வாளர்களின் விசார ணைகளுக்கும் மிரட்டல் களுக்கும் இந்த மக்கள் உட்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. இந்நிலையில் இணக்கப்பாட்டு முயற்சிகள் மிகவும் மெதுவாக இருப்பது டன், வடக்கின் அபிவிருத்திப் பணிகளும், பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, 2010 இலிருந்த நிலைமையைவிட தற்போது அதிக அமைதி நிலவுவதுடன், பொருளாதார வளர்ச்சியும் 8 வீதமாக அதிகரித்துள்ளதுடன், சுற்றுலாப் பிரயாணி களின் வருகையானது 66 வீதமாக அதிகரித் துள்ளதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் வேதனம் அதிகரிக்கப் பட்டுள்ளதுடன், வேலையற்றோர் தொகையும் குறைவடைந்துள்ளதாக அண்மையில் வெளியிடப்பட்ட உலக வங்கியின் அறிக்கை யில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஒரு காலத்தில் சோதனைச் சாவடிகளால் நிரம்பியிருந்த கொழும்பு வீதிகளின் பாதுகாப்புக்கள் தற்போது குறைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட படையினரின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு மாறாக வடக்கு நோக்கிய பயணம் மிகவும் இறுக்கமா னதாக உள்ளது. அங்கு செல்ல விரும்பும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அனுமதிகளைப் பெற்றுச் செல்ல வேண்டும் என்ற நிலைப்பாடு இன்னமும் தொடர்கிறது. கொழும்பிலிருந்து யாழ் நோக்கி இரவு நேரங்களில் பயணிக்கும் வாகனங்கள், திருத்தப்படாத ஏ-09 நெடுஞ் சாலையின் ஊடாகப் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளன.

சுந்தரம் மற்றும் விக்கிரமசிங்க போன்ற பலர் தமது வாழ்க்கையில் மீளப் பெற்றுக் கொள்ள முடியாத பல ஆண்டுகளை தொலைத்துவிட்ட நிலையில் சிறிதளவு நம்பிக்கையை மட்டும் கைவசம் வைத்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

‘எமது பிள்ளைகளாவது தமிழராகவோ அல்லது சிங்களவர்களாகவோ வாழாமல், இலங்கையர்களாக மட்டும் வாழ வழியேற்பட வேண்டும் என விரும்புகிறோம்’ என விக்கிரமசிங்க தனது எண்ணத்தை வெளிப்படுத்துகிறார்.

**மூலம்:** Inter Press Service
**மொழியாக்கம்: நித்தியபாரதி**

### ◄ நக்கல் நையாண்டிப் போடியார் ►

எப்புடி சுகமா இருக்கீங்களா...?

நான் கிட்டத்துல சாய்ந்தமருது ஜும்மாப் பள்ளிக்குப் பின்னால இரிக்கிற அகதி முகாமுக்கு போனன்டப்பா. இந்த ஊர்ல இப்படியும் சனங்க கஷ்டப்படுறத அப்பதான் நான் எண்ட ரெண்டு கண்ணாலயும் பாத்தன். சுனாமி அடிச்சி ஏழு வருசம் ஆகப்போகுது. ஆறு மாத்தைக்கி எண்டு குடுத்த கூடாரத்துல இப்பவும் சனங்க புழுங்கிக் கொண்டு இருக்குதுகள். ஆறும் பக்கத்துல இரிக்கி. இதால அங்க பாம்பு, புழு, பூச்சி களும் அந்தக் கூடாரத்துக்குள்ள வருகுது. மேல தகரம், வலச்சி பலகயும் அடிச்சி இருக்காங்க. அதுக்குள்ள ஒரே புழுக்கம். கொஞ்சம் நேரம்கூட என்னால இரிக்க ஏலாமப் போச்சி எண்டா பாருங்களேன்...!

அங்கத்து அரசியல்வாதிகளெல்லாம் அந்த நாத்தத்துக்குள்ளவோட்டுக் கேட்டு வந்தாங்களாம். வெண்ட பொறகு யாரும் எட்டிப் பாக்கல்லியாம். அப்ப அவங்களுக்கு மணத்த அந்த கூடாரங்கள் இப்ப நாறுது போலக் கெடக்கு! அசலூர் எம்.பி. ஒரு நாள்வந்து பார்த்துட்டுத்தான் ஒரு குடும்பத்துக்கு ஆயிரம் ரூபா காசி குடுத்தராம். கிட்டடியில பேஞ்ச கடும் மழயில அந்த குடில்ல அரவாசி கரஞ்சி ஒழுகிடுச்சி. மிச்சம் மீதியும் காத்துல பறக்கப் பாக்குது. அதயும் கயித்துல இழுத்துக் கட்டி அவங்க வெச்சிருக்காங்க. அதுவும் பறந்தா கொமரு, குட்டிகளின்ட மானமும் காத்துல பறந்து போயிடும் இல்லியா...? ஒரு நாளைக்காவது அகதியா இரிந்தா தெரியும் அவங்கட கஷ்டம்...!

மறுகாவும் வருவன்...!



## சமுதாயத்தின் மறுபக்கம்

## இப்படியும் நடக்கிறது...

### வெற்றுப்பத்திரத்தில் கையொப்பம் திரட்டு

அண்மையில் ஜீப் வண்டியில் வந்த ஒரு ஒப்பந்தக்காரர்கள் அட்டாளைச் சேனை முதலாம் பிரிவில் வசிக்கும் மக்களிடம் சென்று வெள்ளைநிற வெற்றுப் பத்திரத்தில் கையொப்பமிடும் படியும், அவ்வாறு கையொப்பமிட்டால் உங்களுடைய வீதி மற்றும் வடிகால் அடங்கிய அபிவிருத்தி வேலைகளை செய்துதருவோம் எனக்கூறி அப்பகுதி மக்களிடத்தில் வற்புறுத்தியதாகத் தெரிய வருகின்றது.

இச்செயலினைக் கண்டித்த அப்பகுதி மக்கள் அந்த ஒப்பந்தக்காரர்க் குழுவை எதிர்த்துப்பேசி விரட்டி விட்டதாகவும் தெரியவருகின்றது.

**(பொதுச் சொத்து எங்கள் சொத்து)**

### அப்பாவின் மண்டையை உடைத்த பேஸ்புக்

வலிகாமம் பகுதியிலுள்ள ஒரு பல்கலைக்கழக மாணவி பேஸ்புக்கில் தனது புகைப்படத்தையும் விலாசத்தையும் தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்து வெளிநாட்டிலுள்ள ஒருவனுடன் பழகியிருக்கிறார். அவன் தன்னைத் திருமணம் செய்யுமாறு இவளைக் கட்டாயப்படுத்தி வந்திருக்கின்றான்.

அயல் வீட்டுப் பையனின் நண்பனான இவன் அவனுடன் கதைத்து அந்த மாணவியுடன் பேசும்படியும் கூறியிக்கிறான். அவனும் அடிக்கடி வீதியில் மறித்து அவனைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்துவதைக் தட்டிக்கேட்ட தந்தைக்கு தலையில் கொட்டனால் அடித்துவிட்டான்.

**(பேஸ்புக் 'மண்டை புக்' ஆகிவிட்டதே...)**

### மாணவிகளின் 'சிம்' கார்ட்டுகள் உடைப்பு

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு தையல் பயிற்சி நிலையத்தில் மாணவிகள் பாடம் நடைபெறும் நேரத்தில் செல்போனில் அரட்டையடிப்பதும் பாட்டுக் கேட்பதுமென குதூகலித்து வந்திருக்கின்றனர்.

இதனால் கடுப்படைந்த அந்தக் கண்டிப்பான ஆசிரியை அம்மாணவிகளிடமிருந்து சுமார் 30 'சிம்' அட்டைகளை பறிமுதல்செய்து அவற்றை உடைத்தெறிந்துள்ளார்.

செல்போன் வாங்கிக்கொடுக்கும் பெற்றோர், மகள் அதனால் என்ன செய்கிறாள் என்று பார்க்காமல் இப்படி விடலாமா?

அத்துடன் அவ்வகுப்புக்கு பிந்திவந்த மாணவிகள் சிலர் ஆசிரியருக்குப் பயந்து மதில்லேறி வகுப்புக்குள் நுழையும்போது வசமாக மாட்டிக்கொண்டார்களாம்.

**(இதை எங்கு படித்தார்களோ...?)**

### யாரிடம்போய் தங்களை முறையிடுவது?

'நமக்கு எதிரி நமக்கு பக்கத்தில் தான் இருக்கிறார்கள்' என்ற வாக்கியம் மெய்யான விடயம் மாவிட்டபுரம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இப்பிரதேசத்தில் மீளக்குடியேறிய பொதுமக்களின் பல வீடுகள் சேதமாக்கப் பட்டுள்ளதோடு, சில வீடுகளின் கூரைத் தகடுகளும் யாருக்கும் தெரியாமல் களவாடப்பட்டுள்ளன.

இந்நிலையில் இராணுவத்தினரிடம் பொதுமக்கள் முறையிடச் சென்றபோது உடனிருந்த அப்பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் அன்பர் ஒருவர், 'உங்களை இங்கு மீளக்குடியமர விட்டதே பெரிய விடயம். ஆக சின்னச்சின்ன விடயங்களையெல்லாம் பெரிதுபடுத்த வேண்டாம்' என இவர்களை மிரட்டியுள்ளார்.

**(கவனம் எட்டப்பன் பரம்பரை...!)**

### விபச்சாரிகளைப் பிடிக்கும் 'வெள்ளை வான்'

யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டிப் பகுதியில் விபச்சாரத்தில் ஈடுபட்டுவந்த பெண் ஒருவரை அப்பகுதி மக்கள் அதிக நாட்களாக எச்சரித்து வந்துள்ளனர். இதனையும் கேட்காமல் ருசி கண்டிருந்தார் அப்பெண்மணி.

திடீரென அப்பகுதிக்கு வெள்ளை வானில் வந்த சிலர் அப்பெண்ணையும் அவளுடன் இருந்த சில 'கட்டிளமான' ஆண்களையும் துரத்தி துரத்திப் பிடித்துள்ளனர்.

அகப்பட்டவர்களை வானில் வந்தவர்கள் நையப்புடைத்ததுடன் சரியான முறையில் கவனித்தும் இருக்கின்றனர்.

தற்போது எழுச்சிபெற்றுவரும் யாழில் இவ்வாறான சம்பவங்கள் அனேகமான இடங்களில் நடைபெறுகின்றன.

**('வெள்ளை வான்' நல்லதும் செய்யும்)**

## இலாபத்தை மட்டும் தேடும் ஊடகங்கள்

*ஊடகங்கள் என்றாலே இப்போது ஏதோவொரு வெறுப்புணர்வு ஏற்படத்தான் செய்கின்றது. காரணம் அவற்றின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகள்தான். மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டியவை சுயலாபத்திற்காகவும் நீண்ட காலம் நின்று நிலைக்கவேண்டும் என்பதற்காகவும் தமது நடுநிலைமைகளை விற்றுவிட்டன என்றுதான் கூறவேண்டும்.*

*மேலும் இவற்றின் தொண்டுப்பணிகள் சேரவேண்டிய இடங்களுக்கும் நபர்களுக்கும் சென்றடைவதில்லை. அப்படியே சென்றடைந்தாலும் தம்மை விளம்பரப்படுத்துவதிலும் பகிரங்கப்படுத்துவதிலுமே குறியாக நிற்கின்றன. இன்று ஊடகங்களில் கல்விக்கான பகுதிகள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. இது மென்மேலும் ஊக்குவிக்கப்படவேண்டும்.*

*அது போலவே மருகிவருகின்ற கலைகளுக்கு அரங்கம் அமைத்துக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். இந்திய சினிமாவினது ஆதிக்கத்தைக் கொண்டு இலாபம் தேடும் நோக்கை விட்டு இலங்கையில் படைப்பாளிகளை உருவாக்கவும் அவர்களின் படைப்புக்களை மேலோங்கச் செய்யவும் அதன்பால் ரசனை யாளர்களை உருவாக்கவும் ஊடகங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுதல் வேண்டும்.*

**- கே. ஜீவா, கொழும்புப் பல்கலைக்கழகம்.**




'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

**'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்'**
**3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07,**
**மின்னஞ்சல்: irukiram@gmail.com**

## கவிஞர்களுக்கு வழிகாட்டும் 'கவி வசந்தம்'

அண்மையில் வசந்தம் எப். எம். இல் 'கவி வசந்தம்' நிகழ்ச்சியைக் கேட்டேன். பிரதி ஞாயிறு தோறும் இரவு 9 மணி தொடக்கம் 12 மணிவரை ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சி உண்மையில் வசந்தத்தில் ஒலிபரப்பப்படும் அத்தனை நிகழ்ச்சிகளுக்கும் முத்தாய்ப்பாய் அமைகின்றது.

கிட்டத்தட்ட ஒரு போட்டி நிகழ்ச்சியைப்போல கவிதைக்கான தலைப்பு வழங்கப்பட்டு மூன்று அல்லது நான்கு சுற்றுகளில் ஒவ்வொரு கவிதையையும் தெரிவுசெய்கின்றனர். கடைசியில் கவிஞர் மேமன்கவி தெரிவுசெய்யப்பட்ட கவிதைகளுக்கு தன்னுடைய கருத்தை வழங்குகின்றார்.

அத்துடன் எந்த கவிதையில் என்ன குறைகள் இருக்கின்றன, எந்த இடத்தில் எதனைச் சேர்க்கவேண்டும், எதற்காக இந்தக் கவிதை தெரிவு செய்யப்பட்டது என்று அவர் கூறுவது உண்மையில் வளர்ந்துவரும் கவிஞர்களுக்கு நல்லதோர் வழிகாட்டியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நான் அறிந்த வகையில் எனக்குத் தெரிந்து இந்த வானொலியில் மட்டும்தான் இவ்வாறான ஒரு நிகழ்ச்சி நடைபெறுகின்றது என்று நினைக்கின்றேன்.

**- மே.லக்ஷி, மருதானை.**

## 2 மணித்தியாலம் ஒன்றுமில்லை

*நாம் அன்றாடம் வானொலிகளை விரும்பியோ விரும்பாமலோ, கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றோம். ஏனென்றால் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ பல நல்ல விடயங்களை தர முயற்சிக்கிறார்கள். இதனை வரவேற்காமல் இருக்க முடியாது. ஆனால் சில தனியார் வானொலிகளில் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அதன் தரத்தை குறைக்கும் வகையில் சில அறிவிப்பாளர்கள் நடந்து கொள்வது தான் வேதனைக்குரியது.*

*தன்னை முதற்தரம் எனச் சொல்லிக்கொள்ளும் ஒரு தனியார் வானொலியில் கிழமை நாட்களில் மாலை 3 மணிமுதல் 5 மணிவரை ஒலிபரப்பாகும் தகவல்களையும் உலக விடயங்களையும் தரும் நிகழ்ச்சி இம்மாத நடுப்பகுதியில் ஒரு நாள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. நிகழ்ச்சி ஆரம்பித்து 10ஆவது நிமிடத்தில் தகவல் என்ற பெயரில் எதையோ ஒன்றைக் கூறினார். அதன் பிறகு 35வது நிமிடத்தில் அன்றைய தினசரிப் பத்திரிகையில் வெளிவந்திருந்த ஒரு தகவலை ஏதோ தான் தேடி எடுத்ததுபோல கூறினார். பின் 4.10 மணியளவில் தேவையில்லாத தமிழ் சினிமாத் தகவல்கள் சிலவற்றைக் கூறினார். அதன்பிறகு 4.45 மணிஎளவில் மற்றுமொரு தகவல்.*




*ஆக இரண்டு மணித்தியாலமாக அவர் கூறியது நான்கு தகவல்களை மட்டுமே. அதிலும் ஒன்று பத்திரிகையில் வெளிவந்தது. மற்றொன்று சினிமா. மேலதிகமாக இரண்டு தகவல்களுக்காக இரண்டு மணித்தியால நிகழ்ச்சி தேவையா? உண்மையில் நான் தனியார் வானொலிகளுக்கு எதிரானவன் அல்ல. நேயர்களை முட்டாள்கள் என்று நினைக்க வேண்டாம் என்று கூறுகின்றேன். குறித்த அந்த அறிவிப்பாளர்நினைத்திருந்தால்கோடிக் கணக்கான தகவல்கள் கொட்டிக் கிடக்கும் இணையத்தளத்தில் எவ்வளவோ தேடியிருக்கலாம்.*

*இனியாவது தனது நிலையை அறிந்து செயற்படுவார்களா தனியார் வானொலிக்காரர்கள்...?*

**- க.கண்ணன், கிராண்ட்பாஸ்.**

# வாசகர் கடிதம்




கடந்த 'இருக்கிறம்' பார்த்தேன். 'மிஸ்டர் க்றோ'வின் வித்தியாச மான பார்வை விறுவிறுப்பு. ஊர் சுற்றி தகவல், ஸ்பெஷல் ரிப்போர்ட், விருந்தினர் பக்கம், புலன் விசாரணை, க்ரைம் ரிப்போர்ட் என்று குறிப்பட்ட தலைப்புகளில் வாரா வாரம் பல கோணங்களில் பல விடயங்களை ஆய்வு செய்கின்றீர்கள். உண்மையிலேயே பாராட்டு கிறோம். இன்னும் சில இலக்கிய விடயங்கள், மாணவர் பக்கம், கேள்வி பதில், செம்மையான சினி விடயங்கள், ஆன்மீகம் என்பவற்றை சேர்த்துக்கொள்வது சிறந்தது.

**- மடுல்சீமை மைந்தன்.**

கடந்த 30.5.2011 அன்று வெளிவந்த 'இருக்கிறம்' பார்த்தேன். அசத்திவிட்டீர்கள். இருப்பில் ஒவ்வொருமுறையும் வெளிவரும் படம் கருத்தையும் சிந்தனையையும் தூண்டு வதாகவுள்ளது. முன்னாள் பெண் போராளியினுடைய தற்கொலை பற்றிய உண்மையை வெளிப்படுத்தியிருந்தீர்கள். இணையத்தளங்களில் இதனை செய்தியாக வேறுவிதமாக எழுதியிருந்தார்கள். உரிய இடத்துக்குச் சென்று உண்மையை துணிச்சலுடன் வெளிப்படுத்தியமைக்கு நன்றி.

'இருக்கிறமிற்காக என்றும் காத்திருப்போம்...!'

**- மா. மேகவர்ணன், யாழ்ப்பாணம்.**



தற்பொழுது புனர்வாழ்வு பெற்றுவரும் நான் திருகோணமலையைச் சேர்ந்தவன். நான் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பூசா தடுப்புக் காவலில் இருக்கும் போது 'இருக்கிறம்' சஞ்சி கையை தொடராகப் படித்து வந்தேன்.

ஆனந்த விகடன், குமுதம் போன்ற இந்திய குப்பைகளைப் பார்த்து நேரத்தைப் போக்குவதை விட நாலு நல்ல விடயங்களை அறிவது என்பதுடன் எம் சுயத்தை அறிந்து கொள்ளலாம் என்ற ஆசையில் 'இருக்கிறம்' படிப்பது எனக்கு விருப்பம்.

இங்கு வந்த பின்னர் அது இல்லாமல் போய் விட்டது. திருகோணமலையிலும் இருக்கிறம் விற்பனையில் இல்லையாம். ஆகவே எனக்கு தொடர்ந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் என்ன செய்யவேண்டும் என்று கூறுவீர்களா?

'இருக்கிறம்' சஞ்சிகைக்கு ஆக்கம் எழுத எனக்கு ஆசை. எனவே எனக்குத் தொடராக சஞ்சிகையைக் கிடைக்க வழி செய்து தந்தால் நானும் ஆக்கம் எழுதி அனுப்ப முடியும். எனவே என் வேண்டுகோளை செவிசாய்த்து எனக்குப் பதில் அனுப்பவும். என் விருப்பத்தினை பூர்த்தி செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

**- பரமகுரு வித்யாசாகர், நவநேனபுர புனர்வாழ்வு நிலையம், பொலநறுவை.**

*எ ம்*
*மண் வாசம் சுமந்து வந்த சஞ்சிகையின் இடை நிறுத்தம் நெஞ்சின் ஓரங்களில் ஓர் இனம் புரியாத வேதனையை உண்டாக்கியது. எவ்விதமான அறிவித்தலுமின்றி 'இருக்கிறம்' சஞ்சிகையின் வருகை தாமதமானது. ஆக்கம் எழுதிக் காத்துக் கிடந்த வாசகன் போல் ஒவ்வொரு வாரமும் கடைவாசல் நுழைந்து ஏமாற்றங்களோடு வெளியேறுவேன். இடைநின்ற பிரசுரம் தொடர்ந்து வரும் வாரங்களிலாவது வெ ளி வ ரு மெ ன*
*காத்துக்கிடந்த எனக்கு கடந்த சில வாரங்களாக ஆறுதல் அளித்துள்ளீர்கள். வீரகேசரியின் கீழ் பிரசுர நெறியாக்கம் வந்ததையிட்டும் சஞ்சி கையின் வருகை ஸ்திரத் தன்மையின் புலப்பாடு தொடர்பாகவும் நிறைவான நம்பிக்கை, மகிழ்ச்சி. ஆசிரியர் குழாமிற்கு நன்றி.*

**- அப்புக்குட்டி, ஆரையம்பதி-கிழக்கு.**



*உங்கள் சஞ்சிகையில் 23.05.2011 அன்று வெளியான க்ரைம் ரிப்போர்ட் வாசித்தேன். 'கொலையில் முடிந்த திருமண விளம்பரம்' சற்றுச் சிந்திக்க வைத்தது. அத்துடன் சென்ற வாரம் பிரசுரமாகியிருந்த 'முகப்புத்தகம்' குறும்பட விமர்சனம் வாசித்தேன். மிகவும் சிறப்பாக இருந்தது.*

*நெருங்கிய நண்பர் மூலம் எனக்கும் அந்த குறும்படத்தைப் பார்ப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. காலம் மாறிவிட்டது. இப்போது நாங்கள் நவீன யுகத்தில் இருக்கின்றோம். பார்க்காமலேயே Facebook இல் Chat பண்ணுவோம். யார் என்று அறியாமலேயே Skype இல் கதைப்போம். Twitter இல் Photos பரிமாறுவோம் என மூர்க்கத்தனமாக சுற்றுபவர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும். நாம் ஆராய்ந்து பார்க்காமல் செய்யும் சில விடயங்கள் நம் உயிருக்கே ஆபத்தாகிவிடும் எனத் தெரிந்து கொள்ளட்டும்.*

**- கிறிஸ்டீனா, வெல்லம்பிட்டிய.**

'இருக்கிறம்' குழுவிற்கு வணக்கம்,

கடந்த திங்கள் 'இருக்கிறம்' இதழில் இடம் பெற்ற 'ஆசனப் பதிவுகளால் திண்டாடும் கொழும்பு-யாழ். பஸ் பயணிகள்', 'யுத்த நிலங்களை பசுமை நிலங்களாக மாற்றும் படையினரின் மரக்கறிப் பயிர்ச்செய்கைத்திட்டம்', 'வருடக்கணக்காக சிறை யில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை எப்போது', 'வறுமையால் தற்கொலையை நாடிய முன்னாள் பெண் போராளி' ஆகிய கட்டுரைகள் சிறப்பாக இருந்தன. இவற்றின் மூலம் எனக்கு நிறைய விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது.

**- ஜேறோம் - மட்டக்குளி.**

(24 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## சாமியாரிடம்...

சிறுமியின் குடும்பம் மிகவும் ஏழ்மை யானது. அதனைப் பயன்படுத்திக்கொண்ட சுராஜ் அக்குடும்பத்துக்கு பல உதவிகளை செய்து அச்சிறுமியின் தாயின் மனதை வென்றான். அதனூடாக அச்சிறுமியுடன் கதைப்பதற்கும் பழகுவதற் கும் அனுமதியைப் பெற்றுக் கொண்ட அவன் ஒருநாள் அச்சிறுமியை வெளியில் அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி ஒரு குழந்தையையும் கொடுத்து விட்டான். இப்போது அக் குழந்தையையும் தாயையும் ஒரு ஆசிரமத்தில் ஒப்படைத் துள்ளதாகவும் இவ்வாறு பல யுவதிகளின் வாழ்க்கையை பாழாக்கியுள்ளான் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



ஜயலத் தசநாயக

இதேபோல் 18 வயதிற்குக் குறைந்த ஒரு தமிழ் யுவதியை திருமணம் முடிப்பதாகக் கூறி தனது வீட்டில் கொண்டு வந்து சுமார் பத்து நாட்கள் வைத்து தனது ஆசைகளைத் தீர்த்துவிட்டு விரட்டியடித்துள்ளான். தனது அழகிய தோற்றத்தை வைத்து பல யுவதிகளின் வாழ்வை நாசமாக்கியுள்ள அந்தக் கயவனை நீதியின் முன்நிறுத்திய மாவத்தகம பொலிஸார் அவனைப் பற்றிய விசாரணையை மேலும் முன்னெடுத்து வருகின்றனர்.

சுராஜின் அன்பான அழைப்பை ஏற்று தனக்கு ஒரு வாழ்க்கை கிடைக்கும் என்று நம்பி வந்த பிரியானி அங்கு தன் கணவனால் தான் கனவிலும் எதிர்பார்க்காத அளவு துன்பங்களை அனுபவித்து வந்துள்ளாள். சுராஜ் போன்ற ஒரு கணவனையும் அவ்வாறான ஓர் மகனுக்கு உதவும் பெற் றோரையும் பார்த்து காவல் துறையே மூக்கின் மீது விரலை வைக்கின்றனர். பிள்ளைகளின் வளர்ச்சியிலும் வெற்றியி லும் துணை நிற்கும் பெற்றோரைப் பற்றியே நாம் அறிந்திருக்கிறோம். அவ்வாறான கண்ணியமான பெற்றோர் மத்தியில் இவ்வா றான ஈனத்தனமான பெற் றோர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இவர்க ளுக்கு வழங்கும் தண்ட னை இனிமேல் பெண்களை ஏமாற்றவும் துன்புறுத்தவும் நினைப்பவர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்.

அண்மையில் ஈரானில் தன் காதலியின் முகத்தில் அசிட் ஊற்றி துன்புறுத்திய காதலனுக்கு நீதிமன்றம் அதேபோல் அவனது முகத்தையும் அசிட் ஊற்றி சிதைப்பதற்கு அப்பெண்ணுக்கு சந்தர்ப்பம் வழங்கியதைப் பற்றி செய்திகளில் வாசித்திருப்பீர்கள். அதேபோல் நம் நாட்டு சட்டங்களும் கடுமையாக்கப்பட வேண்டும். குற்றம் செய்யும்போது தண்டனையை நினைத்து நடுங்கும் அளவுக்கு அவர்களுக்கு வழங்கும் தண்டனையும் அமையவேண்டும்.

## அவைகளுக்கு அப்படி

*சிலையிருக்கும் இடம்*
*பூசகர் பார்வைக்கு*
*கருவறை*
*பல்லிகள் கூட்டத்திற்கு*
*அது துயிலறை*

*நீ சொல்கிறாய்*
*நீரருந்தும் கிணறு என்று*
*புரிந்து கொள்*
*தவளைகளுக்கு*
*மலசலகூடமும் அதுதான்*

*முத்துப் பற்களென*
*கத்தித் திரியாதே*
*எத்தனை பூச்சிகளுக்கு*
*இருப்பிடம் அது*

*கார்குழல் என*
*கவிதை எழுகின்றாய்*
*கறுப்பு பேன்களோ - தம்*
*உத்தியோகபூர்வ*
*இல்லமென*
*உரைக்கின்றனவே*

*உன்வயிறு என்கிறாய்*
*உன்னிடம் கேட்காமலேயே*
*ஓராயிரம் கிருமிகள் அங்கு*
*குடும்பம் நடத்துகின்றன.*

*மனிதா மனிதா*
*தயிரும் கள்ளும்*
*பற்றீரியாக்கள் சுவைத்து*
*பதப்படுத்தி தருபவை*
*அவையுண்ட மீதியது.*

*எமக்குத்தான் இப்படி*
*அவைக்கோ அப்படி...*



- யோ. புரட்சி, வள்ளுவர்புரம்



# சாமியாரிடம் வாழ்க்கையை பறிகொடுத்த அபலைப் பெண்

மெல்சிரிபுர பிரதேசத்தில் வசித்து வந்த பிரியானி என்ற இருபத்து இரண்டு வயது நிரம்பிய இளம் யுவதிக்கு பெரியதோர் அறிவுப் பின்னணி இல்லாத போதிலும் யாவரையும் கவர்ந்திழுக்கும் அழகை இறைவன் வாரி வழங்கியிருந்தான். அந்த அழகினைப் பயன்படுத்திக்கொண்டு, தான் வாழ ஒரு வழியையும் தெரிவுசெய்துகொண்டாள். பிரியானி தொழில் புரிந்த நிறுவனத்துக்கு அடிக்கடி மாவத்தகம கெட்டிவானா பிரதேசத்தில் வசிக்கும் சுராஜ் என்பவன் வந்துபோவான். இதன்போது இருவருக்குமிடையில் அறிமுகம் ஏற்படவே நாளடைவில் சுராஜ் தன்னுடன் வந்து வாழுமாறு பிரியானியை அழைத்தான். கஷ்டப்பட்டு வேண்டாவெறுப்பாக தொழில் செய்து கொண்டிருந்த பிரியானிக்கு தான் பட்ட கஷ்டங்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டதைப் போன்ற ஒரு உணர்வு ஏற்பட, தன்னைப் பாது காக்க வந்த கடவுளாகவே அவள் சுராஜை நினைத்து அவனுடன் கைகோர்த்துக்கொண்டாள்.

மெல்சிரிபுரயிலிருந்து கெட்டுவானா பிரதேசத்திற்கு வந்த பிரியானி சுராஜின் வீட்டில் ஒரு தேவாலயம் இருப்பதைக் கண்டு திகைத்தாள். பின் அந்த தேவாலயத்தில் ஆராதனை செய்வதும் சாஸ்திரம் பார்ப்பதுமே சுராஜின் ஜீவனோபாய மார்க்கம் என்பதை பிரியானி புரிந்துகொண்டாள்.

சுராஜிற்கு அவனது தாயும் தந்தையும் ஒரு சகோதரனும் தேவாலய வேலைகளுக்கு உதவியாக இருந்தனர். தான் நினைத்ததைப் போல சுராஜ் நல்லவன் இல்லை என்பதை சில தினங்களிலேயே பிரியானி புரிந்துகொண்டாள். சுராஜின் அத்தனை இழி செயல்களுக்கும் அவனது பெற்றோரும் சகோதரனும் துணைநின்றனர்.

இறைவனின் ஆசிர்வாதத்தைத் தேடி வருகின்ற யுவதிகளை தன் வலையில் சிக்க வைப்பதே சுராஜின் தேவாலயத்தில் நடக்கும் பிரதான வேலையாக இருந்தது. சுராஜிற்கு ஒரு யுவதியைப் பிடித்துவிட்டால் அவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பெற்றோரிடம் தனது மகனுக்காக யுவதிகளை சம்பந்தம் பேசுமளவிற்கு இருந்தனர் இந்த அதிசய பெற்றோர். எல்லாம் சுராஜின் தற்காலிக இன்பத்திற்காகவே.


பிரியானியின் உடலில் காணப்பட்ட சூட்டுக் காயங்கள்

தனது வேலை முடிந்தவுடன் சுராஜ் அவர்களின் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டான். சுராஜ் பிரியானியுடன் வாழத்தொடங்கிய சில நாட்களிலேயே தன் லொறிக்கு பினான்ஸ் கட்ட வேண்டும் என்பதற்காக தன் மனைவியை எந்தவொரு கணவனும் செய்விக்காத தொழிலைச் செய்யவைத்தான். அப்பணத்தை தேடிக்கொள்வதற்காக தன்னுடன் தம்புள்ளைக்கு வருமாறும் அழைத்தான். அன்றைய தினம் தன் தேவைக்கு அதிகமாகவே அவன் அவளூடாக சம்பாதித்துக்கொண்டான்.

சுராஜின் செயற்பாட்டால் பிரியானி பெரிதும் உடைந்து போனாள். மெல்சிரிபுரயில் தான் கழித்த வாழ்க்கைக்கும் இப்போது சுராஜுடன் கழிக்கும் வாழ்க்கைக்கும் பெரிய வேறுபாடு இல்லை என்பதை அவள் உணர்ந்தாள். அதற்கிடையில் பிரியானி கருவுற்று ஓர் ஆண் குழந்தையையும் பெற்றெடுத்திருந்தாள். குழந்தை பிறந்ததைத் தொடர்ந்தாவது சுராஜ் திருந்தி விடுவான் என்று எண்ணியவளுக்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது. தனக்கு பணம் தேவைப்படும் பொழுதெல்லாம் பிரியானியை வைத்து நன்றாகவே சம்பாதித்துக்கொண்டான். இவனது இந்த இழிசெயலால் மானசீகமாக பாதிக்கப்பட்ட பிரியானி குழந்தையைத் தூக்கிக் கொண்டு யாருக்கும் தெரியாமல் தப்பியோடினாள்.

இதனை சற்றும் எதிர்பார்க்காத சுராஜ் அவளைத் தேடி வலைவிரித்தான். அப்போது குருநாகல் பிரதேசத்தில் அவள் இருப்பதாக அறிந்த சுராஜ் அங்கு சென்று தன் பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்று அவளை பலவந்தமாக முச்சக்கர வண்டியொன்றில் ஏற்றிச் சென்றான். அன்று முதல் அவளுக்கு கெட்ட காலம் தொடங்கி விட்டது. வீட்டுக்குக் கூட்டிச்சென்ற அவன் ஒரு அறையில் பூட்டி வைத்து கை, கால்களுக்கு விலங்கிட்டு தாறுமாறாக தாக்கினான். அவளுக்கு கத்துவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

இவ்வேளையில் இத்தகவல் அக்கம்பக்கத்தாரினூடாக மாவத்தகம பொலிஸாருக்குக் கசிந்தது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அப்பெண்ணை மீட்டெடுத்ததுடன் சுராஜ் மற்றும் அவனது இச்செயலுக்கு உடந்தையாக இருந்த தாய், தந்தை, தம்பியையும் கைது செய்தனர்.

◀ மனோலி சுபசிங்க ▶
◀ நாகாமத்தான் ▶

பொலிஸார் அப்பெண்ணை மீட்டெடுக்கும்போது, ஒரு மனிதன் இவ்வாறான கொடுமைகளை இன்னொரு மனிதனுக்கு செய்வானா என யோசிக்கும் அளவுக்கு அவளைக் கொடுமைப்படுத்தியிருந்தான். இரும்புக் கம்பியைச் சூடாக்கி அவளது உடல் முழுவதும் சூடு போட்டிருந்தான். சிகரெட்டினால் சுட்டிருந்தான். அவளது நீளமான கூந்தலைக் கொஞ்சம்கூட ஈவு இரக்கமற்று சுராஜின் சகோதரன் வெட்டியிருந்தான். பிரியானியின் முகம் விகாரமாக வீங்கிக் காணப்பட்டது.

இது தொடர்பாக மாவத்தகம பொலிஸ் மா அதிபர் ஜயலத்திடம் கேட்டபோது


பிரியானி

'நாங்கள் செல்லும்போது பிரியானியின் குழந்தை சுராஜின் தாயின் கையில் இருந்தது. அவள் அக்குழந்தையை நிலத்தில் தூக்கி அடிக்க எத்தணித்துக் கொண்டிருந்தாள். அதனைக் கண்ட எமது இன்ஸ்பெக்டர் அக்குழந்தையைப் பாய்ந்து பிடித்து காப்பாற்றிவிட்டார். இல்லாவிட்டால் ஏதாவது விபரீதம் ஏற்பட்டிருக்கும். அத்தோடு அவனுடன் சேர்ந்து அவனது குடும்பத்தவர்கள் பிரியானியை சிறிதும் கருணையின்றி கொடூரமாக கொடுமைப் படுத்தியிருந்தார்கள்' எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து குருநாகல் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லால் குணவர்த்தனவின் ஆலோசனையின் பேரில் மாவத்தகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் என்.டி.எஸ்.ஜயலத், குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் பொலிஸ் பரிசோதகர் தசநாயக, பொலிஸ் பரிசோதகர் குணரத்ன, உபபொலிஸ் பரிசோதகர் அமரதுங்க மற்றும் பெண் பொலிஸ் அதிகாரி கயானி ஆகியோர் அடங்கிய குழுவினர் அவனைப் பற்றிய விசாரணையில் தீவிரமானார்கள். அவ்விசாரணையில் சுராஜின் பல முன்னைய குற்றங்கள் வெளிவர ஆரம்பித்தன. சுராஜ் அதிகமான இளம்யுவதிகளை இவ்வாறு ஏமாற்றியது மட்டுமல்லாமல் துன்புறுத்தியும் உள்ளான்.

## பல பெண்களின் வாழ்க்கையில் விளையாடிய மெல்சிரிபுர சாமியார்

ஒரு தடவை கஹபன்னலை பிரதேசத்தில் ஒரு 12 வயது நிரம்பிய சிறுமி தனது பாட்டியுடன் சந்தைக்குச் சென்றதைக் கண்ட சுராஜ் அவளது வீட்டைத் தேடிப்பிடித்து தன் தாயுடன் சென்று திருமணப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டான். அச்சிறுமியின் தாய் தனது மகள் சிறுமியாக இருப்பதாலும் மேலும் அவள் படிக்க வேண்டும் என்பதாலும் பிறகு திருமணத்தை வைத்துக்கொள்ளலாம் எனக் கூறி சுராஜிற்கு விருப்பம் தெரிவித்தார்.

(23 ஆம் பக்கம் பார்க்க...)


சித்திரவதை செய்யப்பட்ட அறை

இச்சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேற் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.